# சமாதான நோக்கு

மலர் 10 இதழ் 01
மார்ச் - ஏப்ரல் 2013
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்









## இலங்கையின் நாளைய தினத்திற்கு
# ஜெனீவா மாநாட்டின் தாக்கம்

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து • எஸ்.ஜீ. புஞ்சிஹேவா • பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன • ஹரீம் பீரிஸ் • எம்.ஏ. சுமந்திரன் • நிமல்கா பர்னாந்து • ஹரி நாராயன் • சுனந்த தேசப்பிரிய • ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ • எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க • கானல் ஹரிஹரன் • கிஷாலி பிந்து ஜயவர்தன • லக்ஷ்மன் கிரியெல்ல
டெஸ்மன் டுடு • மேரி ரொபின்சன் • அமைச்சர் சம்பிக்க ரணவக்க • உதய கம்மன்பில • அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் • சம்பத் புஷ்பகுமார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நோக்கு

ISSN 955-1800-0061

மலர் 10 இதழ் 01 மார்ச் - ஏப்ரல் 2013

தொலைபேசி 94-1-2370801/4 தொலைநகல் 94-1-2370802 ஈமெய்ல் cpa@sri.lanka.net இணையத்தளம் www.cpalanka.org

## இக் கணப்பொழுது

நாம் வாழும் இலங்கை என்ற தீவை மீளக் கட்டியெழுப்பும் அபாய வாய்ப்புக் கொண்ட, பாரிய சமூகச் சவால்களை எதிர்நோக்கியிருக்கின்றோம். அண்மையில் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஜெனீவா சமவாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தனது அரசு கடப்பாடு கொண்டிருக்கவில்லை என பாராளுமன்றத்தில் திட்டவட்டமாகப் பிரகடனப்படுத்தினார். அதே சமயம், மனித உரிமைகளைப் பாதுகாப்பது - வகைப்பொறுப்புக் கூறுவது என்ற விடயங்களில் இலங்கை ஏனைய நாடுகளை விட பௌத்த நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கும் தேசமாகவே செயற்படுகின்றது என்றும் குறிப்பிட்டார். நாம் மனித உரிமைகளை பேணிப் பாதுகாக்கின்றோம் என ஐக்கிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதி கலாநிதி பாலித்த கொஹூன சூளுரைத்தார். இலங்கை அரசு, வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் இன்று ஒரு தீர்க்கமான கட்டத்தை எதிர்நோக்கியுள்ளது என்பதை மேற்படி இரண்டு பிரகடனங்கள் மூலமும் புரிந்துகொள்ள முடியும். இன்றைய நிலைமை மேற்கு நாடுகளின் ஒரு சதி எனக் கூறி உள்நாட்டில் சில மதகுருமாரையும் பல்வேறு குழுக்களையும் தூண்டி, அவர்களை தெருக்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்தி, இச்சவாலை எதிர்கொள்ள முடியாது. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் பின்னணியையும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர்கள் உட்பட அறிஞர் குழாம் மேற்படிப் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. போர் இடம்பெற்ற காலகட்டத்தில் சகல விதமான ஒடுக்குமுறைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் முகங்கொடுத்த பல இனங்களைச் சார்ந்த பொதுமக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்பதே இப்பரிந்துரைகளின் சாராம்சமாகும். ஆனால், அரசே நியமித்த ஆணைக்குழு மூலம் பெறப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலிருந்து அரசு தன்னைத் தவிர்த்துக்கொள்வதற்கான முயற்சியையிட்டு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஓர் சதி என சுட்டிக்காட்டுவது எதுவித அடிப்படையும் இல்லாத ஒரு கூற்றாகும்.

வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள், ஆடைத்தொழில் என்ற வகையில் சர்வதேச ரீதியாக பல உடன்படிக்கைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அடிபணிந்துள்ள ஒரு நாடு என்ற வகையில், இலங்கை அரசு கைச்சாத்திட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட உடன்பாடுகளை மீறுவது ஒழுக்க நெறிமுறைகளை மீறுவதாகும். இவ்வாறு செய்வதற்கு இலங்கை அரசுக்கு சட்ட ரீதியான உரிமை கிடையாது. இச்செயற்பாட்டின் இறுதியில் அமெரிக்கா, உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் முன்வைக்கும் சகல நிபந்தனைகளுக்கும் இலங்கை அடிபணிந்தேயாக வேண்டும். அதற்கமைய பல நலன்புரி கருத்திட்டங்களை கைவிட நேரிடும். சுகாதாரம், கல்வி ஆகிய பல துறைகளையும் இது பாதிக்கும். எனவே, அரசாங்கத்துடன் இணைந்துள்ள இனவாதப் போக்குடைய சக்திகளை மகிழ்விப்பதற்காக உண்மையான பிரச்சினையை மறந்து, அடிப்படைவாதக் குழுக்களை தூண்டுவதைத் தவிர்த்து நல்லாட்சிக்காகவும் சக வாழ்விற்காகவும் நீடித்து நிலைத்த அபிவிருத்திக்காகவும் அரசு தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

**ஆலோசகர்: லயனல் குருகே**

**பதிப்பாசிரியர்: எஸ்.சிவகுருநாதன், பக்க வடிவமைப்பு: சுகந்தி மணிமாறன்,**

**அச்சாக்கம் : க்ளோப் ப்ரின்டிங் வேர்க்ஸ் 0777–315971**


"சமாதான நோக்கு" என்பது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதானமும் மோதல் ஆய்வும் பற்றிய பிரிவினதும் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினதும் பிரசுரமாகும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் என்பன மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

"சமாதான நோக்கு" சஞ்சிகை, இலங்கையின் மோதலை தீர்ப்பதற்கு ஏதுவான பிரச்சினைகளையிட்டு, எமக்கும் பொதுமக்களுக்கும் இடையே இடையீட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு மார்க்கமாக சமாதான நோக்கு பயன்படுகிறது. இச்சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதோ அல்லது அதன் பணிப்பாளர் சபையினதோ கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்க.

தொடர்புகளுக்கு : "சமாதான நோக்கு"
24/2, 28வது ஒழுங்கை, ∴ப்ளவர் வீதி, கொழும்பு-7
தொலைபேசி : 011 2565304-6, தொலைநகல் : 011 4714460
மின் அஞ்சல் : cpa@cpalanka.org இணைய தளம் : www.cpalanka.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்



ஜெனீவாவும் அதற்குப் பின்னரும்
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து 3

இலங்கை நேர்மையற்ற அரசாக மாறுவதற்கு வகைப் பொறுப்புக்கூற வேண்டியது யார்?
சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா 7

இலங்கையைப் பற்றி அடுத்த ஆண்டில் உலகம் எதைக் கற்றுக்கொள்ளப் போகின்றது? 11

தொடர்ந்தும் இவ்வாறு போக முடியாது
பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன 14

ஜெனீவாவும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல்
ஹரீம் பீரிஸ் 17

ஜெனீவா 2013 இலும் அதற்கு அப்பாலும்: அவசரச் செயற்பாடுகளுக்காகக் குரல் கொடுத்தல்
எம்.ஏ. சுமந்திரன் 20

சிவில் அமைப்புகள் LLRC நடைமுறைப்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்
நிமல்கா பர்னாந்து 22

இலங்கையுடன் இணைந்து கருமமாற்றுதல், முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு சிறந்த மார்க்கமாகம்
ஹரி நாராயணன் 27

ஜெனீவா பிரேரணை : தமிழர்களின் சவால்
சுனந்த தேசப்பிரிய 30

ஜெனீவா பேரவையை முகாமை செய்யத் தவறியுள்ளோம் எனக் குற்றம் சுமத்துபவர்கள் அன்று யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் நாட்டைக் காட்டிக் கொடுத்தார்கள்
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 33

வட மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடாத்த வேண்டும்
எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 36

அமெரிக்க பிரேரணை "ராஜபக்ஷ தனது வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்வதற்கு கூடிய நேரத்தை வழங்குவதாகும்."
கர்னல் ஹரிஹரன் 41

உலக நாடுகள் மத்தியில் ஓரங்கட்டலை நோக்கி : பழைய மியன்மாரின் பாணி
கிஷாலி பிந்து ஜயவர்தன 44

செயற்படாமை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்
லக்ஷ்மன் கிரியெல்ல 47

எதிர்பார்ப்புக்களும் நல்லிணக்கமும் : இலங்கை மோதல்களின் காயங்களைக் குணப்படுத்தல்
டெஸ்மண்ட் டுடு மற்றும் ரொபின்சன் 52

அரசாங்கத்திற்கெதிராக அங்கீகரிக்கப்பட்ட ஜெனீவாப் பிரேரணை தொடர்பாக பேச்சுவார்த்தைக்குச் செல்வதா?
எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 54

பிரேரணையை ஏற்க மாட்டோம் : பேச்சுவார்த்தை நடத்தவும் மாட்டோம்
அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் 55

மனித உரிமைகள் ஆணைக்குழு – 22 வது நிகழ்ச்சி நிரலின் ஐக்கிய நாடுகளின் பொறுப்பான ஆணையாளரின் ஆண்டறிக்கையும் மேற்படி அலுவலகத்தினதும் செயலாளர் நாயகத்தினதும் அறிக்கைகள் 56


ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடரில் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க அவர்கள் ஆற்றிய உரை 58


எம்மை விசாரணை செய்ய முன்னர் காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதை விசாரிக்கவும் ஜாதிக்க ஹெல உறுமய 61

2012 எல்.எல்.ஆர்.சீ. அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பான பிரஜைகள் கலந்துரையாடல் 63

இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் என்பவற்றுக்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கடிதம் 70

ஜெனீவா 2012 லிருந்து 2013 வரை
சம்பத் புஷ்பகுமார 73







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo Source : www.cnn.com

# ஜெனீவாவும் அதற்குப் பின்னரும்

**இந்தியா, ஜப்பான், தென்கொரியா, மலேசியா, சியாராலியோன், பொட்ஸ்சுவானா, பிரேசில் மற்றும் ஆர்ஜென்டீனா போன்ற பலநாடுகள் அமெரிக்காவின் பிரேரணைக்கு ஒன்றில் ஆதரவாக வாக்களித்துள்ளன அல்லது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. வாக்குப் பிரயோகத்தின் இப்போக்கின்மூலம் தமக்கு எதிராக மேற்கு நாடுகளில் ஒரு சதி இடம்பெறுகின்றது என இலங்கை அரசாங்கம் முன்வைத்த தர்க்கம் தகர்த்தெறியப்பட்டதோடு, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய தோல்வியையும் உறுதி செய்துள்ளது.**



**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 2013 மார்ச் பிரேரணை இதே வகையைச் சார்ந்த இரண்டாவது பிரேரணையாகும். இரண்டாவது பிரேரணை முதலாவது பிரேரணையை விட கடுமையான மொழியில் வரையப்பட்டுள்ளதோடு அதன் உள்ளடக்கமும் முதலாவது பிரேரணையைவிடக் கடினமான வடிவத்தை எடுத்துள்ளது. இதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு தெளிவான செய்தி சொல்லப்படுகின்றது. 2012 மார்ச் மாதத்தில் கூடிய மனித உரிமைகளுக்கான பேரவையின் முதலாவது பிரேரணைக்கு அமைய, பூர்த்தி செய்ய வேண்டிய பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இருந்தன. அதற்கமைய, கடந்த ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்களின் பயணப்பாதை பிரேரணைக்கு அமைய இடம்பெறவில்லை. நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் எல்எல்ஆர்சீ பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம், திருப்திகரமாக அமையவில்லை என்பதும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. சிலவேளைகளில் நல்லிணக்கம் உடனடியாக ஏற்படுத்த முடியாதுவிடினும், நல்லிணக்கம் பற்றிய முன்னேற்றம், அதன் பயணப்பாதை என்பவை மீது நம்பிக்கை வைக்க முடியாதுள்ளமை பற்றி இப்பிரேரணை மறைமுகமாக சுட்டிக் காட்டுகின்றது. பலம்பொருந்திய அமெரிக்க அரசுக்கு தமது நிலைப்பாட்டை உறுதியாக எடுத்துக் கூறுவதில் இலங்கை அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது. இதன் பெறுபேறாக இந்தியா, ஜப்பான், தென்கொரியா, மலேசியா, சியாராலியோன், பொட்ஸ்சுவானா, பிரேசில் மற்றும் ஆர்ஜென்டீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிலர் எதிர்பார்ப்பதைப் போல இப்பிரேரணை மிகக் கடுமையானதாக அமையாவிடினும், மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் நிரந்தரமாகவே இலங்கை இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் எதிர்காலத்தில் மிகவும் கடுமையான பிரேரணை முன்வருவதற்கான சாத்தியக் கூறுகளையும் உருவாக்கியுள்ளது. பேரவையின் உறுப்புநாடுகளைத் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் ஒரு முன்னேற்றத்தைக் காட்ட முடியாவிட்டால், மேலும் இறுக்கமான ஒரு பிரேரணையை அங்கீகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருந்தே வருகின்றன.**

போன்ற பலநாடுகள் அமெரிக்காவின் பிரேரணைக்கு ஒன்றில் ஆதரவாக வாக்களித்துள்ளன அல்லது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. வாக்குப் பிரயோகத்தின் இப்போக்கின்மூலம் தமக்கு எதிராக மேற்கு நாடுகளில் ஒரு சதி இடம்பெறுகின்றது என இலங்கை அரசாங்கம் முன்வைத்த தர்க்கம் தகர்த்தெறியப்பட்டதோடு, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய தோல்வியையும் உறுதி செய்துள்ளது. மேற்படி நாடுகள், தமக்குச் சார்பாக வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென இலங்கை அரசாங்கம் வேண்டிக் கொண்டது. ஆனால், அவ்வேண்டுகோள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர், பிரேசில், ஆர்ஜென்டினா போன்ற நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டாலும் அது வெற்றியளிக்கவில்லை. ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் ஜப்பானுக்கு விஜயம் செய்த போதிலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை.

இதற்கு மேலதிகமாக எல்எல்ஆர்சீ அறிக்கையை அமுல்படுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டத்தை இலங்கை அறிமுகப்படுத்தினாலும் அதில் உள்ள பலவீனங்கள் அமெரிக்கப் பிரேரணையில் சுட்டிக் காட்டப்பட்டு உள்ளது. அதே சமயம், வகைப்பொறுப்புக் கூறல் தொடர்பாக நம்பிக்கை வாய்ந்த சுயாதீனமான விசாரணை ஒன்று அவசியம் எனவும் வலியுறுத்தப்படுகின்றது. அதே வேளை நல்லிணக்கத்திற்கான ஒரு பொறிமுறையை தந்துதவுதற்கு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் தனது கவனத்தைச் செலுத்தி உள்ளார். அவரது அறிக்கை, அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வு தொடர்பாகவும் மேற்படி தீர்வை வலியுறுத்தியும் உள்ளது. 2013 செப்டெம்பர் மாதத்தில் வடமாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்ற பிரகடனத்தையொட்டி மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது. 2013 செப்டெம்பர் மாதத்தில் வாய்மொழிமூல அறிக்கையும், 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இறுதி அறிக்கையும் அதன் பின்னர் விபரமான அறிக்கையும் வெளியிடப்படும் என்றும் பிரேரணை மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

சிலர் எதிர்பார்ப்பதைப் போல இப்பிரேரணை மிகக் கடுமையானதாக அமையாவிடினும், மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் நிரந்தரமாகவே இலங்கை இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் எதிர்காலத்தில் மிகவும் கடுமையான பிரேரணை முன்வருவதற்கான சாத்தியக் கூறுகளையும் உருவாக்கியுள்ளது. பேரவையின் உறுப்புநாடுகளைத் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் ஒரு முன்னேற்றத்தைக் காட்ட முடியாவிட்டால், மேலும் இறுக்கமான ஒரு பிரேரணையை அங்கீகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருந்தே வருகின்றன. இங்கு கடைசியில் குறிப்பிடப்பட்ட விடயம் இந்தியப் பிரதிநிதி மூலம் விசேடமாக சுட்டிக் காட்டப்பட்டது. இந்தியா இப்பிரேரணையை மென்மையாக்கும் விதத்திலேயே நடந்து கொண்டது என்ற ஒரு குறைபாடு தமிழ் நாட்டில் இருந்து சுட்டிக் காட்டப்பட்டு இருந்தாலும், இங்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய பிரதான விடயம் இலங்கையின் மிக நெருங்கிய அயல் நாடாக இந்தியா அமையும் அதேவேளை, அமெரிக்காவின் அனுசரணை இந்தியாவிற்கு எப்பொழுதும் இருந்துகொண்டே வருகின்றது. அதே சமயம், இலங்கைக்கான சர்வதேச ஆதரவு குறைந்துள்ளது. இங்கு சர்வதேச மனித உரிமைச் சட்டம் மற்றும் மனிதநேயச் சட்டங்கள் மீறப்பட்டமை குறித்து சுயாதீனமான நம்பிக்கை வாய்ந்த விசாரணையின் தேவைப்பாடு பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இங்கு சர்வதேச மனித உரிமைச் சட்டம் மற்றும் மனிதநேயச் சட்டங்கள் மீறப்பட்டமை குறித்து சுயாதீன-மான நம்பிக்கை வாய்ந்த விசாரணையின் தேவைப்பாடு பற்றியும் வலியுறுத்தப்பட்டது. சர்வதேச சமூகம் திருப்தியடையும் வகையில் செயற்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்படுகிறது.**

சர்வதேச சமூகம் திருப்தியடையும் வகையில் செயற்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு பிரேரணை வரை அறிக்கையிடலின் முக்கியத்துவம் பற்றியும் இது சர்வதேச விசாரணை-யாக அமைய வேண்டும் என்ற விடயமும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரிடம் அறிக்கையிடப்பட்டு உள்ளது. இந்த விசாரணை தொடர்பாக, இலங்கையின் அறிக்கைகளுக்கு அமைய, இலங்கையின் போர்க்குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டு ஒருபுறம் இருக்க, மனித உரிமை மீறல் தொடர்பாக பரந்துபட்ட முறை-யில் தண்டனை வழங்காமல் இது சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் எவ்வாறு செயற்படும் என்பதுபற்றி அல்லது ஏதாவதொரு செயற்பாடுபற்றி எதிர்காலத்தில் அறிந்துகொள்ள முடியும். அவ்வாறு செயற்படாத பட்சத்தில் ஆகக் குறைந்தபட்சம் மனித உரிமைகள் பேரவை மேலதிக நடவடிக்கை எடுப்பது பற்றியும் அதே சமயம், இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்படுவதற்கும் காரண-மாக அமையலாம்.

இப்பிரேரணையின் ஓர் அண்மித்த தாக்கம் 2013 நொவெம்பரில் இலங்கையில் இடம்பெற இருக்கும் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் பங்குபற்றும் உச்சி மகாநாட்டிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். கனேடியப் பிரதமர் திரு. ஸ்டீபன் காப்பர் ஏற்கனவே தான் இந்த மகாநாட்டில் பங்குபற்றப் போவதில்லை என அறிவித்துள்ளார். இந்தியப் பிரதமரும் வருகை தரா-மல் இருக்கக்கூடும். அதேசமயம், பிரித்தானிய பிரதமரும் வருகை தரா-மல் இருக்கக்கூடும். பக்கிங்காம் மாளி-கையில் இருந்து உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிடப்படாவிட்டாலும், பொதுநலவாய நாடுகளின், தலை-வியான பிரித்தானிய மகாராணி மகாநாட்டில் பங்குபற்றமாட்டார் என அனுமானிக்கப்படுகிறது. மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களே இதற்கு முக்கிய காரணியாகும்.

முழுமையான பங்குபற்றலுடன் அல்லது அதற்கு அண்மித்த பங்குபற்றலுடன் பொதுநலவாய நாடுகளின் உச்சி மகாநாடு நடத்தப்படுமேயாயின் அது எதிர்பாராத வகையில் தமக்குக் கிடைத்த அரசி-யல் வெற்றி என்றே இலங்கை அரசு கருதக்கூடும். அதே சமயம், ஜெனீவா பிரேரணைகள் மூலம் சர்வதேச ரீதியான தனிமைப்படுத்தலுக்கான போக்கை மாற்றியமைத்ததாக மகிந்த அரசு கருதக்கூடும். அனைத்தும் மகிந்த அரசுக்கு சாதகமாக நடந்தேறினால், பொதுநலவாய உச்சி மகாநாட்டை நடத்திய கை-யோடு ஜனாதிபதி தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் நடத்துவதற்கான சாத்தியக்கூறு உண்டு.

எவ்வாறாயினும் பொதுநலவாய நாடுகளின் உச்சி மகாநாடு கொழும்பில் கட்டாயமாக நடை-பெறும் என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலையே உள்ளது. பொது-நலவாய நாடுகளின் அமைச்சு மட்டத்திலான ஒரு கூட்டம் ஏப்பிரல் மாத இறுதியில் இலண்டன் நகரில் நடைபெறும் சாத்தியம் உண்டு. இங்கு கட்டாயமாக இலங்கையின் நிலைமை பற்றிக் கலந்துரையாடப்படும். இங்கு பகிரங்கமாகவே கனேடியத் தலைமை செயற்பாட்டு ரீதியான ஒரு பங்களிப்பைச் செய்யும். அதே சமயம் அவர்களோடு இணைந்து உடன்பாட்டுடன் செயற்படும் வேறு நாடுகளும் உண்டு. ஆனால், அவுஸ்திரேலியாவை உதாரணமாக எடுத்தால், தேர்தல் ஆண்டில் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவில் குடியேற முயற்சிப்பதைக் கருத்தில் கொண்டு இலங்கை அரசாங்கத்திற்கு சார்பாக நடந்து கொள்ளும் சாத்தியக்கூறும் இருக்கிறது. பொது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**மெதுவாக எனினும் உறுதிப்படுத்தப்பட்ட வகையில் இடம்பெறும் இலங்கையின் அரசு சர்வதேச ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கப்பால் சென்று தண்டனை நடைமுறையை எதிர்நோக்கும் திசையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இராணுவமயமாக்கல் நிறுவன மயமாக்கப்பட்டதோடு, மத தீவிரவாதமும் இந்த அரசின் மையத்தில் இருந்து அனுசரணை பெற்று வருகிறது. இவ்வாறு இலங்கை அரசாங்கம் இத்தீவிரவாத போக்குகளுக்கு ஆதரவளிக்க மாட்டாது என்பதை சான்றாதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும். சொற்கள்மூலம் மாத்திரம் அல்லாது நடைமுறை ரீதியிலும் இது நிரூபிக்க வேண்டும். மோதலின் அடிப்படைகளை போஷிக்கக் கூடிய வகையிலோ, அல்லது மீள உயிர்பெறக்கூடிய வகையிலோ மோதலுக்குப் பின்னைய நிலைமையில் இலங்கை செயற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இன்னமும் இருந்து வருகின்றன.**

நலவாய நாடுகளின் அமைச்சு மட்டத்திலான செயற்குழுக் கூட்டத்தில் பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகளில் பொதுநலவாய நாடுகளின் உறுப்பு உரிமையை இடைநிறுத்தி வைக்கக்கூடிய சாத்தியப்பாடும் உண்டு. மாலைத் தீவுகளின் இன்றைய நிலைமை இத்தகையதே. ஜெனரல் முஷாரா.்ப் பாகிஸ்தானின் உச்ச நீதிமன்ற நீதியரசர்களை சேவையில் இருந்து நீக்கப்பட்டபோது பாக்கிஸ்தானின் அங்கத்துவமும் இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

பல பொதுநலவாய நாடுளின் பத்திரிகைகளில் ஆசிரிய தலையங்கங்கள் மூலமும் ஏனைய கட்டுரைகள்மூலமும் கொழும்பில் நடைபெற உள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மகாநாட்டில் நடைபெற விகாரமான வடிவங்கள் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளன. இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களும், குறிப்பாக பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை மூலமும், பொதுநலவாய நாடுகளின் பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் பகிரங்கமாகவே புறக்கணிக்கும் ஒரு நிலைமை மேற்படி கட்டுரைகள் வாயிலாக எடுத்துக் கூறப்பட்டன. அண்மையில் மகாராணியார் கையொப்பமிட்ட பொதுநலவாய நாடுகளின் நியதிச்சட்டங்கள் மூலமாக இவ்விழுமியங்கள் பேணப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பேர்த் உச்சி மகாநாட்டின்போது அங்கீகரிக்கப்பட்ட, பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்களின் நடவடிக்கைக்குழு அமுல்படுத்தவிருக்கும் மிகச்சிறந்த முறையில் மேம்படுத்தப்பட்ட அளவுகோல்களுடனும் இவை ஒன்றிணைக்கப்பட்டுள்ளன என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இவற்றோடு பொருத்தப்பாடுடைய நீதித்துறையின் சுயாதீனம் பற்றியும் "லெற்றிம கவுஸ்" கோட்பாடுகளுக்கு அமைய இப்பெறுமானங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இலங்கை தமது பிரதம நீதியரசருக்கு எதிராக அமுல்படுத்திய போலித்தனமான குற்றப் பிரேரணையின்போது இக்கோட்பாடுகளே பகிரங்கமாக மீறப்பட்டன. இம்மாநாடு இலங்கையில் நடைபெறுமேயானால் பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவி இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். இக்கால கட்டத்தில், உரிமைகள் மீறப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஏனைய உறுப்பு நாடுகள் தொடர்பாக செயற்படுவதற்கு பொதுநலவாயநாடுகளுக்கு முடியுமா? தெளிவாக முடியாது.

மெதுவாக எனினும் உறுதிப்படுத்தப்பட்ட வகையில் இடம்பெறும் இலங்கையின் அரசு சர்வதேச ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கப்பால் சென்று தண்டனை நடைமுறையை எதிர்நோக்கும் திசையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இராணுவமயமாக்கல் நிறுவன மயமாக்கப்பட்டதோடு, மத தீவிரவாதமும் இந்த அரசின் மையத்தில் இருந்து அனுசரணை பெற்று வருகிறது. இவ்வாறு இலங்கை அரசாங்கம் இத்தீவிரவாத போக்குகளுக்கு ஆதரவளிக்க மாட்டாது என்பதை சான்றாதரங்களுடன் நிரூபிக்க வேண்டும். சொற்கள்மூலம் மாத்திரம் அல்லாது நடைமுறை ரீதியிலும் இது நிரூபிக்க வேண்டும். மோதலின் அடிப்படைகளை போஷிக்கக் கூடிய் வகையிலோ, அல்லது மீள உயிர்பெறக்கூடிய வகையிலோ மோதலுக்குப் பின்னைய நிலைமையில் இலங்கை செயற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இன்னமும் இருந்து வருகின்றன. ஆனால், இலங்கை அரசாங்கம் இதனை புரிந்துகொண்டுள்ளது என்பதற்குச் சான்றுகள் இல்லை. அரசாங்கத்தின் இயலாமை இந்நாட்டு பொது மக்களையே பெரிதும் பாதிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கை நேர்மையற்ற அரசாக மாறுவதற்கு

# வகைப் பொறுப்புக்கூற வேண்டியது யார்?

ஏனையோர் செய்யும் பாவங்களை அனுபவிக்க வேண்டிய ஒரு நாட்டிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஏற்கனவே முட்டாள்தனமான அரசின் பிரஜைகளாக நாம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கின்றோம். எதிர்கால சந்ததியினராகிய எமது பிள்ளைகளுக்கு நாம் உரித்தாக்கும் நாடு இத்தகையது. குணநலன்களையோ, மனிதத் தன்மையையோ பொருட்படுத்தாது அரசியல்வாதிகள் அதிகாரத்தில் உள்ள நோய்களும், அச்சமும், பசிபட்டினியும், மனிதத் தன்மையற்ற நிலைமைகளும் நிறைந்த ஒரு நாடாக எமது நாடு மாற்றமடையவில்லையா? தெருக்கள், பாலங்கள் என்பவற்றின் எண்ணிக்கையை விட இலஞ்சமும், ஊழலும், மோசடிகளும் எமது நாட்டில் நிறைந்துள்ளன. இதனால் எமது நாடு ஒரு சீரழிந்த நாடாகவே காணப்படுகின்றது. நெடுஞ் சாலைகளையும், பாலங்களையும் விட இலஞ்சமும், ஊழலும், மோசடியும் துரித வேகத்தில் இடம்பெறவில்லையா? கிராமப்புற தெருக்கள் மிக மோசமாக சீரழியத் தொடங்கவில்லையா? கங்கைகளும், ஆறுகளும், ஓடை-களும், வாவிகளும் பாதுகாக்கப்படுவது கைவிடப்பட்டுள்ளன. சிறு காடுகளும், பற்றைகளும், கண்டல்களும் அழியத் தொடங்கியுள்ளன. பல்வேறு நோய்கள் வளர்ச்சியடைந்த அதே நேரத்தில் அதன் விளைவுகளாக நோயாளர்களை உருவாக்கியுள்ளன. சில காலங்களுக்கு முன்பு இயற்கை அழகும் மனித குணநலங்களும் நிறைந்து காணப்பட்ட ஒரு நாடுதான் எமது இலங்கை. இது உலகத்தின் புண்ணிய பூமியாகவும் மதிக்கப்பட்டது. ஆனால், இன்று முட்டாள் தேசமாக மாற்றப்பட்டுள்ளது. இக்கைங்கரியத்தை அரசியல்வாதிகளே செய்துள்ளனர். பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி வயோதிபர்களாக மாறும் ஒரு நாட்டில், கல்வி முன்னேற்றமடைந்துள்ளதென எவ்வாறு கூறமுடியும்? சிறுநீர்ப்பை நோய்கள், டெங்கு நுளம்புத் தொல்லை என்பவற்றை இல்லாதொழிக்க முடியாத ஒரு நாட்டில் யுத்தத்தின் வெற்றி தற்காலிகமானதே. நிரந்தரமாக அது தேசத்தின் மகுடமாக அமையப் போவதில்லை. அரசியல்வாதிகளுக்கு எதிரான குற்றப் பத்திரிகைகள் வாபஸ் பெறப்பட்டு அவர்கள்

சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா



**தமது குடும்ப ஆட்சியும் களவு, சண்டித்தனம் அடாவடித்தனங்களில் ஈடுபடுவோருக்கு சாதகமான ஆட்சி முறையே இன்று நிலவுகின்றது. இதன் காரணமாகவே, ஜெனிவா பிரேரணை ஆரம்பிக்கப்பட்டது. எந்தவொரு இனத்திற்கோ, மதத்திற்கோ அல்லது பிரஜைக்கோ மகிழ்ச்சியை ஏற்படுத்தாத அரசியல் நிலைமை காரணமாகவே ஜெனிவா குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படைக் காரணமாக அமையலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜெயலலிதாவை முதன்மையாகக் கொண்ட தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் உண்மையில் இனவாதத்தையும், அரசியல் வன்முறையையும் பயன்படுத்தி தமது அதிகாரத்தைத் தக்க வைக்க முயல்கின்றனர் என்பது உண்மை. இத்தகைய எதிர்ப்பு இயக்கங்களில் இருந்தும், வன்முறை நடவடிக்கைகளில் இருந்தும் எம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நாமும் அதே இனவாதத்தையும், வன்முறையையும் பாவிக்க முடியாது. நாம் தவறு செய்திருப்பின் அத்தவறைத் திருத்தி மனப்பாங்கிலும், நடைமுறையிலும் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.**

விடுதலையடைகின்றனர். இந்த அரசியலினால் உருவாக்கப்பட்ட குற்றவாளிகள் கொலை செய்யப்படும் ஒரு சட்டமே அமுலில் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் சர்வதேசச் சட்டங்களோ சமவாயங்களோ எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட முடியும்? சர்வதேசச் சட்டங்களை மீறுவதன் மூலமாக சகல வழிவகைகளிலும் நாம் ஒழுக்க நெறிமுறைகளை மீறி வந்துள்ளோம். சர்வதேச சட்டங்களையும், ஒழுக்க நெறிமுறைகளையும் நாம் மீறுவதன் மூலம் ஜெனிவாப் பயணத்தை ஆரம்பித்தோம். தமது குடும்ப ஆட்சியும் களவு, சண்டித்தனம் அடாவடித்தனங்களில் ஈடுபடுவோருக்கு சாதகமான ஆட்சி முறையே இன்று நிலவுகின்றது. இதன் காரணமாகவே, ஜெனிவா பிரேரணை ஆரம்பிக்கப்பட்டது. எந்தவொரு இனத்திற்கோ, மதத்திற்கோ அல்லது பிரஜைக்கோ மகிழ்ச்சியை ஏற்படுத்தாத அரசியல் நிலைமை காரணமாகவே ஜெனிவா குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படைக் காரணமாக அமையலாம்.

**ஜெனிவா குற்றச்சாட்டுக்கள் வெளிநாட்டுச் சதியா?**

ஜெனிவாவின் மனித உரிமைகள் பேரவை அங்கீகரித்த பிரேரணை பின்வருமாறு கூறுகின்றது. வெளிநாடுகளின் இடையீட்டை தடுக்கும் முகமாகவே கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு சில பரிந்துரைகளைச் செய்தது. இப்பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு சர்வதேச சமூகம் வலியுறுத்துகிறது. ஆகவே, வெளிநாட்டு இடையீடுகளை தவிர்க்கும் முகமாகவே எல்எல்ஆர்சீ உருவாக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் ஒரு விசாரணையை மேற்கொள்வதைத் தடுத்து, அவற்றை நாமே செய்து கொள்வோம் என்ற நிலைப்பாட்டில் இருந்தே உள்நாட்டு அறிஞர்களைக் கொண்ட எல்எல்ஆர்சீ ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. உண்மையான சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வாணைக்குழு அமைக்கப்பட்டது. இது உண்மையான சாட்சியங்களைப் பதிவு செய்தது. அடிப்படையில் தவறுகள் ஏற்பட்டுள்ளன. எனவே அத்தவறுகளைத் திருத்தி நடவடிக்கை எடுப்பதையே ஆணைக்குழு நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏற்பட்ட தவறுகளுக்கு பிராயச்சித்தம் பெற வேண்டும். அதே சமயம் இனங்களுக்கு இடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதும் அவசியமாகும். ஆனால் அப்பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்துவதற்குப் பதிலாக போரின் வெற்றி பற்றியே அரசாங்கம் பிதற்றிக் கொண்டிருக்கிறது. இனபேதங்களுக்கும், மதபேதங்களுக்கும் அரசாங்கம் வித்திட்டுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட மனிதர்கள் கண்ணீர் சிந்தும்போது நாம் அதற்கான குற்றவாளிகள் இல்லை என்று அனைத்து தவறுகளையும் மூடி மறைத்து அரசாங்கம் பிரபாகரன்மீது மாத்திரம் குற்றங்களைச் சுமத்துகிறது. தமக்கு எதிரான அநீதிகளைக் கண்டித்து தமிழ் மகன் ஒருவன் குரலெழுப்பும்போது "அதோ ஒரு புலி. இன்னமும் புலிகள் இருக்கின்றன." என்று கூறி அரசயந்திரம் அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுகின்றது. வடக்கிற்கு எதிரான அடக்கு முறை இன்னும் முடிந்தபாடில்லை. இந்த வழிவகையைப் பின்பற்றி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமா? எனவே ஜெனிவாப் பிரேரணைகள் எதிர்காலத்தில் புதுப்பிக்கப்படுவதையிட்டு ஆச்சரியப்படுவதற்கில்லை.

மறுபுறம் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நல்லாட்சி தொடர்பான பரிந்துரைகளாகவே அமைந்துள்ளன. அது வடக்கு தெற்கு என்ற இரண்டு மாகாணங்களுக்கும் பொதுவானது. சட்ட விரோதமான நடவடிக்கைகளைத் தவிர்த்து சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டக் கூறுவது தவறா? இக்கட்டுரையை எழுதும் காலகட்டத்திலும் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைப் பார்ப்போம். (04.04.2013) அமைச்சர்களின் புதல்வர்களுக்கும் அரசியல் அனுதாபிகளுக்கும் எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் வாபஸ்பெறப்பட்டு உள்ளன. யாழ்ப்பாணத்தின் உதயன் பத்திரிகை அலுவலகத்தில் முகமூடி அணிந்த ஏழு துப்பாக்கிதாரிகள் பிரவேசித்து பத்திரிகை அலுவலகத்தை தீவைத்துள்ளனர். இவற்றைச் செய்ய வேண்டாமென்று பரிந்துரைப்பது தவறா? இவை வடக்கு தெற்கு ஆகிய இரு பிரதேசங்களுக்கும் பொதுவானவை ஜெனிவா பிரேரணை மூலமும் இதுவே வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறாயின் "இவ்வெளிநாட்டுச் சதி" எமது நன்மைக்காகவே இடம்பெற்றுள்ளது.

**நாட்டை ஏமாற்றுதலும் உலகத்தை ஏமாற்றுதலும்**

நீண்டகாலமாக பலவேறு கொலைகள் தொடர்பான ஆணைக்குழு அறிக்கைகளை மூடிமறைத்து நாடு ஏமாற்றப்பட்டது. தற்போது உலகை ஏமாற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் கேலிக்குரியவை. அதாவது, ஜெனிவா பிரேரணைகள் தொடர்பான சர்வதேசச் சட்டங்கள் மீறியமைபற்றி மெற்கொள்ளவிருக்கும் விசாரணைகளைத் தடுத்து, அது தொடர்பாக ஆயுதப்படைகளில் இருந்து ஐவர் அடங்கிய ஆணைக்குழுவை நியமித்து சர்வதேசச் சட்டங்கள் மீறப்படவில்லை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்று அறிக்கை சமர்ப்பிக்கின்றனர். சிவில் சமூகம் யுத்தத்தின்போது படையினரால் பாதிப்புக்குள்ளாகவில்லை என்று ஓர் அறிக்கையைப் பெறுவது உண்மையிலேயே கேலிக்கூத்தாகும். ஐக்கியநாடுகள் சபையை இவ்வாறாக ஏமாற்ற முடியும் என்பது எவ்வளவு முட்டாள்தனம்? எனவே இதுபற்றி விசாரணை நடத்த வேண்டுமென மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

**ஜெனிவா பிரேரணைகளை முன்வைத்த அமெரிக்காவின் பாத்திரம்**

இலங்கைக்கு எதிராக ஜெனிவா பிரேரணைகளை முன்வைத்து, அதனைப் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவைப் பெற்று அங்கீகரித்த அமெரிக்கா உலகம் பூராகவும் மனித உரிமைகளை மீறுகிறது என்பது பகிரங்க உண்மை. இவ்வாறு இருந்த போதிலும் இலங்கை ஐ.நா. சமவாயங்களை மீறியமை குறித்து இலங்கைக்கு எதிரான பிரேரணைகளை அங்கீகரித்து அதற்கான விளைவுகளை இலங்கை சந்திக்க வைப்பதற்கு அமெரிக்காவுக்குள்ள ஆற்றலை இல்லாதொழிக்க முடியாது. முட்டாள் அமைச்சர்களும், ஊடக அடிவருடிகளும், இணைந்து அமெரிக்காவிற்கு எதிராக தாறுமாறாக பேசுவதன்மூலம் மாத்திரம் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. அமெரிக்கா மனித உரிமைகளை மீறுவதாயின் அத்தகைய மனித உரிமைகளுக்கு எதிரான பிரேரணையை ஐ.நா.மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கும் ஆற்றல் இலங்கைக்கு உண்டா? இரண்டு முறை இத்தகைய தீர்மானம் மனித உரிமைகள் பேரவையில் அங்கீகரிக்கப்பட்டதன் மூலம் இலங்கை இருமுறை தோல்வி கண்டுள்ளது. மற்றைய நாடுகளின் ஒத்துழைப்பை இலங்கை பெறமுடியுமா? இத்தகைய மிகப்பலவீனமான நிலைமையில் இருக்கும் இலங்கை, எல்எல்ஆர்சி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் ஓரளவு தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். செய்ய வேண்டியது இருக்கத்தக்கதாக பொதுமக்களை தெருவில் இறக்கி ஆர்ப்பாட்டம் செய்யத்தூண்டுவதன் மூலம் சர்வதேச நிலைமையில் எதுவித நெகிழ்ச்சியான தன்மையும் ஏற்படமாட்டாது.

இது தொடர்பாக தொலைநோக்குடன் செயற்பட முடியாவிட்டால் தமிழ்நாட்டின் அச்சுறுத்தல்களுக்கு நாம் முகம்கொடுக்க நேரும். ஜெயலலிதாவை முதன்மையாகக் கொண்ட தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் உண்மையில் இனவாதத்தையும், அரசியல் வன்முறையையும் பயன்படுத்தி தமது அதிகாரத்தைத் தக்க வைக்க முயல்கின்றனர் என்பது உண்மை. இத்தகைய எதிர்ப்பு இயக்கங்களில் இருந்தும், வன்முறை நடவடிக்கைகளில் இருந்தும் எம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நாமும் அதே இனவாதத்தையும், வன்முறையையும் பாவிக்க முடியாது. நாம் தவறு செய்திருப்பின் அத்தவறைத் திருத்தி மனப்பாங்கிலும், நடைமுறையிலும் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். இதற்குப் பதிலாக அரசாங்கம், சிங்கள இனவாதத்தையும் அரசியல் வன்முறையையும் பயன்படுத்துகிறது. அதற்கு எதிராக தமிழ் தேசியவாதமும், வன்முறையும் தமிழ்நாட்டில் இருந்து முன்வைக்கப்படுகின்றன. ஒரே வகையான இரண்டு பைத்தியங்களின் மோதலே இது. ஆனால் இம்மோதலின் விளைவுகளை பொது மக்கள் அனுபவிக்க நேரிடுவது துன்பியலாகும். உதயன் பத்திரிகை அலுவலகத்தை தாக்குவதன்மூலம் நாம் இன்னும் அதே நிலைமையில்தான் இருக்கின்றோம் என்ற செய்தி வெளிப்படுத்தப்படவில்லையா? அரசாங்கத்தின் சகபாடிகளை குற்றவியல் வழக்குகளில் இருந்து விடுவப்பதன்மூலம் வழங்கப்படும் செய்தி என்ன? “எவரும் எமக்கு எதிராக குற்றம் சுமத்த முடியாது” என்ற செய்தியையே அரசாங்கம் முன்வைக்கின்றது. இத்தகைய நடவடிக்கைகள்மூலம் சட்டத்தின் ஆட்சி இல்லாதொழிக்கப்படுகின்றது என பகிரங்கமாகக் குற்றம் சுமத்தப்படுகின்றபோது சர்வதேச சமவாயங்களைப்பற்றி ஏனைய உலக நாடுகள் என்ன செய்ய வேண்டும்? இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களை அங்கீகரிப்பது அல்லவா? நாம் சர்வதேச சட்டங்களுக்கும் மனித உரிமைகள் சமவாயங்களுக்கும் கைச்சாத்திட்டு உலக பிரஜைகளிடையே சமநிலையைப் பெற்றுள்ளோம். ஏனையோர் இச்சமவாயங்களை மீறும்போது அதனைக் கண்டிக்கும் உரிமை எமக்கு இருப்பது போல, நாம் அச்சமவாயங்களை மீறினால் ஏனையோருக்கும் அதே உரிமை கிடைக்கின்றது.

**அரசாங்கமும் விடுதலைப் புலிகளும்**

ஜெனிவா பிரேரணைகள் அங்கீகரிக்கப்படும்போது “போரில் சாதாரண குடிமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை, நஷ்டங்களை ஆராய வேண்டும்.” இது ஒரு விடயம். இங்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்த தவறுகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதுவும் இப்பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச்சிவில் மக்களை கொலை செய்வது, சித்திரவதை செய்வது, இளம் சிறார்களை வலுக்கட்டாயமாக புலிகளின் படைகளில் இணைத்துக் கொள்வது என்பன இத்தகைய குற்றங்களாகும். தற்போது

**இன்று இலங்கையில் வாழும் அனைத்து இனங்களும் மகிழ்ச்சியோடு வாழமுடியாத ஒரு சூழ்நிலையே நிலவி வருகிறது. எல்லோரும் வாழ்க்கைச் சுமையை எதிர்கொண்டுள்ளனர். அதே சமயம் தமிழர்களும், முஸ்லீம்களும் அச்சத்துடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்த இரு சாராரிடமும் தனிப்பட்ட முறையில் விசாரணை செய்தால் இதனை நன்கு புரிந்துகொள்ள முடியும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போரில் வெற்றி கொள்வது என்பது நாட்டின் சட்டங்களை மீறுவதற்கான ஓர் அனுமதிப்பத்திரமா? குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறுவதற்கு அது காரணமாக அமையுமா? தமது சொத்துக்களைப் பிரகடனப்படுத்தாமல் இருப்பதற்கு இது ஒரு சாட்டாக அமையுமா? சொத்துப் பிரகடனம் அல்லது அபிவிருத்திச் செலவுகள் என்பவற்றை அம்பலப்படுத்தாமல் இருப்பதற்கு இது ஒரு காரணமாக அமையுமா? வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று அதில் ஒரு பகுதி களவெடுக்கப்படுகிறது. துண்டு விழும் தொகையை சரிசெய்வதற்கு மக்கள் மீது வரிச்சுமை சுமத்தப்படுகிறது. பொது தொழில் முயற்சி தொடர்பாக இரண்டு பாராளுமன்ற தெரிவுக் குழுக்களில் இருந்தும் இத்தகவல்கள் பெறப்பட்டன.**

இவற்றை அரசாங்கத்திற்கு மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். கருணா, பிள்ளையான், ஜோர்ஜ் மாஸ்ட்டர், தயா மாஸ்ட்டர், கே.பி. ஆகியோருக்கு எதிராக குற்றப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கு அரசாங்கம் உதவ முடியும். அவ்வாறு செய்யப்படுவது இல்லை. அரசாங்கம் ஏன் அவ்வாறு செய்யாமல் இருக்கின்றது? போரில் வெற்றி காண்பதற்கு மேற்கூறியோர் உதவி செய்தமைக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கே அரசாங்கம் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடராமல் இருக்கின்றதா?. இந்த அரசாங்கம் எவ்வளவு நன்றிக்கடன் கொண்டது என்பதற்கு சிறந்த உதாரணம்: முன்னைநாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேக்காவுக்கு எதிராக பல வழக்குகள் தொடரப்பட்டதோடு மாத்திரமல்லாமல் அவருடைய ஓய்வூதியத்தையும் இரத்துச் செய்து தனது நன்றி இல்லாத் தன்மையை அரசாங்கம் வெளி உலகிற்கு எடுத்துக் காட்டியது. முன்னைநாள் பிரதம நீதியரசருக்கு எதிராக மேற்கொண்ட ஒரு தலைப்பட்சமான வழக்கு விசாரணையின்மூலம் விடுக்கப்படும் செய்தி யாது? "எமது" அதிகாரத்திற்கு எதிராக எந்த சமூக அந்தஸ்தில் உள்ளவரும் செயற்பட முடியாது என்ற செய்தியை அரசு பகிரங்கப்படுத்தி உள்ளது.

கருணா, கே.பீ. போன்றோருக்கு எதிராக அரசாங்கத்திடம் போதிய சான்றாதாரங்கள் இருந்தாலும் அரசாங்கம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மாட்டாது. ஏனெனில், அரசாங்கத்திற்கு எதிராக அவர்களும் சாட்சிகூற முன்வர முடியும். இவர்களுடைய செயற்பாடுகளையிட்டு சான்றாதாரங்களை முன்வைப்பதற்கு இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும் பலர் இருக்கின்றனர். எனவே, அவர்களுக்கு எதிராக ஜெனிவா சமவாயங்களை அமுல்படுத்த முற்பட்டால், அது அரசாங்கத்திற்கு எதிராகவே எதிரொலிக்கும். ஏனெனில், இரு தரப்பினரும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கு ஏராளமான சான்றாதாரங்கள் உண்டு.

### நாட்டின் இன்றைய நிலைமை

இன்று இலங்கையில் வாழும் அனைத்து இனங்களும் மகிழ்ச்சியோடு வாழமுடியாத ஒரு சூழ்நிலையே நிலவி வருகிறது. எல்லோரும் வாழ்க்கைச் சுமையை எதிர்கொண்டுள்ளனர். அதே சமயம் தமிழர்களும், முஸ்லீம்களும் அச்சத்துடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்த இரு சாராரிடமும் தனிப்பட்ட முறையில் விசாரணை செய்தால் இதனை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

இறையாண்மை மக்களிடமே உண்டு என அரசியல் அமைப்பு கூறினாலும், இன்று அரச உயர் பதவிகள் உறவினர்களுக்கே வழங்கும் சர்வாதிகார அரசே பதவியில் இருக்கின்றது. ஜனாதிபதிக்கு மாத்திரமே இறையாண்மை இருக்கின்றது.

அரசு தொடர்ந்து செயற்படுவதாகக் கடந்த காலத்தில் இருந்து பிரகடனப்படுத்தப்பட்டாலும் அரசின் இடத்தை அரசாங்கம் கையகப்படுத்தி உள்ளது. தேர்தல் சட்டங்களைப் பொருட்படுத்தாமல் தாம் விரும்பியவாறு, தாம் விரும்பிய நாட்களில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. அரசாங்கத்தின் அந்தஸ்தை அரசாங்கம் கையப்படுத்தியுள்ளதன் காரணமாகவே இந்நிலைமை தொடர்கின்றது.

அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டு இருப்பதுபோல இலங்கை ஓர் குடியரசாகும். ஆனால் நடைமுறையில் அது அரசனுடைய ஆட்சியாக மாறியுள்ளது. ஓர் குடியரசில் நீதிமன்றத் தீர்மானங்கள் சுயேட்சையாகவே இடம்பெற வேண்டும். ஆனால் இன்று இலங்கையில் நீதிமன்றங்கள் எவ்வாறு தீர்ப்பு வழங்க வேண்டுமென மேல் மட்டங்கள் ஆணையிடுகின்றன. இது ஓர் அரசனுடைய ஆட்சிக்குச் சமமாகும்.

போரை வெற்றி கொள்வதற்கு அதிக செலவினத்தை ஏற்க வேண்டி இருந்தது. பாரிய விழாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இராணுவ ஆட்சி காட்சிப்படுத்தப்படுகின்றது. இது ஏன்?

போரில் வெற்றி கொள்வது என்பது நாட்டின் சட்டங்களை மீறுவதற்கான ஓர் அனுமதிப்பத்திரமா? குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறுவதற்கு அது காரணமாக அமையுமா? தமது சொத்துக்களைப் பிரகடனப்படுத்தாமல் இருப்பதற்கு இது ஒரு சாட்டாக அமையுமா? சொத்துப் பிரகடனம் அல்லது அபிவிருத்திச் செலவுகள் என்பவற்றை அம்பலப்படுத்தாமல் இருப்பதற்கு இது ஒரு காரணமாக அமையுமா? வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று அதில் ஒரு பகுதி களவெடுக்கப்படுகிறது. துண்டு விழும் தொகையை சரிசெய்வதற்கு மக்கள் மீது வரிச்சுமை சுமத்தப்படுகிறது. பொது தொழில் முயற்சி தொடர்பாக இரண்டு பாராளுமன்ற தெரிவுக் குழுக்களில் இருந்தும் இத்தகவல்கள் பெறப்பட்டன.

### நாட்டு மக்களின் கடமை

அந்தந்தச் சமயங்களில் குற்றத்தைக் குற்றமாக அணுக வேண்டும். அல்லது துஷ்டத்தனமான ஆட்சியாளர்கள் அதிகாரத்தைப் படிப்படியாக புவிமையப்படுத்தினால் இறுதியில் பாரிய அழிவு ஏற்படும் என்பது உறுதி. ஏனெனில், அவர்கள் அதிகாரத்தைக் கைவிடுவதற்கு ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Photo source: sannasa.com / lankaenews.com

# ஐ.நா.பிரேரணை
# இலங்கையைப் பற்றி அடுத்த ஆண்டில் உலகம் எதைக் கற்றுக்கொள்ளப் போகின்றது?

> "தம்மீது இருக்கக் கூடிய அச்சத்திற்குப் பதிலாக நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையிலேயே ஒரு சூழமைவு இலங்கையில் இல்லை என்பது ஒரு குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு அச்சமின்றி எவரும் முன்வரக்கூடிய ஒரு சூழலை சர்வதேச சமூகம் எதிர்காலத்தில் அறிந்துகொள்ளும்."

இலங்கையில் இனங்களுக்கு இடையே சகவாழ்வையும் அரசாங்கத்தின் வகைப் பொறுப்புக்களையும் மேம்படுத்துவதற்கு ஐ.நா.மனித உரிமைகள் பேரவை மார்ச் 2013.03.22 ஆந் திகதி ஒரு பிரேரணையை அங்கீகரித்தது. இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் வகைப் பொறுப்பு தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் ஆலோசனைகளும், தொழில்நுட்ப உதவியையும் உள்ளடக்கிய மனித உரிமைப் பேரவை ஆணையாளரின் அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மகிழ்ச்சியோடு அங்கீகரிக்கிறது. மேற்படி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிப்பதும், சர்வதேச மனிதநேய சட்டத்தையும், மனித உரிமைகள் சட்டத்தையும் மீறியமை குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு இலங்கை அரசாங்கம், சுயாதீனமானதும், நம்பகத்தன்மை வாய்ந்ததுமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதும் இப்பிரேரணையின் சாராம்சமாகும்.

சர்வதேச மனிதநேய சட்டமும், மனித உரிமைகள் சட்டமும் மீறப்பட்டுள்ளமை குறித்த குற்றச்சாட்டுக்களைப்பற்றி இலங்கை அரசாங்கம் அறிவுறுத்தப்பட வேண்டுமென்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது. இவ்வாறு நடைபெறுவதற்கு குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைக்க விரும்பும் நபர்கள் அரசாங்க அதிகாரிகள் முன்வந்து அவ்வாறு செய்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும். இதன் பொருள் தம்மீது இருக்கக் கூடிய அச்சத்திற்குப் பதிலாக நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையிலேயே ஒரு சூழமைவு இலங்கையில் இல்லை என்பது ஒரு குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு அச்சமின்றி எவரும் முன்வரக்கூடிய ஒரு சூழலை சர்வதேச சமூகம் எதிர்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராணுவம், பொலீஸ் அல்லது ஏனைய ஆய்தக் கும்பல்கள் மூலம் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் அல்லது படுகொலைகள் அல்லது மனித நேயச் சட்டங்களை மீறுதல் அல்லது படுகொலைகள், பெண்களுக்கெதிரான பாலியல் வல்லுறவுகள், பகற் கொள்ளைகள் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் சாதாரணமான பொதுக் கூட்டங்களை சுயாதீனமானதும் நம்பிக்கை வைக்கக் கூடியதுமான விசாரணைகளின் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்படவில்லை.**

அறிந்துகொள்ளும்.

இது இலங்கை வாழ் மக்கள் நன்கு அறிந்த நிலமையாகும். தொடர்ந்தும் உயிர் வாழாத, உயிரைப் பாதுகாப்பதற்காக நாட்டிற்கு வெளியே சென்ற எண்ணிக்கையினர் ஏராளம். இவை பற்றி அனேகமான அறிக்கைகளை உலகத்தார் அறிந்திருந்த போதிலும் அவை விதி விலக்காகவோ அல்லது மிகையானதாகவோ உலகம் கருதக்கூடும். தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் உள்ளடக்கம், குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை நிருபிப்பதற்கு முன்வருவோரின் கைகளிலேயே தங்கியுள்ளது. அரசாங்கத்திற்கு அல்லது ஒரு அரச நிறுவனத்திற்கு எதிராக இத்தகைய குற்றங்களைச் சுமத்துவதற்கான சூழல் இலங்கையில் உண்டா? என்பதைப் பற்றி அறிவது கஷ்டமானது அல்ல. நாட்டில் வாழும் மக்கள் நன்கு அறிந்த அல்லது அனுபவிக்கும் அச்சம் எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு தற்போது உலகத்தார்க்கு ஒரு சந்தர்ப்பம் உண்டு. இங்கு அரசாங்கம் ஒவ்வொரு நாளும் கூறுவதைப் போலவே, போலி அமைதி சம்பந்தமாக சர்வதேசச் சமூகம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்குமா? எவரும் எம்முன்னே வந்து குற்றம் சுமத்தப் போவதில்லை. எமக்கு எதிராக குற்றச்சாட்டு ஒன்றும் இல்லாதது போல் தோன்றலாம். பயம் உருவாக்கும் அமைதி குற்றமற்ற தன்மையின் சாட்சிக்காரராக மாறவும் இடமுண்டு. எதிர்காலத்தில் உலகத்தவர் இத்தகைய உண்மையையே அறிந்துகொள்வர்.

இந்தப் பிரேரணை மூலம் சர்வதேச சமூகம் எம்மிடம் இன்னுமொன்றைக் கோரி நிற்கின்றது. அதாவது சுயாதீனமான நம்பத் தகுந்த விசாரணை நடத்த வேண்டும் என்பதாகும். குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சுயாதீனமானதும் நடுநிலையானதுமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற குற்றவியல் நீதி நடுவர் சபை அமைப்பு முறை இலங்கையில் கிடையாது என சர்வதேசச் சமூகம் கற்றுக்கொள்ளும். இன்று உரிய விசாரணைக்கு ஆளாகாமல் தப்பித்துக்கொள்வதற்கும் இராணுவம், பொலீஸ் அல்லது ஏனைய ஆய்தக் கும்பல்கள் மூலம் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் அல்லது படுகொலைகள் அல்லது மனித நேயச் சட்டங்களை மீறுதல் அல்லது படுகொலைகள், பெண்களுக்கெதிரான பாலியல் வல்லுறவுகள், பகற் கொள்ளைகள் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் சாதாரணமான பொதுக் கூட்டங்களை சுயாதீனமானதும் நம்பிக்கை வைக்கக் கூடியதுமான விசாரணைகளின் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்படவில்லை. சுயாதீனம் பற்றிய கருத்து அரசியல் மயமாக்கல் மூலம் இன்று செயலிழந்துள்ளது. விசாரணைக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள பொலிஸார் மற்றும் வேறு விசேட நிறுவனங்களும் அரசியல்வாதிகளும் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இருப்பதும் அரசியல் மயமாக்கல் என்று கருதப்படுகிறது. அரசியல் வாதிகளின் அங்கீகாரம் இன்றி எந்தவொரு முறைப்பாட்டையும் விசாரணை செய்யும் அதிகாரம் இந்த நிறுவனங்களுக்குக் கிடையாது. எந்தவொரு விசாரணையை நிறுத்துவதற்கு அல்லது குறிப்பிட்ட குற்றவாளிகளை சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்கும் பக்கச் சார்பற்ற ஸ்தூல முறையில் விசாரணைகளை நடத்தாமலிருக்குமாறு சில நிறுவனங்களுக்கு கட்டளையிடுவதற்கும் ஆற்றல் பெற்றுள்ளனர். இலங்கையில் வாழும் அனைவரும் இந்நிலைமையை நன்கு அறிவர்.

நம்பத் தகுந்த விசாரணை என்பது குற்றவியல் விசாரணை செயற்பாட்டின் போது பின்பற்றும் இயற்கையான நியமங்களாகும். அதே சமயம் உரிய நியமங்களுக்கு அமைய விசாரணைகளை மேற்கொள்ளலாகும். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட விசாரணை மிகவும் சந்தேகத்திற்கிடமானது. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை எவரும் ஞாபகத்தில் வைத்திருக்கவும் முடியாது. மிகவும் இரகசியமான நுட்பமான குற்றச் செயல்கள் பற்றி ஆராய்ந்து அறிவதற்கு வினைத்திறன் கொண்ட பொலில் மற்றும் விசேட நிறுவனங்கள் செயற்பட்டுள்ளன. வேறு விசேட நிறுவனங்களும் கடந்த காலங்களில் செயற்பட்டுள்ளன என்பதை நாம் அறிவோம். கடந்த 10 ஆண்டுகளில் மிகக் கேலிக் கூத்தான முறையி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே பொலிசார் தமது நற்பெயரை இழந்துள்ளளர். இது நாட்டு மக்களுக்கு இரகசியமானதும் அல்ல. சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் பாரதலக்ஷ்மன் என்போர் பட்டப் பகலிலே பெருந்தெருவில் படுகொலை செய்யப்பட்டனர். (இது நாம் அறிந் இரண்டு சம்பவங்கள் மாத்திரமே. இக்கொலைகள் தொடர்பான விசாரணை-களை மேற்கொண்டு வரும் பொலி-சார் அறிக்கைக்கு மேல் அறிக்கை தயாரித்தாலும் பல்வேறு வகைகளில் இதனை தட்டிக் கழித்து வருகின்றனர். சுயாதீனமாக விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம் தொடந்தும் தமக்கு இல்லை என்பதை இவர்கள் நிருபித்துள்ளனர். இலங்கையில் குற்றச் செயல்கள் தொடர்பாக நியாயமான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்ப்பது குதிரைக் கொம்பாகும்.

பக்கச் சார்பற்ற விசராணை-களை மேற்கொள்வதற்கு பொ-லிஸ் நிறுவனங்களின் ஒத்துழைப்பு மாத்திரம் அல்லாது, சட்டமா அதி-பர் திணைக்களத்தினது உதவி களும் இன்றியமையாதது. இதுவரை காலம் சட்டமா அதி-பர் திணைக்களம் நீதி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்து வந்தது. ஆனால் அண்மைக்காலம் முதல் இத்திணைக்களம் ஜனாதி-பதி செயலகத்தின் அதிகாரத்தின் கீழ் இயங்கி வருகிறது. அரசாங்கத்தின் மனதை நோக வைக்கக் கூடிய சிறு சம்பவமாக இருந்தாலும் அதனையிட்டு நடவடிக்கை எடுப்பதற்கு எது-வித ஆற்றலும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குள் கிடையாது. இது பற்றி ஏற்கனவே பல்வேறு கோணங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கையின் கடந்தகால வரலாற்றில் சட்டமா அதிபர் திணைக்களம் மிகவும் கீர்த்தி பெற்ற ஒரு நிறுவ-னமாகும். ஆனால், இன்று பொலிஸ் நிலையங்களைப் போலவே அதுவும் ஒரு சீரழிந்த நிறுவனமாக உருமாறியுள்ளது.

இது வரை காலம் இலங்கைப் பிரஜைகள் நன்கு அறிந்திருந்த, உண்மையை புரிந்துகொள்ளும் சந்தர்ப்பம், ஐக்கிய நாடுக-ளின் மனித உரிமைகள் பேரவை அங்கீகரித்த பிரேரணை மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையின் அரசியலமைப்பு காரணமாக குற்றவியல் நீதி தொடர்ந்தும் முக்கிய தடையாக அமையும், என்பதை எதிர்காலத்தில் சர்வதேச சமூகம் அறிந்துகொள்ளும் மற்றுமொரு படிப்பினையாகும். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி, சட்டத்தை விட உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளார். நீதிமன்றங்களும் பாராளுமன்றமும் நிறைவேற்று ஜனாதிபதியின் கீழ் செயற்படும் நிறுவனங்களாக உருமாறியுள்ளன. 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் மூலமே இது அமுலாக்கப்பட்டது. நாட்டின் அடிப்படைப் பொது நிறுவனங்கள் செயலிழக்கப்பட்டுள்ளன. இப்பிரகடனம் மிகையாகக் கூறப்படுகின்ற ஒரு சொற்றொடர் என வெளி உலகம் புரிந்துகொண்டாலும் அரசியலமைப்பிற்கான 17வது திருத்தம் மற்றும் 18வது திருத்தம் பற்றிய அனுபங்களை இலங்கை மக்கள் நன்கு அறிவார்கள். அரசியலமைப்பினூடாக ஒரு சட்ட விரோத நிலமையை உருவாக்குகின்ற, நாட்டிற்கு என்ன நடக்கும் என அறிய வேண்டிய கடமையும் வகைப்பொறுப்பும் சர்வதேச சமூகத்திற்கு கிடைக்கும்.

சுருக்கமாகக் கூறின் சுயாதீ-னமானதும் பக்கச் சார்பற்றதும் விசாரணைக்கான உரிமை இந்நாட்டின் பிரதம நீதியரசருக்கே இல்லாத போது, சர்வதேச மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு பக்கச் சார்பற்ற நீதியான தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்க முடியுமா? இது வெறும் பகல் கனவாக அமையமாட்டாது என சர்வதேச சமூகம் எதிர்காலத்தில் கற்றுக்கொள்ளும்.

---

2013 மார்ச் 22ம் திகதி ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட (The UN Resolution) That the world will learn about Sri Lanka in the coming year என்னும் வெளியீட்டின் மொழிபெயர்ப்பு "நல்லாட்சி லங்கா மற்றும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் இணைய தளத்தின் அனுசரணையுடன்.

**சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் பாரதலக்ஷ்மன் என்போர் பட்டப் பகலிலே பெருந்தெருவில் படுகொகை செய்யப்பட்டனர். (இது நாம் அறிந் இரண்டு சம்பவங்கள் மாத்திரமே. இக்கொலைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் அறிக்கைக்கு மேல் அறிக்கை தயாரித்தாலும் பல்வேறு வகைகளில் இதனை தட்டிக் கழித்து வருகின்றனர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Ambassador Eileen Chamberlain Donahoe serves as the U.S. Representative to the Human Rights Council.

# தொடர்ந்தும் இவ்வாறு போக முடியாது

சாகாமல் உயிர் வாழ்தல் அல்லது இருப்பின் (Survival) சார்பில் மறைக்க முடியாத ஆயிரக் கணக்கான மரணங்களை அனுபவ வாயிலாகக் கண்ட சமூகத்தில் நாம் வாழ்கின்றோம். சுபீட்சம் அல்லது ஆசியாவில் மகிமை அல்லது தேசிய உற்பத்தியின் ஏற்றம் பற்றி அல்லது செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான இடைவெளி விரிவடைந்துகொண்டு செல்வதன் காரணமாக பட்டினியைப் போக்க வேண்டிய பெரும்பான்மையினர் வாழும் சமூகத்திலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சிந்தித்தல், மனச்சாட்சி, கருத்துச் சுதந்திரம் தகவல்களைப் பெறும் உரிமை தாம் விரும்பும் சமயத்தை அனுஷ்டித்தல், தாம் விரும்பும் கலாசாரத்தை அனுசரித்தல், தாம் விரும்பும் தொழிலைச் செய்தல் ஆகிய பிரஜைகள் வாழ்க்கையின் முதற்கட்டம் அழிந்தொழிந்து போகின்ற ஒரு சமூகத்திலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மற்றையோரோடு ஏற்படுத்திக்கொள்ளும் உறவுகள். சிவில் நடவடிக்கைகளுக்கான அமைப்புக்களை உருவாக்கிப் பராமரித்தல் ஆகிய சமூக நடவடிக்கைகளைப் பற்றி வாழ்க்கையின் இரண்டாம் கட்டத்திற்கும் மட்டுப்பாடுகள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். (உண்மையான ஜனநாயக ஆட்சி) மனிதர்களின் தனிப்பட்ட வாழ்வை கட்டுப்படுத்தமாட்டாது. சமூக நடவடிக்கைகளே மட்டுப்படுத்தப்படுகின்றன. மனிதர்களுக்கிடையே ஏற்படும் மோதல்களை முகாமைத்துவம் செய்து சமூக அமைதியை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது). இனத்துவ மதக் குழுக்களிடையே பகைமையை உருவாக்கும் ஓர் அடையாளத்தை அரசின் அடையாளமாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தயாராகும் ஒரு சந்தர்ப்பத்திலேயே நாம் வாழ்கின்றோம். நீதிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு சந்தர்ப்பத்திலேயே நாம் சமாதானத்தைப் பற்றி பேசுகின்றோம். இத்தகைய சகல விதமான நோய்களும் உச்சகட்டத்தை அடைந்துள்ள சந்தர்ப்பத்திலேயே நாம் ஜெனீவா மூன்றாம் கட்டத்தை அடைந்துள்ளோம்.

பேராசிரியர்
ஜயந்த செனவிரத்ன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டைய அரசர்களின் காலத்தில் ஆட்சி நடத்தியது போல சர்வதேச சமூகத்திலிருந்து விலகி தனிமைப்பட்டு தான்தோன்றித் தனமாக ஆட்சி நடத்த முடியாது என்பதை அரசாங்கம் தற்போதாவது புரிந்துகொள்ள வேண்டும். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது, பயங்கரமான சம்பவங்கள் ஒன்றுமே நடைபெறவில்லை என்று சர்வதேச சமூகத்தை முட்டாள்களாக்க முடியாது என்பதை இங்கு வலியுறுத்த வேண்டியிருக்கின்றது.**

**ஜெனீவா முதலாவது கட்டம் (விசேட அமர்வு)**

அரசாங்கத்திற்கு சார்பான முறையிலேயே ஜெனீவா முதலாவது கட்டம் முடிவடைந்தது. போதியளவு சான்றாதாரங்கள் இல்லாமையினாலும் அவற்றை தொகுத்துக்கொள்வதற்கு போதிய கால அவகாசம் இன்மையாலும் அரசாங்கம் முன்வைத்த தர்க்கங்கள் நியாயமானவை என பெரும்பான்மை நாடுகள் நம்பின. இந்தியாவும் இதே கருத்தை முன்வைத்தது "பயங்கரவாதத்திற்கு எதிராக" இலங்கையின் யுத்த வெற்றி ஒரு வெற்றியாக கருதப்பட வேண்டும் என ஜெனீவாவில் இலங்கைப் பிரதிநிதி மேற்படி அமர்வின் வெற்றியைப் பற்றிக் கூறினார். ஆனால் 2012 மார்ச் மாதம் இடம்பெற்ற அமர்வின் போது நிலமையில் மாற்றம் ஏற்பட்டது. இலங்கைக்கு எதிரான பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது மாத்திரம் அல்ல எமது அண்டை நாடான இந்தியாவும் இலங்கைக்கு எதிராகவே வாக்களித்தது. அரசாங்கம் முன்வைத்த நியாயங்களிலுள்ள போலித் தன்மையைப் புரிந்துகொள்வதற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் சென்றன. ஆனால், இம்முறை அமர்வின் போது ஜெனீவா நகரில் புணியாற்றும் இந்தியத் தூதுவர் திலிப் சிங் முன்வைத்த பிரகடனம் ஓர் வகையில் ஒரு எச்சரிக்கையாகவே அமைந்தது. அவர் பின்வருமாறு கூறினார். "இழந்த சிவிலியன்களின் உயிர்கள் தொடர்பாகவும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுயாதீனமானதும் நம்பிக்கைக்குரியதுமான ஒரு விசாரணை மூலம் கண்டறியப்பட வேண்டும். வகைப்பொறுப்புக் கூறல் தொடர்பான விடயங்களைப் பற்றி விசாரணை செய்ய வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். இந்நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தக்கூடியதாகவும் அமைதல் வேண்டும்."

இம்முறை இலங்கை அரசுக்கெதிரான பிரேரணையின் உள்ளடக்கத்தைப் பற்றி இலங்கை அரசு துரிதமாகச் செயற்படாவிட்டால் முன்நகர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பின்னிற்க மாட்டோம் என இம்முறை பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய அமெரிக்கப் பிரதிநிதி இறுதியாகக் கூறினார்.

பண்டைய அரசர்களின் காலத்தில் ஆட்சி நடத்தியது போல சர்வதேச சமூகத்திலிருந்து விலகி தனிமைப்பட்டு தான்தோன்றித் தனமாக ஆட்சி நடத்த முடியாது என்பதை அரசாங்கம் தற்போதாவது புரிந்துகொள்ள வேண்டும். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது, பயங்கரமான சம்பவங்கள் ஒன்றுமே நடைபெறவில்லை என்று சர்வதேச சமூகத்தை முட்டாள்களாக்க முடியாது என்பதை இங்கு வலியுறுத்த வேண்டியிருக்கின்றது. இலங்கையின் பெரும்பான்மைச் சமூகத்திற்கு இக்கருத்தை உறுதிப்படுத்த முடிந்தாலும் நாம் இன்று வாழும் அதி தொடர்பாடல் தொழில்நுட்ப யுகத்தில் இவற்றை மூடி மறைப்பதற்கு எவராலும் முடியாது. இயற்கையும் இதற்கு இடமளிக்கப் போவதில்லை. மாத்தளை கூட்டுப் புதைகுழிகள் தொடர்பான சோகக் கதை இதற்குச் சிறந்த உதாரணமாகும். காலம் என்ற மணலின் கீழ் மறைந்திருந்தாலும் தற்செயலான ஒரு சம்பவத்தின் மூலம் இப்புதைகுழிகள் அம்பலத்திற்கு வந்தன, வரலாறு மீண்டுமொருமுறை எம்மை விழித்தெழச் செய்தது. மேற்படிப் புதைகுழியிலுள்ள இளைஞர் யுவதிகளின் உயிர்களுக்கு வகைப்பொறுப்புக் கூறவேண்டியது யார்? அரசாங்கம் தொடர்ந்தும் பிறரை ஏமாற்றும் கைங்கரியங்களை நிறுத்த வேண்டும். அன்று எல்.எல்.ஆர்.சீ ஆணைக்குழுவை நியமித்த போது அதன் அறிக்கை வெளியிடப்படும் போது அவற்றில் சில அம்சங்கள் தமக்குப் பாதகமாக அமையுமென அரசாங்கம் அறிந்திருக்கவில்லை. அது ஒரு பலம் குன்றிய ஆணைக்குழு என நாம் அறிந்திருந்தோம். அரசாங்கத்தின் தேவையை நிறைவேற்றுவதிலேயே ஆணையாளர்கள் செயற்பட்டனர் என்பதனையும் நாம் அறிந்தோம். ஆனால் மேற்படி ஆணையாளர்களினால் உண்மையை முழுமையாக மறைக்க முடியவில்லை. எனவே மக்களுக்குச் சாதகமான பல பிரேரணைகள் ஆணைக்குழு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டன. மிகச் சக்திவாய்ந்த தென்னாபிரிக்காவின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு (TRC) சமர்ப்பித்த பரிந்துரைகளை தென்னாபிரிக்க அரசு அமுலாக்கியது. ஒடுக்கப்பட்டவரினதும் பாதிப்புக்குள்ளானவரினதும் "எதிரி" அரசினுள் கூட்டிணைத்தல் அரசியலமைப்பின் மூலம் இடம்பெற்றது. அந்த அரசியலமைப்பின் முகவாசகம் பின்வருமாறு கூறுகிறது.

"நாம் தென்னாபிரிக்க மக்களாவோம் எமது கடந்த காலத்தில் நிகழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதிகளை நாம் அடையாளம் கண்டோம்

எமது மண்ணின் சுதந்திரத்திற்காகவும் நியாயத்திற்காகவும் பல்வேறு துன்பங்களை அனுபவித்த அனைவருக்கும் சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம்.

அதே சமயம் எமது நாட்டை உருவாக்குவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தோள் கொடுத்த அனைவரையும் நாம் பாராட்டுகின்றோம்.

நம்புங்கள் தென்னாபிரிக்கா பன்மைத்துவத்தில் ஐக்கியப்பட்டு வாழும் அனைவருக்கும் உரித்தான நாடு

இம்முக வாசகத்தில் "எமது நாட்டை உருவாக்குவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தோள் கொடுத்த அனைவரும் குற்றம் சாட்டப்பட்டவர்களே (வெள்ளை இனத்தவர்கள்) இக்குற்றம்சாட்டப்பட்டவர்களை அரசின் பங்காளராக்குவதற்கு அந்த நாடு அஞ்சவில்லை.

போரின் போது விடுதலைப் புலிகள் தரப்பினரை முழுமையாக அழித்தொழித்ததன் காரணமாக தற்போது இந்த அரசிற்கு ஓர் எதிரி கிடையாது. அவ்வாறாயின் எல்.எல்.ஆர். சீ பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு ஏன் அரசு பின்னிற்கின்றது. இவ்வாறு சர்வதேச சமூகம் கேள்விக்குட்படுத்துவதில் தவறு ஏதும் உண்டா? ஒரு புதிய எதிரியை மக்கள் முன்னே எடுத்துக்காட்ட ஆட்சியாளர்கள் முயன்றாலும் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை இது எந்த வகையிலும் பிரயோசனமாகமாட்டாது. ஜனநாயகம் என்ற குடையின் கீழிருந்துகொண்டு மனித நேயத்திற்கு எதிராகவும் ஜனநாயகத்திற்கு எதிராகவும் மனித உரிமைகளுக்கு எதிராகவும் தொடர்ந்தும் செயற்பட முடியாது. அவற்றினுடைய அளவும் எல்லையும் மீறும் போது அவை குடைக்கு வெளியே செல்லும். அப்போது நனையத் தொடங்கிவிடும் இந்நிலையில் தான் குழப்பம் ஏற்படும். இன்று அரசாங்கம் இந்நிலமையையே எதிர்நோக்கியுள்ளது.

மக்களிடமிருந்து கிடைக்கும் மக்கள் ஆணையே ஜனநாயகத்தின் அடிப்படையாகும். ஆனால், அது ஒரு சமூகத்திலிருந்து மாத்திரம் பெறும் ஆணையாகமாட்டாது. ஒரு சமூகத்தை ஏமாற்றி அல்லது பலவந்தமாகப் பெறும் ஆணையும் ஆகமாட்டாது. முன்னைநாள் அரசர்களின் அரசாங்கங்கள் கடவுளிடமிருந்தே ஆணையைப் பெற்றன. எனவே அரசர்களின் ஆட்சிக்கெதிராக சவால் விடுப்பதற்கு பிரஜைகளுக்கு ஆற்றல் இருக்கவில்லை. ஒரு தனி நபரிடம் அத்துமீறிய அதிகாரங்கள் குவிக்கப்படுவதை வல்லாட்சி (Autocracy) என அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு சிறு குழுமம் இணைந்து நடத்தும் ஆட்சி (Oligarchy) ஆட்சி என அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இரண்டு ஆட்சி முறைகளினதும் ஒரு கலவை இன்று இலங்கையில் அமுலில் உள்ளது என்று நான் எண்ணுகின்றேன். இந்த ஆட்சிக்கான மூலாதாரம் வரலாற்றிலிருந்து கிடைக்கிறது. வரலாறு மீதான மோகம் மக்களின் லிபிடோ ஆட்சி (Libido) மூலமும் உற்பத்தி செய்வதற்கு இன்றைய அரசாங்கம் வெற்றி கண்டுள்ளது. எனவே, பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்கள் வரலாற்றிலிருந்து வேறுபடுத்த முடியாதவர்களாக மாற்றப்பட்டுவிட்டார்கள். இந்த இறந்த காலத்தை வணங்கி வழிபடும் சாபம் மீள அவர்கள் பின்னால் பின் தொடரும் என்பது அம்மக்களுக்குப் புரிவதில்லை.

**ஜோன் டேவி பின்வருமாறு கூறுகிறார்:**

"தனிநபர் ஒருவர் நிகழ்காலத்திலேயே வாழ முடியும் நிகழ்காலம் என்பது இறந்த காலத்திற்கு பின்பு வெறுமனே வந்து சேர்வது அல்ல. அது இறந்த காலத்தை கைவிட்டு வந்த வாழ்க்கையாகும். இறந்தகால அறிக்கைகளையும் சின்னங்களையும், தொல்பொருள்களையும் இன்று முக்கிய மூலப்பொருட்களாக மாற்றியமைப்பது தவறு. இது இறந்த காலம், நிகழ்காலத்தின் போட்டியாளராக மாற்றுவதும், நிகழ்காலம் இறந்த காலத்தின் அர்த்தமற்ற அனுசரணையாளராக மாற்றுவதற்கான நடவடிக்கையுமாகும்."

எனவே உண்மை நிலமைக்கு அரசாங்கம் முகம்கொடுக்க வேண்டும். சர்வதேச சமூகத்திடமிருந்து தண்டனை பெறும் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இத்தகைய தண்டனை மூலம் சாதாரண பொது மக்களே மென்மேலும் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள். இதனை கட்டுரையின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டுள்ளோம். அவ்வாறிருப்பினும் பகைமை ∴போர்பியா அல்லது இறந்தகால பெருமையைப் பிதற்றிக் கொண்டிருப்பதன் மூலம் மாத்திரம் மக்கள் எதிர்நோக்கியுள்ள கொடூரமான அடக்குமுறையை அவர்கள் தொடர்ந்தும் சகித்துக்கொள்ள முடியாது. இதனை ஆட்சியாளர்கள் நன்கு அறிவார்கள்.

**"போரின் போது விடுதலைப் புலிகள் தரப்பினரை முழுமையாக அழித்தொழித்ததன் காரணமாக தற்போது இந்த அரசிற்கு ஓர் எதிரி கிடையாது. அவ்வாறாயின் எல்.எல். ஆர்.சீ பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு ஏன் அரசு பின்னிற்கின்றது. இவ்வாறு சர்வதேச சமூகம் கேள்விக்குட்படுத்துவதில் தவறு ஏதும் உண்டா? ஒரு புதிய எதிரியை மக்கள் முன்னே எடுத்துக்காட்ட ஆட்சியாளர்கள் முயன்றாலும் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை இது எந்த வகையிலும் பிரயோசனமாகமாட்டாது."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source : www.vikalpa.org

## ஜெனீவாவும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல்

**பரிந்துரைகளை அமுல்படுத்துதல் LLRC ஆணைக்குழு அதன் வரலாற்று புகழ்மிக்க பணியினை போதியளவு கவனியாது புறந்தள்ளுவதற்கு சில துறைகள் முனைந்தன. இவ் அறிக்கையை வாசித்துப் பார்க்கும் போது ஆகக் குறைந்தது அவ்வாறு வெளிவந்த குறைபாடுகளும் ஒன்றிணைந்த சில இணக்கப்பாடுகள் இன்மையும் நியாயமானவை என்பது தெளிவாகிறது.**




**ஹரீம் பீரிஸ்**

றோயல் கல்லூரியின் ரக்பி விளையாட்டுக் குழுவின் முன்னை நாள் தலைவரும், ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு சார்பான ஒரு நண்பருமான முன்னால் சட்டமா அதிபர் சீ.ஆர்.டிசில்வா அண்மையில் அவரே தலைமை தாங்கிய சட்டமா அதிபர் திணைக்களத்தின் தற்போதைய உயர் அதிகாரிகள் சிலருடன் ஜெனீவாவுக்குப் புறப்படவுள்ளனர். இலங்கையினதும் அதன் போருக்குப் பின்னரான - யுத்தகால தேசிய நல்லிணக்கம் தொடர்பாக அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணைக்கு எதிராகத் தோற்றுவதற்காக ஜெனீவா நோக்கிப் பயணிக்கும் போது உண்மையிலேயே தடுமாறுவார்கள்.

மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த நாட்டை அழிவுக்குட்படுத்திய, இனங்களை பிளவுபடச் செய்த, யுத்தத்தின் இறுதியில் அதனுடன் தொடர்பான விடயங்களை கண்டறிவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்த "கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவிற்கு திரு.சீ.ஆர்.டிசில்வா தலைமை தாங்கினார்." அவருடன் மேலும் முக்கியமான முன்னைநாள் உயர் அரச அதிகாரிகள் சிலரும் இவ் ஆணைக்குழுவில் உள்ளடங்கியிருந்தனர். இவ் விடயங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் தனக்கு அறிவுரை வழங்குவதற்காக அவரது நிபுணர் குழுவை நியமித்ததன் பின்பே, இவ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. நாடு முழுவதும் நடாத்தப்பட்ட பகிரங்க புலனாய்வுச் சபைகள், எழுத்துமூல பிரதிநிதித்துவங்கள் மற்றும் யுத்தம் நிலவிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட களப் பயணங்கள் என்பவற்றின் பின்பு ஓராண்டிற்கும் மேற்பட்ட காலத்திற்குப் பின்னர் இவ் ஆணைக்குழு அதன் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தது.

பிரதானமாக இப் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட பிரேரணைகள் சென்ற ஆண்டு (2012) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின் போது சமர்ப்பிக்கப்பட்டன. இப் பிரேரணைகள் கவனத்திற் கொள்ளப்படுவதனை தடுக்கும் வகையில் நூற்றுக்கும் அதிகமான நபர்களைக் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்றை ஒரு சுற்றுலாப் பயணமாக ஜெனீவாவிற்கு அனுப்புவதையே இலங்கை அரசாங்கம் மேற்கொண்டது. அமெரிக்காவின் பிரேரணை குறிப்பிடத்தக்க மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. இந்தியாவும் அப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்தமை அன்று முக்கியம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையில் திரு. லலித் வீரதுங்க மற்றும் மொஹான் பீரிஸ் உள்ளிட்ட அக் குழு கண்டனத்திற்குள்ளாகும். அது அரச ஊடகங்கள் மற்றும் அரச பிரச்சாரங்கள் மூலம் வழங்கப்படும் தகவல்கள் கண்மூடித்தனமாக விசுவாசிக்காதவர்கள் இணங்கக் கூடிய ஒரு நிலைப்பாடாகும்.**

அப் பிரேரணையை முன் கொண்டு சென்று இவ் ஆண்டிலும் சமர்ப்பிக்கப்படும் புதிய பிரேரணை இலகுவாக நிறைவேற்றப்படும். கடந்த ஆண்டைப் போல் இந்த ஆண்டு பாரிய ஒரு முயற்சியை மேற்கொள்ள அரசு தீர்மானிக்கவில்லை. அதற்காக பெருந்தொகையானவர்கள் இலங்கையிலிருந்து அனுப்பப் படவுமில்லை. எவ்வாறாயினும் கடந்த ஆண்டைப் போலவே இவ் ஆண்டும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் அதன் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறே சர்வதேச சமூகம் நம்மைக் கேட்டுக் கொண்டது. ஆயினும் அவ்வாறு செயற்படாது நழுவிச் செல்ல ராஜபக்ஷவின் நிர்வாகம் மேற்கொள்ளும் முயற்சியானது அவ் அறிக்கையை தயாரித்த சீ.ஆர்.டிசில்வா உள்ளிட்ட நிபுணர்களின் தன்நம்பிக்கை இழப்புக்குக் காரணமாயமைவதுடன் நாட்டின் சுய நினைவுடைய மக்கள் மத்தியிலும் ஒரு புதிரை உண்டுபண்ணுவதாயுள்ளது.

தற்போது இவ் அறிக்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒரு விசேட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளரும் தேசிய சிவில் சேவையின் தலைமை அதிகாரியுமான லலித் வீரதுங்கவே இதில் தலைமை வகிக்கின்றார். இவர்கள் பல நாட்கள் முயற்சி செய்து குறித்த பரிந்துரைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரித்தனர். இன்றைய பிரதம நீதியரசரான (அவரது நியமனத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் முன்னைநாள் பிரதம நீதியரசர் பகிரங்கமாக அந் நியமனத்தை மறுப்பதனாலும்) மொஹான் பீரிஸ் மற்றும் இவ் விசேட குழு ஆகியோர், கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பாரிய முன்னேற்றறத்தைக் கண்டுள்ளதென கூறுகின்றனர். ஆயினும் திரு. வீரதுங்க மற்றும் அவரது குழு, அவர்களது செயற்பாட்டுத் திட்டம், அவர்கள் தாமாகவே கூறிக் கொள்கின்ற முன்னேற்றம் என்பவற்றுடன் சர்வதேசம் இணங்க மறுக்கிறது. இது தொடர்பான தகவல்களை தெளிவுபடுத்தும் ஒரு திறமையான வேலைத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் பிரசுரங்கள் என்பன வெளியிடப்பட்டுள்ளன. இச் செயற்பாட்டுத் திட்டத்தினுள் ஆணைக்குழுவின் பிரதான மற்றும் அடிப்படையான பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் சொல்லப்படுகின்ற இவ் உத்தேச செயற்பாடுகள் என்பவற்றுக்கிடையே பாரதூரமான ஒற்றுமையின்மை உள்ளதாகவும் பிரச்சினைக்குரிய தீர்வோ அதற்கான எந்தவொரு மறுசீரமைப்புக்களோ மேற்கொள்ளப்படவில்லை எனவும் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் தற்போதைய நிலைமைகளை மாற்றுவதற்குப் பதிலாக அவற்றை உள்ளவாறே பேணிச் செல்லவும் அவ்வாறான ஆய்வுகள் மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளன. ஆகவே பிரதானமாக பார்க்குமிடத்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையில் திரு. லலித் வீரதுங்க மற்றும் மொஹான் பீரிஸ் உள்ளிட்ட அக் குழு கண்டனத்திற்குள்ளாகும். அது அரச ஊடகங்கள் மற்றும் அரச பிரச்சாரங்கள் மூலம் வழங்கப்படும் தகவல்கள் கண்மூடித்தனமாக விசுவாசிக்காதவர்கள் இணங்கக் கூடிய ஒரு நிலைப்பாடாகும்.

எவ்வாறாயினும் இலங்கை பற்றிய பிரேரணை தொடர்பாக எழுந்துள்ள அரசியல் ரீதியான விவாதத்தின் போது இலங்கை தொடர்பாகவும் இலங்கை மக்கள் தொடர்பாகவும் இரண்டு பிரதான விடயங்கள் உள்ளடக்கப்படுகிறது. அவையாவன, (1) இலங்கையின் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய தற்போதைய நிலைமை யாது? (2) போருக்குப் பின்னரான தேசிய நல்லிணக்கம் தொடர்பாக இலங்கை அடைந்துள்ள மேம்பாடு யாது? என்பனவாகும்.

**1. இலங்கையின் அடிப்படை மனித உரிமைகள் துறையின் தற்போதைய நிலைமை யாது?**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தற்போது கொண்டுவரப்படும் புதிய பிரேரணையில் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவை அரசின் பாதுகாப்புப் பிரிவைப் பயன்படுத்தி அரசியலமைப்புச் சட்டவிரோதமாக (உயர் நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டவாறு) நீக்கப்பட்ட சம்பவம் குறிப்பிடப்படுகிறது. சுதந்திரமான ஒரு நீதிமன்றம் என்பது சட்டவிரோத அரச அதிகாரத்தின் முன் பெரும்பாலும் ஒரு குடிமகனின் உரிமைகளைக் காக்கும் இறுதியான காப்பரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆகும். ஆவ்வாறே அடிப்படை உரிமை தொடர்பான முறையீடு என்பது குடிமகன் வசமுள்ள முக்கியமானதும் சட்ட ரீதியானதுமான பாதுகாப்பாகும். அது பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம், அரச மருத்துவர்களது சங்கம், சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள், சித்தரவதைக்குட்பட்டவர்கள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள், அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் காணிகளை இழந்தவர்கள் ஆகிய அனைவருக்கும் பொதுவானவையாகும். இலங்கை என்பது அரச தரப்பினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு மனித உரிமை மீறல்கள் அற்ற ஒரு தேசம் என தற்போது ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள சட்டமா அதிபதித் திணைக்களம், எமக்குக் கூறலாம். எவ்வாறாயினும் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வெளிநாடுகளுக்கு இடம் புலம்பெயர்ந்தவர்களினால் தற்போது மெது மெதுவாக வெளியிடப்படுகின்ற, நீதிமன்றத்தினால் ஒரு சாட்சியாக ஏற்றுக் கொள்ளப்பட முடியுமான அனுபவங்கள் தொடர்பான விளக்கமான தகவல்களின் முன் இலங்கை அரசாங்கம் சார்பாக முன்னிற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நீண்டகாலத் தீர்விற்கு தாக்குப் பிடிக்காது.

**2. கற்ற பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தலும் தேசிய நல்லிணக்க மேம்பாடும்.**

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதே வெளியிடப்பட்ட இடைக்காலப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் கரிசனை காட்டவில்லை, என்பதனை அன்று அவ் ஆணைக்குழு கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையிலும்கூட அதன் அங்கத்தவர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்தனர். இன்றும்கூட அவர்களுக்கு தமது கருத்துக்களை வெளியிட அனுமதியிருப்பின் தமது இறுதிப் பரிந்துரைகளை அரசாங்கம் நிறைவேற்றப்படாது தவிர்த்துக் கொள்வது பற்றி அவர்கள் அதிருப்தி கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. யுத்தம் முடிந்து மூன்று ஆண்டுகள் சென்றபோதும் வடக்கின் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவில்லை. அதற்கான ஒரேயொரு காரணம் அத்தேர்தலில் அரசாங்கம் தோல்வியடையுமென்ற நம்பிக்கையாகும். காணாமற் போனவர்கள் தொடர்பான முக்கிய பிச்சினைகள் பற்றி பாதிக்கப்பட்டவர்களை அடிப்படையாகக் கொண்ட நல்லிணக்க செயற்பாடுகள் எதுவும் இல்லை என்று கூறலாம். யுத்தத்தினால் விடுதலையானவர்கள், யுத்தத்தினால் அநாதையான சிறுவர்கள், ஆண்களில்லாத குடும்பங்கள் மற்றும் ஆயுதங்களால் அங்கவீனமுற்றோர் போன்றவர்களுக்கான வாழ்வாதாரத்திற்காக அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு தவிர்ந்த அரசாங்கத்தின் உதவிச் செயற்றிட்டங்கள் எதுவுமில்லையென்றே கூறலாம். முன்னாள் LTTE உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளித்ததாக அரசாங்கம் பெருமிதம் கொள்வதுடன் 500 க்கும் அதிகமான தடுத்துவைக்கப்பட்டோர்கள் (10 வருடங்களுக்கும் மேலாக) வழக்குத் தொடரப்படாமல் அல்லது குற்றவாளியாக்கப்படாமல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இன்னும் கைதிகளாக உள்ளனர். பெரும்பாலும் அவர்கள் செய்த குற்றமாக இருப்பது யாதெனில் LTTE இயக்கத்துடன் தொடர்பான உறவினர்கள் பற்றிய தகவல்களை அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமை அல்லது அவ்வாறனவர்களுக்கு உணவு, பானங்கள் வழங்கியமை அல்லது பாதுகாப்பை வழங்கியமை என்பனவாகும். முன்னாள் LTTE தலைவர்களான கருணா, கே.பீ. போன்றவர்களுக்கு அரசாங்கம் காட்டுகின்ற உன்னத கருணையை LTTE ஆதரவாளர்களுக்கோ, LTTE அமைப்பினால் வழிதவறிய பயங்கரவாத இயக்கதிற்குப் பழியான வறிய தமிழ்க் கிராமவாசிகளுக்கோ அரசாங்கம் வழங்கவில்லை.

லலித் வீரதுங்க மற்றும் மொஹான் பீரீஸ் குழு கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அவற்றின் யதார்த்தத்துடன் துரிதமாகவும் பரிபூரணமாகவும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் இலங்கையினதும் அங்கு வாழும் அனைத்து மக்களதும் எதிர்காலம் இதனை விட சுபீட்சமாக இருந்திருக்கும். ஜெனீவாவில் உலகம் நமக்குச் சொல்வது இதனைவிட வேறு ஒன்றுமில்லை.

அனுசரணை "நல்லாட்சிக்கான இலங்கையும் மாற்றுக் கருத்துக்களும்"



**கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதே வெளியிடப்பட்ட இடைக்கால பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் கரிசனை காட்டவில்லை, என்பதனை அன்று அவ் ஆணைக்குழு கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையிலும்கூட அதன் அங்கத்தவர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்தனர். இன்றும்கூட அவர்களுக்கு தமது கருத்துக்களை வெளியிட அனுமதியிருப்பின் தமது இறுதிப் பரிந்துரைகளை அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படாது தவிர்த்துக் கொள்வது பற்றி அவர்கள் அதிருப்தி கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source: www.asianews.it

# ஜெனீவா 2013 இலும் அதற்கு அப்பாலும்:

## அவசரச் செயற்பாடுகளுக்காகக் குரல் கொடுத்தல்

இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களுடன் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. உண்மையில் இது இலங்கையர்கள் அனைவரும் பெற்றுக் கொண்ட வெற்றியாகும்.

இனங்களுக்கிடையே ஒற்றுமையும் சமாதானமும் ஏற்பட வேண்டுமென எதிர்பார்க்கும் ஒவ்வொரு குடிமகனைப் போலவே நீதி கிடைக்க வேண்டுமெனவும், குற்றம் புரிவோர் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கும் உலகின் ஏனைய நாடுகளின் உதவியும் எப்போதும் உள்ளதென்பது தற்போது தெளிவாகியுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் பிடிவாதமான செயற்பாட்டினால் சர்வதேச சமூகம் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளது என்பது இதன்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதுடன் இலங்கையில் மாற்றமொன்று ஏற்பட வேண்டும் எனக் குரல் கொடுப்பவர்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இம்முறை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மூலம், கடந்த மார்ச் 2012 தொடக்கம் மார்ச் 2013 வரை ஏற்பட்டுள்ள பாரிய சில மாற்றங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்குச் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டப்பரிந்துரைகள் என்பன மீறப்படுதல் அதிகரித்துச் செல்கின்ற நிலைமையும், அதற்காக அரசாங்கத்தினால் நடாத்தப்பட வேண்டிய பக்கசார்பற்ற, புலனாய்வுகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளும் உள்ளடங்கும். அவ்வாறே இலங்கையில் அதிகரித்து வரும் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்ட விதிகள் மீறப்படுதலும் அது தொடர்பாக நடாத்தப்பட வேண்டிய புலனாய்வுகள் பற்றிய மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையினை ஏற்றுக்கொள்வதும் உள்ளடங்குகின்றது.



**எம்.ஏ. சுமந்திரன்**
பாராளுமன்ற உறுப்பினர்
தமிழர் தேசியக் கூட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட அப்பிரேரணை கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் இலத்தின் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளும் தெளிவாக ஆதரவளித்தமையினால் பெரும்பான்மை சர்வதேச சமூகத்திடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது.**

மேலும் இம்முறை பிரேரணை அங்கீகாரம் பெறுதல் என்பது இற்றைப்படுத்தப்பட்ட மேற்குறித்த பிரேரணைகள் மார்ச் 2012 முதல் அடைந்துகொண்டுள்ள முன்னேற்றத்துக்கான நல்ல அறிகுறியாகும்.

அதிலுள்ள இன்னொரு முக்கிய விடயம் யாதெனில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட அப்பிரேரணை கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் இலத்தின் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளும் தெளிவாக ஆதரவளித்தமையினால் பெரும்பான்மை சர்வதேச சமூகத்திடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. சிறப்பாக எமது அயல்நாடான இந்தியாவும் அதற்கு ஆதரவாக வாக்களித்ததுடன் தென்கொரியாவும் அதனோடு இணைந்து கொண்டது. அதுமட்டுமன்றி இலங்கையின் நெருங்கிய நண்பனாகக் கருதப்படும் ஜப்பான் மற்றும் மலேசியா என்பன வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

நடுநிலைமைக்கு, நியாயத்திற்கு, ஜனநாயகத்திற்கு, சுதந்திரம் மற்றும் சமாதானத்திற்கு மதிப்பளித்தல் வெறுமனே மேற்குலகிற்கு மட்டும் வரையறுக்கப்பட்ட ஒரு மனப்பாங்கு அல்ல என்பதுடன் பிரேரணையும் மேற்கினது ஒன்றல்ல. இதன்மூலம் வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்கள் சர்வதேச பெறுமதி மிக்கதாகும். ஆகவே இதற்கு முழு உலகினதும் ஆதரவு கிடைத்தமை ஒரு புதிரல்ல. "சியராலியோன்" போன்ற ஆபிரிக்க நாடுகளும் ஆதரவளித்தன. சியராலியோன் பிரதிநிதி, பத்து வருட சிவில் யுத்தத்திலிருந்து மீண்டு நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் வெற்றிபெற்றுள்ள ஒரு நாடு என்ற ரீதியில் இப்பிரேரணைக்கு தமது நாடு ஆதரவு வழங்குகிறது எனக் கூறினார். 2009 ஆம் ஆண்டில் இலங்கைக்கு உதவிய இந்தியா தனது நாட்டு மக்களின் மனோநிலையை வெளிக்காட்டி இம்முறை அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவளித்துள்ளது. பெரும்பான்மை ஜனநாயக உலகை விட்டு விலகி குறிப்பிட்ட ஒரு சில நாடுகளின் ஒத்துழைப்பு மீது நம்பிக்கை கொள்ளும் இவ்வரசாங்கத்தின் தந்திரோபாயங்கள் காலாவதியாகிச் செல்வதனால் சர்வதேசப் போக்குகள் மூலம் வெளிப்படுகின்ற அறிகுறிகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயற்படுதல் தற்போதைய அரசாங்கத்தின் புறந்தள்ள முடியாத ஒரு பொறுப்பாகும்.

ஜனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வினைத்திறனுடைய செயன்முறையொன்றை முன்னெடுத்தல் தற்போது இலங்கை வாழ் மக்களின் மிக அவசரத்தேவையாக மாறியுள்ளது. அவ்வாறு நாம் செய்யாதுவிடின் மதரீதியானதும், இனரீதியானதுமான கொடூர முறுகல் மற்றும் குணப்படுத்த முடியாத பழைய வடுக்கள் மற்றும் தற்போது காணப்படாத சட்டத்தின் ஆதிக்கம் இறுதியில் மிகக் கொடூரமான பிரதிவிளைவுகளை ஏற்படுத்தும் நிரந்தர இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட சட்டத்துடன் அன்றாடம் தனது வாழ்க்கையைக் கழிக்கும் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழர்கள் மற்றும் தமிழ் பேசும் ஏனைய இனங்களின் மனநிலையை நோக்கும் போது அவை மிகவும் வருந்தக்கூடியவையாகும். சமீப காலமாக சமாதானமாக வாழும் முஸ்லீம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாத மற்றும் மதவாத குழப்பங்கள் 1983 ஆம் ஆண்டின் "கறுப்பு ஜூலை" நினைவுகளைப் புதுப்பிக்கின்றன. இவை தமது தேசத்திற்குரியவர்களை இழந்து துயரில் இருந்து எழுச்சி பெற்று வடக்கில் மட்டுமன்றி தென்னிலங்கை மக்களும் அரசாங்கத்திற்கு எதிராகக் குழப்பங்களை மேற்கொண்ட நிலைமையை நியாயப்படுத்துகின்றன. இதனாலேயே அனைத்து இனங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

ஆகவே, நாம் குரல் கொடுப்பது பழி வாங்குவதற்காக அல்ல. சமாதானத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதற்காகவே குரல் கொடுக்கின்றோம். பலிவாங்குவதற்கும் நீதிகோரி நிற்பதற்குமிடையே தெளிவான ஒரு வித்தியாசமுள்ளது. பழிவாங்குவதற்கு மட்டும் முன்வருபவர்கள் இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களைக் கருத்திற்கொள்ள மாட்டார்கள். ஆயினும் நீதியைக் கோரி நிற்பவர்கள் உண்மையை வெளிக்கொணர்வதை வேண்டி, நிற்கின்றனர். பழிவாங்கும் எண்ணமுடையோர் இறந்த காலத்தை மீட்டிப் பார்ப்பது பதிலுக்குப் பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்காகும் என்பதுடன் நீதியை வேண்டி நிற்போர் இறந்த காலத்தைப் பற்றிப் பார்ப்பது எதிர்காலத்தைச் சிறந்த முறையில் முன்னெடுப்பதற்காகும்.

ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவை தெளிவாகத் தனது நிலைப்பாட்டை எடுத்துக் காட்டியுள்ளது. கற்ற பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டியதுடன் மனித உரிமைகள் மற்றும் சர்வதேசச் சட்ட விதிகள் என்பவற்றை மீறுதல் தொடர்பான விசாரணைகளும் நடாத்தப்படல் வேண்டும். நாம் இதற்கு முன்பு பல தடவைகள் கூறியது போன்று, தற்போதும் இவ்வாறான ஒரு விசாரணை சுதந்திரமான மற்றும் சர்வதேச அவதானிப்பினூடாக நடாத்தப்பட முடியுமென கூறுகின்றோம்.

அதற்கேற்ப தற்போதைய அரசாங்கத்திற்கு இரண்டு மாற்று வழிகள் உண்டு. அதில் ஒன்று சரியானதைச் செய்வதைத் தெரிவு செய்ததாகும். மற்றையது தீர்மானிக்கும் உரிமையினை இழப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source: http://vimeo.com

### சிவில் அமைப்புகள்

# LLRC நடைமுறைப்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்

நிமல்கா ஃபர்னான்டோ

**சிவில் சமூக அமைப்புக்களின் ஒரு செயற்பாட்டாளராக LLRC பிரேரணைகள் தொடர்பாக உங்களது கருத்து.**

ஜெனிவாப் பிரேரணைகள் திடீரென உருவாகிய ஓர் ஆவணம் அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். இது ஓரிரு ஆண்டுகளுக்குள் எழுந்த ஒரு பிரேரணையும் அல்ல. இது 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் செயற்பாடு தொடர்பாக ஜெனீவாவில் ஏற்பட்ட பேச்சுக்களின் ஒரு விளைவு. பாதிக்கப்பட்டவர்கள் ஐக்கியநாடுகளின் மனித உரிமைகள் பொறிமுறையினுள் ஏற்படுத்திக்கொண்ட செயற்பாட்டின் மூலம் ஏற்படுத்திய தாக்கங்களின் ஒரு சந்தர்ப்பம். 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த மனித உரிமைகள் சட்ட மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான ஓர் பிரேரணை முன் வைக்கப்பட்டது. அவ்வாறான ஒரு பிரேரணை தேவையற்றதெனக் கூறி இலங்கை அரசு தாமாகவே ஒரு பிரேரணையை உருவாக்கி நிறைவேற்றிக் கொண்டது. இது கோழி திருடிய கள்வன் கூட இருந்து உலாவுவதைப் போன்றதாகும். 2009 - 2010 காலகட்டத்தில் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு B தரத்திற்கு கீழிறக்கப்படுதல், மூதூரில் மனிதாபிமான உதவி வழங்கும் நிறுவனத்தின் 17 உறுப்பினர்களைக் கொலை செய்தல், திருகோணமலையில் 5 அப்பாவி மாணவர்கள் கொலை செய்யப்படல் போன்ற சம்பவங்கள் பற்றி சிந்திக்குமிடத்து பிரேரணையொன்று நிறைவேற்றப்படாதிருந்தாலேயே அது ஆச்சரியத்திற்கு உரியதாகும்.

ஐக்கிய நாடுகள் தாபனத்திற்குள்ளும் இராஜதந்திர ரீதியாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட நிலைமைகளைப் பொறுத்தவரை இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டில் போதுமானதாக அமையவில்லை. இக் கால கட்டத்தில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் பங்கிமூன் நிபுணத்துவ குழுவொன்றை நியமித்தார். நாம் அறிந்த மட்டில் இலங்கையின் வடக்கே சென்றாலும் கிழக்கே சென்றாலும் காணாமற் போனவர்கள் பற்றிய அழுகுரல்கள் கேட்கின்றன. பாதிக்கப்பட்டவர்கள் காணாமற் போன தமது பிள்ளைகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாகவும் பெண்கள் கற்பழிக்கப்படல் தொடர்பாகவும் ஏராளமான செய்திகள் உள்ளன. இவை இலங்கைக்கு மட்டும் வரையறுக்கப்படும் தகவல்கள் அல்ல. இத் தகவல்கள் எவ்வாறு வெளி உலகுக்குச் சென்றன என்பது பற்றி பல்வேறு கருத்துக்களை நாம் கூறமுடியும். ஆயினும் எம்மிடமும் தகவல்கள் உள்ளன. தற்போது இத் தகவல்கள் ஐக்கிய நாடுகள் தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சனல் 4 திரைப்படம் தொடர்பாக இலங்கையிலிருந்து சென்ற ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உத்தியோகபூர்வ அதிகாரிகள் சாட்சியமளித்தார்கள். தமது கடமைகளைக்கூட தாம் ஒழுங்காக மேற்கொள்ளவில்லையென அவர்கள் கூறினார்கள். அண்மைய சனல் 4 இல் தாம் தொடர்ந்தும் இலங்கையில் இருந்திருக்க முடியும் ஆனால் தம்மையும் தாக்கினார்கள் என்பதாகவும் தாம் நின்ற இடங்களுக்கும் குண்டு வீசினார்கள் என்றும் அவர்களாகவே கூறுகின்ற ஒரு நிலைமையில்தான் செயலாளர் பங்கிமூன் அவர்கள் சான்றாதாரங்கள் மற்றும் பிரேரணைகள் என்பன சகிதம் நிபுணத்துவ குழுவொன்றை நியமித்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். இவ்வறிக்கை மூலம் இவற்றை ஆய்வு செய்வது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு நிலைமை காணப்படுகிறது. போர்க் குற்றங்கள் நிகழ்ந்ததற்கான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. பாரதூரமான மனித உரிமைகள் மீறப்பட்டமைக்கான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

அவ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடனேயே "இல்லை நாம் அவ் அறிக்கையை ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என இலங்கை அரசு கூறியது. நாம் இவ்விடயங்களின் உண்மையைக் கண்டறிவோம்" என்று கூறியே கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவினை நியமித்தது. அவ் ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. அவ் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக எமக்கு சில சந்தேகங்கள் இருந்தன. அதனை வாசித்துப் பார்க்கும் போது அதில் எம்மால் பல ஆண்டுகளாக சனநாயகம் மனித உரிமைகள், இராணுவமயப்படுத்தல், அதிகாரப் பரவலாக்கம் என்பன பற்றி கூறிவந்த பல விடயங்கள் வெளிக்கொணரப்பட்டிருந்தது. அவர்களே விடையும் கூறியுள்ளனர். சாட்சிகளை விசாரித்து அவர்களே பதிலளித்துள்ளார்கள். இலங்கையின் நிர்வாகத் துறையின் முன்னாள் உயர் அதிகாரிகள் குழுவொன்றும் முன்னைய சட்டமா அதிபருமே (LLRC) அறிக்கையை வழங்கினர். அப்போது இவ்விடயங்களை நாம் அவர்களுக்கு எழுதிக் கொடுக்கவில்லை.

மனித உரிமைகள் மீறப்படுதல் தொடர்பான விடயங்கள் பற்றியும், போர் தொடர்பான காரணங்களையும் அரச படையினர் மூலம் நிகழ்ந்த குற்றங்கள் மற்றும் பிளவுகள் என்பனவோ போரின்போது பொதுவாக இடம்பெறும் விடயங்களைக் கண்டறிவது தொடர்பாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. தற்போதாவது மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகளுக்குப் பதில் வழங்குமாறே நாம் கேட்டுக்கொண்டோம். நாம் LLRC அறிக்கையைக் கபடமின்றி ஏற்றுக்கொண்டோம். மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் என்ற ரீதியிலும் மனித உரிமைகள் அமைப்புக்கள் என்ற ரீதியிலும் மக்கள் சார்பாக நாம் சொன்ன விடயங்கள் மற்றும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும் கோட்பாடுகள் என்பன உள்ளடங்கிய குற்றச்சாட்டுக்களுடன் கூடிய ஓர் அறிக்கை என நாம் ஏற்றுக் கொண்டோம். அதன்பின் இதனை நடைமுறைப்படுத்துமாறு நாம் கோரினோம். அவ் அறிக்கையை பகிரங்கமாக



**மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் என்ற ரீதியிலும் மனித உரிமைகள் அமைப்புக்கள் என்ற ரீதியிலும் மக்கள் சார்பாக நாம் சொன்ன விடயங்கள் மற்றும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும் கோட்பாடுகள் என்பன உள்ளடங்கிய குற்றச்சாட்டுக்களுடன் கூடிய ஓர் அறிக்கை என நாம் ஏற்றுக் கொண்டோம். அதன்பின் இதனை நடைமுறைப்படுத்துமாறு நாம் கோரினோம். அவ் அறிக்கையை பகிரங்கமாக ஆங்கிலத்தில் வெளியிட பல மாதங்கள் சென்றன. LLRC அறிக்கை ஆரம்பத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்படவும் இல்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**குறிப்பாக இலங்கையில் மனித உரிமை மீறல்களாகும். காணாமற் போதல், சட்ட விரோதக் கொலைகள், துன்புறுத்தல்கள், ஊடகச் சுதந்திரமின்மை, ஒன்றுகூடும் சுதந்திரம், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தடைகள் என்பன தொடர்பான விடயங்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர் மீதான தாக்குதல்களும், பயமுறுத்தல்களும், சட்டம் ஒழுங்கு என்பன தடைப்படல் தொடர்பான விடயங்கள், மத ரீதியான மற்றும் பின்பற்றுதல் தொடர்பான விடயங்கள் மீது மேற்கொள்ளப்படும் அநீதிகள் என்பன இன்னமும் இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

ஆங்கிலத்தில் வெளியிட பல மாதங்கள் சென்றன.

LLRC அறிக்கை ஆரம்பத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்படவும் இல்லை. அவ் அறிக்கையில் எதனைச் செயற்படுத்துவதென குறிப்பிடப்பட்டிருக்கவுமில்லை. 2013 ம் ஆண்டில் ஓர் பிரேரணை கொண்டு வரப்போவதாக அவ் அறிக்கை கோவையிடப்படும் சந்தர்ப்பம் வரை இலங்கையின் நிலைமை தொடர்பான ஒரு கற்பனைச் சித்திரம் எழுகிறது. இது ஒரு சிறந்த கற்பனைச் சித்திரமன்று. ஏனெனில் இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினைகளாக அடையாளங்காணப்பட்ட பல விடயங்கள் காணப்படுகின்றனவென 2013 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் கூறப்பட்டன.

**இப் பிரேரணையின்மூலம் எவ்வாறான தாக்கங்கள் ஏற்படலாம்?**

இப் பிரேரணையை நாம் ஆராயும்போது பிரதானமாக மனித உரிமைகள் பற்றிய செயற்பாடு தொடர்பான கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இதில் பிரதானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விடயங்களைப் பற்றி நாம் பார்க்குமிடத்து நல்லிணக்கம் மற்றும் வகை பொறுப்புக் கூறல் போன்ற விடயங்களே முக்கிய தொனிப்பொருளாகும். நல்லிணக்கம் மற்றும் வகைப் பொறுப்புக் கூறல் ஆகிய பிரதான தொனிப்பொருளின்கீழ் அடிப்படை உரிமைகள் முற்றுமுழுதாக அனைத்து மக்களினாலும் அனைத்து மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டிய ஒரு பொறுப்பாக குறிப்பிடப்படுகிறது. அதனை அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அடுத்ததாக அவர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கூறும் இன்னுமொரு விடயம் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு எம்மால் நடவடிக்கை மேற்கொள்ள முடியுமாயினும் அது சர்வதேச சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம், அகதிகள் தொடர்பான சட்டம் என்பவற்றுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். இவ்வாறுதான் மனித உரிமைகள் தொடர்பாக முக்கியமாக இதில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு தொடர்பான விடயம் தேவை என்பதும் அதற்காக ஜனாதிபதி அவர்களினால் பல்வேறு கால கட்டங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் விஷேடமாக ஜப்பான் போன்ற நாடுகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் செயலிழந்துள்ளன. 2012 ஆம் ஆண்டு செப்டம்பரில் மாகாண சபைக்கான தேர்தல் நடத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இலங்கை அரசாங்கம் தன்னால் முடிந்தளவு அகதிகள் தொடர்பான விடயங்களையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. ஆயினும், மக்கள், சிவில் சமூகம் சிறுபான்மையினர் ஆகியோரை அதற்காக இணைத்துக் கொள்வது முக்கியம் என்பதை LLRC அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும், இவர்களது பங்களிப்பு இன்றி மேற்கொள்ளப்படும சந்தர்ப்பங்களே அதிகம் என்பது எமக்குத் தென்படுகிறது.

ஏனெனில் அவர்கள் இன்றி இலங்கை அரசாங்கம் மாத்திரம் தனித்து நீதி வழங்குதல், நல்லிணக்கம் என்பன போன்ற விடயங்களில் வெற்றிகொள்ள முடியாது. அந்த சமூக குழுக்களையும் ஒன்றாக இணைத்துக் கொள்ளல் வேண்டும் என்ற விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மற்றைய விடயம், குறிப்பாக இலங்கையில் மனித உரிமை மீறல்களாகும். காணாமற் போதல், சட்ட விரோதக் கொலைகள், துன்புறுத்தல்கள், ஊடகச் சுதந்திரமின்மை, ஒன்றுகூடும் சுதந்திரம், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தடைகள் என்பன தொடர்பான விடயங்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர் மீதான தாக்குதல்களும், பயமுறுத்தல்களும், சட்டம் ஒழுங்கு என்பன தடைப்படல் தொடர்பான விடயங்கள், மத ரீதியான மற்றும் பின்பற்றுதல் தொடர்பான விடயங்கள் மீது மேற்கொள்ளப்படும் அநீதிகள் என்பன இன்னமும் இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது மிக அவசியமாகும்.

அதனை மனித உரிமைகள் பேரவையின் போது இதற்கு ஆதரவாக வாக்களித்த அனைத்து உறுப்பு நாடுகளும் ஏகோபித்த குரலில் கூறுகின்றன் அவர்கள் குறிப்பு எழுதுகின்றார்கள். கருத்திற் கொள்கின்றார்கள். மனித உரிமைகள் ஆணையாளர் அவர்கள் சர்வதேச விசாரணையொன்று தேவை எனக் கூறும் விடயத்தைக் குறிப்பிட்டிருப்பதாகவும் அதற்காக அவர் அழைப்பு விடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டே அவர்கள் இலங்கை தொடர்பான பிரேரணைகளையும் சமர்ப்பித்தனர்.

**முஸ்லீம் மக்களது மனக் குறைகள் பற்றிய உங்களது கருத்து?**

இலங்கையின் வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லீம் பெண்கள் தொடர்பான விடயத்தின் போது தற்போது அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதூரமான மனித உரிமைகள் மீறப்பட்ட ஒரு சந்தர்ப்பம் என்பதாக தகவல்களைப் பெற்றுக் கொண்டு அதனை நிறுவியுள்ளோம். தற்போது தேசிய பிரச்சினைகள் என்று கூறப்படுகின்ற பாரிய பிரச்சினைக்குள் முஸ்லீம்கள் இடம்பெயர்ந்த விடயத்தை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறே பிரதான மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களாக நாம் ஆராய்ந்தபோது அது ஒட்டுமொத்தத்தினுள் காணப்பட்டது. ஆயினும் அது பிரதான தேசிய பேச்சு வார்த்தைக்கு வரவில்லை. அவ்வாறு வந்தது பிரபாகரனுக்கும் ரணிலுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட காலத்தில் ஹகீமுக்கும் பிரபாகரனுக்குமிடையில் முஸ்லீம் மக்களுக்கு நாம் என்ன செய்கிறோம் என ஒரு பேச்சுவார்த்தை நிகழ்ந்தது. அண்மையில் உதவிகள் வழங்கும் போதும் பழைய முஸ்லீம் அகதிகளுக்குப் போதியளவு உதவிகள் கிடைக்கவில்லை. அப்போது அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. முஸ்லீம்கள் ஜெனீவா வந்தால் தமிழ் புலம்பெயர் சமூகம் முஸ்லீம்களைக் கொண்டே தமது காரியத்தை சாதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

புலம்பெயர் சமூகம் தனது கருமங்களைச் செய்து முடித்துள்ளது. தமிழ் புலம் பெயர்ந்தோர்கள் காரணமாகவே இப்பிரேரணை நிறைவேற்றப்படல் தொடர்பான உச்ச நிலை ஏற்பட்டுள்ளது. இவ் விடயத்தில் காணப்படுகின்ற சனநாயக சுபாவத்தை முஸ்லீம்களின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் புரிந்து கொண்டு அவர்கள் தமது ஆதரித்து வாதாடலைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

"பொதுபலசேனா" ஒரு பாசிசவாத அரசின் உருவாக்கமாகும். அதன் சுபாவம் மதரீதியானது மற்றுமொரு மதச் சார்பான ஓர் இயக்கம் உருவாகினால் அரசாங்கம் அதனையும் பயன்படுத்திக் கொள்ளும். இச்சந்தர்ப்பத்தில் சிங்கள தீவிரவாதத்தின் பாசிசக் குழு பொது பலசேனையைப் பயன்படுத்திக்கொள்ளும். இதன் காரணமாக முஸ்லீம் எனக் கூறப்படும் நாடுகளுடன் கலந்துரையாடுவது கஷ்டம் ஏனெனில் அவர்கள் முடியாட்சிவாதிகள். இச் சந்தர்ப்பத்தில் தமிழ் புலம்பெயர் சமூகத்துடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடாத்துமாறு நாம் முஸ்லீம் செயற்பாட்டாளர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**சிவில் சமூக அமைப்புக்களின் பணிப்பொறுப்புக்கள் யாவை?**

நாம் பாரதூரமான ஒரு பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளோம். LLRC அறிக்கையில் எதனை நடைமுறைப்படுத்தியுள்ளது என நானும் வினவுகிறேன். இலங்கை LLRC அறிக்கையினை நடைமுறைப்படுத்துகிறது என சீனா, பாகிஸ்தான், கியூபா போன்ற நாடுகள் கூறுகின்றன. அரச சார்பற்ற நிறுவனம் என்ற வகையில் எதனை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள் என நாம் கேட்கின்றோமா? இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுதல் என்பது LLRC அறிக்கையினை நடைமுறைப்படுத்துவது அல்ல. அது ஒரு மனிதாபிமான செயன்முறை. அது இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்பு. LLRC அறிக்கையினை நடைமுறைப்படுத்தல் என்பது படையினரை அகற்றிக்கொள்ளல், காணிகளை மீள வழங்குதல், மொழிக் கொள்கையை உரியவாறு நடைமுறைப்படுத்தல், அரசியல் தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வரல், வழக்குத் தொடராது தடுத்து வைத்திருப்பவர்கள் பற்றிய பட்டியலை சமர்ப்பித்தல், காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதற்குப் பதிலளித்தல் என்பனவாகும். இவை LLRC அறிக்கையின் கூருணர்வுடைய காரணிகள். அவற்றில் எதனையாவது நடைமுறைப்படுத்தியுள்ளார்களா? அவற்றுள் எதுவும் நடைமுறைப்படுத்தப் படவில்லை. பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன எனக் கூறுகின்றனர். பாதைகள் மனிதர்கள் அல்ல. குக் கிராமமங்களுக்கு மின்சாரம் இல்லை. அபிவிருத்தி செய்தல் என்பது வீடுகளை அமைத்தல் மட்டுமல்ல. அவை ஒரு சித்தாந்தம் மட்டுமே. வீட்டைக் கட்டினால் மட்டும் போதாது. அவ் வீட்டிற்கு நீர் வசதி உள்ளதா? சுதந்திரத்தை அனுபவிக்க அனுமதியிருக்கிறதா? சுதந்திரத்திற்கான சந்தர்ப்பமுள்ளதா? அவ் வீட்டில் வாழ்வது ஒரு பெண்மணி மாத்திரம் எனில் அவள் அச்சமின்றி வீட்டில் படுத்துறங்க முடியுமா? அவளின் பிள்ளைகளைத் தனியே வைத்துவிட்டுச் சென்று தொழில் செய்ய முடியுமா? தற்போது யாழ்ப்பாணத்தில், கிளிநொச்சியில் அவ்வாறான ஒரு நிலைமை இல்லை. வீடொன்றைக் கொடுத்தால் அவ் வீட்டிலுள்ள பெண்ணுக்கு அச்சமின்றி தனியே சென்று திரும்பி வர முடியாது. சுற்றி வர ஆண்கள் 10 பேர் உள்ளனர். இவர்கள் தமது கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். அல்லது படையினராக இருக்கலாம். யாராக இருந்தாலும் அவர்களிடமிருந்து தனது வீட்டில் உள்ள சிறுமியை எவ்வாறு காப்பாற்றுவது என்பதே அவளுக்குள்ள பிரச்சினை. எனவே சுதந்திரமில்லாத ஒரு நிலைமையில் இயல்வு நிலை ஏற்பட்டது என எம்மால் கூற முடியாது? உரிமை இருந்தாலும் அவ்



**"பொதுபலசேனா" ஒரு பாசிசவாத அரசின் உருவாக்கமாகும். அதன் சுபாவம் மதரீதியானது மற்றுமொரு மதச் சார்பான ஓர் இயக்கம் உருவாகினால் அரசாங்கம் அதனையும் பயன்படுத்திக் கொள்ளும். இச்சந்தர்ப்பத்தில் சிங்கள தீவிரவாதத்தின் பாசிசக் குழு பொதுபலசேனையைப் பயன்படுத்திக்கொள்ளும். இதன் காரணமாக முஸ்லீம் எனக் கூறப்படும் நாடுகளுடன் கலந்துரையாடுவது கஷ்டம் ஏனெனில் அவர்கள் முடியாட்சிவாதிகள். இச் சந்தர்ப்பத்தில் தமிழ் புலம்பெயர் சமூகத்துடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடாத்துமாறு நாம் முஸ்லீம் செயற்பாட்டாளர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இலங்கை LLRC அறிக்கையினை நடைமுறைப்படுத்துகிறது என சீனா, பாகிஸ்தான், கியூபா போன்ற நாடுகள் கூறுகின்றன. அரச சார்பற்ற நிறுவனம் என்ற வகையில் எதனை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள் என நாம் கேட்கின்றோமா? இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுதல் என்பது LLRC அறிக்கையினை நடைமுறைப்படுத்துவது அல்ல.**

உரிமையை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பம் காணப்படல் வேண்டும்.

மக்களுக்கு அறிவூட்டி தொழிநுட்பக் கருவிகளை வழங்குவதே சிவில் சமூகமொன்றின் செயற்பாடாகும் எனக் கூறி-னால் அது சரியா?

இதன்மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிறுவனக் கட்டமைப்பு மூலம் நியாயம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

மற்றுமொரு குழு இது தொடர்பாக ஆய்வு செய்து மக்கள் கருத்துக்கள் தொடர்பான ஒரு கலந்துரையாடலுக்கான நடவடிக்கையினை மேற்கொள்கிறது. அதனூடாக மக்கள் விழிப்படைவார்கள் என அவர்கள் சிந்திக்கின்றனர். ஆயி-னும், இலங்கையில் காணப்படுகின்ற ஒரு விடயம்தான் சிவில் சமூகத்தை அரசி-யல் நீரோட்டத்தில் பங்காளர்களாக்குகின்ற போது அவ் இரண்டு துறைகளிலுமுள்ள மக்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை ஆகும். நேபாளம், தாய்லாந்து, இந்தியா, பொன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் இலங்கையை விட தமிழ் மக்களின் சார்பில் எதிர்ப்பு இயக்கங்கள் தமிழ் நாட்டில் இடம்பெறுகின்றன. தமிழ் நாட்டிலேயே இவ்விடயம் தொடர்பான பிரதான முன்னெடுப்பு நிகழ்ந்துள்ளது. இலங்கையில் இது சிவில் சமூகத்திலிருந்து தோற்றம் பெறவில்லை. அரசியல் தலைமையினூடா-கவே செயற்படுகிறது. 1994 இல் அவ்வாறே நிகழ்ந்தது. திரு. பண்டாரநாயக்காவின் சுயமொழிச் சட்டம் அரசியல் தலைமையினூ டாகவே செயற்பட்டது. மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் தலைபீடுகளை உரியவாறு கற்றறிந்து தமது பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இலங்கையின் சிவில் சமூகம் நிர்ப்பந்திக்கப்படுகிறது. சிவில் சமூகத்தினால் மேற்கொள்ளக்கூடிய பணிப்பொறுப்பே மேற் கொள்ளப்பட்டுள்ளது. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என்ற வகையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் செயற்பாட்டினுள் உள்ள வாய்ப்புக்களை உச்ச அளவில் நாம் பயன்படுத்தியுள்ளோம். அவ் வாய்ப்புக்கள் மூலம் எம்மால் பெற்றுக்கொள்ள முடிந்த இவ் ஆவணம் மிக முக்கியமானதாகும். ஏனெனில் இவ்வாறான ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டுதான் பின்னொரு சந்தர்ப்பத்தில் சர்வதேச விசாரணையொன்று அவசியம் என்ற விடயத்துக்குச் செல்கிறது. நீதிமன்றமொன்றில் காணி வழக்கொன்றை தாக்கல் செய்தால் நாம் ஆரம்பத்தில் காணி உறுதியைத் தேடிக் கொள்ள வேண்டும். பதிவினை உறுதி செய்துகொள்ள வேண்டும். சாட்சியைக் கையாள்தல் வேண்டும். எமது முறைப்பாட்டை இலங்கை அரசாங்கத்திற்கு ஏதிராக கோவை-யிடுகிறோம் என்பதை நாம் இங்கு விளங்க வேண்டும். இது ஒரு மனு 2012 இல் மற்றுமொரு மனு சமர்ப்பிக்கப்பட்டது.

இது சர்வதேச விசாரணையொன்றினூ டாகத் தடைகள் விதிப்பது வரை மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு அபாய அறிவிப்பு என்பதை அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஆகவே இதுதான் துர்ப்பாக்கியம். இவ்வளவு தூரம் செய்ய வேண்டியதில்லை. இது தொடர்பாக எமக்கு ஒரு தூரநோக்கு இருத்தல் வேண்டும். தற்போது இவ்வாறு ஒரு நாட்டிற்கு இதே விதமாகச் செய்ய முடியாது. பயங்கரவாத தடுப்புச் சட்டமானது தமிழர்களை ஒடுக்குதல், தமிழ் இனவாதம் எனப் பழைய தவறினை மீண்டும் செய்தனர். எந்தவொரு குற்றவாளிக்கும் தண்டனை வழங்கப்படவில்லை. இன்று நிலைமை மோசமானது. இந்த நாடு இவ்வாறு பயணிக்க முடியாது. தண்டனை வழங்கப்படாமை என்ற விடயம். ஒரு பயங்கரமான விடயம். ஒன்றில் எங்களைப் பயங்கரம் பீடிக்கும் அல்லது அரசுக்கு அது பீடிக்கும்.

**புலம்பெயர் சமூகத்தின் (டயஸ் போராவின்) நிலைமை என்ன?**

அவர்களது அனைத்து விடயங்கள் பற்றியும் எமக்கு இணக்கப்பாடு இல்லை. ஆயினும் அவர்களது அடிப்படையான ஒரு விடயம் காணப்படுகிறது. தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அதிகாரம் பகிரப்படல் வேண்டும். தமிழ் ஈழம் என்ற விடயத்தை ஒரு குழுவினர் இன்னமும் சிந்திக்கின்றனர். அதற்கப்பால் தமக்கு அரசியலமைப்பு ரீதியான ஒரு மாற்றம் வேண்டுமெனக் காணும் ஒரு குழுவும் உள்ளது. இலங்கை அரசாங்கத்தின் தன்மையும் அரசியலமைப்புச் சட்டத்தின் தன்மையும் மாற்றமடைதல் வேண்டும். அந்த புலம்பெயர் சமூகத்துடன் எமக்கு ஒரு அரசியல் கலந்துரையாடல் இருத்தல் வேண்டும். இலங்கை இன்னுமொரு யுத்தத்தை நோக்கிச் செல்ல முடியாது. இது பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும். நல்லிணக்கமும் யுத்தமும் என்பது ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். நல்லிணக்கத்தைத் தெரிவு செய்வதா அல்லது எதிர்காலத்தில் யுத்தத்தைத் தெரிவு செய்வதா? மகிந்த ராஜபக்ஷ ஜனாதி-பதியின் அரசாங்கம் துரதிர்ஷ்ட வசமாக எதிர்காலத்தில் யுத்தத்தைத் தெரிவு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source : The Hindu

# இலங்கையுடன் இணைந்து கருமமாற்றுதல் முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு சிறந்த மார்க்கமாகம்

சென்னையில் பௌத்த பிக்குகள் தாக்குதல்களுக்குள்ளாகின்றனர். திரைப்படக் கலைஞர்களும், பல்கலைக்கழக மாணவர்களும பகிஷ்கரிப்புகளில் ஈடுபடுகின்றனர். சென்னைக்கான தமது பயணங்களை அரைவாசியாகக் குறைப்பதற்கு சிறீலங்கன் விமான சேவை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. IPL கிரிக்கட் சுழற்சித் தொடரில் இலங்கை கிரிக்கட் வீரர்கள் விளையாடவுள்ள அணிக்களுக்கிடையில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறது. இலங்கையின் சிறுபான்மைத் தமிழ் மக்களைக் கவனிக்கும் விதம் பற்றி தமிழ்நாடு குழம்பிப் போயுள்ளது. பதவியிலுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட பலர் இலங்கைக்கு எதிரான பொருளாதாரத்தடை பற்றிக் கதைக்கின்றனர்.

ஆயினும் இதுபற்றிச் சிந்திக்க முன்னர், இரு நாடுகளுக்கிடையிலும் எவ்வாறான நெருங்கிய பொருளாதார உறவுகள் நிலவுகிறது என்பது பற்றியும் இலங்கைக்கு நேரவுள்ளதை விடவும் குறைந்த ஒரு பாதிப்பு தமிழ் நாட்டிற்கு எவ்வாறு நேரமாட்டாது என்பது பற்றியும் சீர்தூக்கிப் பார்ப்பதே புத்திசாதுர்யமானதாகும்.



**ஹரி நாராயண்**
IRDA **நிறுவனத்தின் தலைவர் மற்றும் பகுப்பாய்வாளர்**

இலங்கையின் பிரதான பூகோள வியாபாரப் பங்காளி இந்தியாவாகும். சார்க் வலயத்தினுள் இலங்கை இந்தியாவின் பிரதான வியாபார பங்காளியாகும். 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டு நாடுகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பின்பு தொடர்புகள் படிப்படியாக விருத்தியடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 ஆம் ஆண்டில் இலங்கைக்கான நேரடி வெளிநாட்டு முதலீட்டாளர்களுள் இரண்டாவது மிகப் பெரிய முதலீட்டாளர் இந்தியாவாகும். அது மொத்த முதலீடான 1.05 பில்லியன் அமெரிக்க டொலரில் 147 மில்லியன் அமெரிக்க டொலர் பங்களிப்பாகும்.**

இலங்கையின் அறிக்கைகளின் பிரகாரம் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் 4.85 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டிப் பிடித்துள்ளது. இந்தியாவின் ஏற்றுமதிகளின் பெறுமதி 4.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் 217 பெற்றோலியத்திற்குரியதுடன் இரண்டாம் இடம் 7.6% மான கரும்புச் சீனிக்கும், பீட் சீனிகளுக்கும் உரித்தாகிறது. ஏனைய பிரதான ஏற்றுமதிகளில் மோட்டார் கார்கள் 6.9 ம் போக்குவரத்து வாகனங்கள் 5.9 ம் ஆகும்.

பிரதான இந்திய முதலீடுகள் வங்கிகள், உபசரிப்புச் சேவைகள், தொலைதொடர்பு, வைத்தியசாலை என்பன போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில் வாய்ப்பு மூலம் உருவாகும் கைத்தொழில் துறைகளிலேயே தங்கியுள்ளது. இந்தியா பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (IOC) பாரத் எயார்டெல், பிரமால் கிளாஸ், டாட்டா, எல்.ஐ.சீ. என்பன இன்றும்கூட தொழிற்பாட்டிலுள்ள இந்திய கம்பனிகளாகும்.

லங்கா அசோக் லேலண்ட் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு வணிகமாகக் கட்டியெழுப்பப்படுவது லங்கா லேலண்ட் மற்றும் இந்திய அசோக் லேலண்ட் என்பவற்றின் இணைப்பு மூலமாகும். அவர்களது பிரதான உற்பத்திச்சாலை சென்னையிலேயே உள்ளது. கம்பனி உருவாக்கப்பட்டதன் பின்பு 1982 முதல் இலங்கையின் பெருந்தெருக்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ்களின் எண்ணிக்கை 42000 ஆகும். இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு 13%ஆக இருந்த கம்பனியின் சந்தைப் பங்கு தற்போது 60% காட்டுகிறது.

2011 ஆம் ஆண்டில் இலங்கைக்கான நேரடி வெளிநாட்டு முதலீட்டாளர்களுள் இரண்டாவது மிகப் பெரிய முதலீட்டாளர் இந்தியாவாகும். அது மொத்த முதலீடான 1.05 பில்லியன் அமெரிக்க டொலரில் 147 மில்லியன் அமெரிக்க டொலர் பங்களிப்பாகும்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தனது சேவைகளை ஆரம்பித்த எயாத்டெல் லங்கா கம்பனி நாட்டில் தனது ஒரு மில்லியன் வாடிக்கையாளர்கள் என்ற இலக்கை அடைந்து மிக வேகமான செயற்பாட்டாளராக மாறியுள்ளது. அவ்விடத்திலிருந்து அவர்களது 1500 இதற்கும் மேற்பட்ட சேவை நிலையங்களை இலங்கையின் வடக்குப் பிரதேசத்தையும் உள்ளடக்கி நாடு பூராகவும் விஸ்தரித்தது. 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் யாழ்ப்பாணத்திற்கும் எயார்டெல் பரந்த செயல் எல்லை வசதிகள் (Broad Band) வழங்கப்பட்டன.

இலங்கையின் பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றின் சில்லறை விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்லும் அரசுக்குச் சொந்தமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தவிர்ந்த அச் சேவை வழங்கும் ஒரேயொரு தனியார் கம்பனி லங்கா IOC கம்பனி மட்டுமே. லங்கா கம்பனி நாடளாவிய ரீதியில் செயற்படும் முன்னணிக் கம்பனிகளின் பட்டியல் தர வரிசைப்படி முதலாவதாகவுள்ளது.

இலங்கையுடனான வர்த்தகத்தில் சுமார் 40% அளவு தமிழ் நாட்டினூடாகவே இடம்பெறுகிறது. இதற்காக ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் சம்பந்தப்படுகின்றனர். தமிழர் மாநிலத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்ற முறைசாராத வர்த்தகமானது மதிப்பீடுகளின்படி முறைசார்ந்த வர்த்தகத்தில் இரண்டு மடங்கிற்கு கிட்டுகிறது.

"இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக உறவுகள் பாதிக்கப்படின் தமிழ் நாட்டுக்கே கூடுதலான பாதிப்பு ஏற்படும்" என இந்திய ஆசியான் சிறீலங்கா வர்த்தக சம்மேளனத்தின் முன்னை நாள் தலைவரும் சோஸோவாக் குழுமத்தின் முகாமைப் பணிப்பாளர் சொமி ஹஸாரி "த ஹிந்து" பத்திரிகைக்குக் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டு கரும்பு விவசாயிகளின் வாழ்க்கை விசேட்மாக ட்ரச் பிரதேசம் ஸ்தீரமடைந்துள்ளதற்கான காரணம் இலங்கைக்கான சந்தைப்படுத்தல் என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். இது தவிர கோயம்புத்தூர் பிரதேசத்திலிருந்து வரும் பெரும்பாலான கலவை உபகரணங்கள், அரைக்கும் இயந்திரங்கள், ஏனைய மின்னுபகரணங்களுக்கு பாரியளவிலான ஒரு கவர்ச்சி இலங்கையில் நிலவுகிறது. இலங்கையின் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய வம்சாவழியினராவர்

**எதிர்காலத் திட்டங்கள்**

சாத்தியத்தைக் கட்டியெழுப்பும் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பினைத் தொடர்ந்தும் கொண்டு சென்று மூன்றாண்டுகளுக்குள் 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைளை இரு மடங்காக உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக கடந்த ஜனவரி மாதம் இந்தியாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சல்மன் குர்ஷித், இலங்கையின் வெளிநாட்டமைச்சர் ஜீ.எல்.பீரிஸ். அவர்களைச் சந்தித்ததன் பின்னர் புது டில்லியில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் பிரகடனம் செய்யப்பட்டது.

திருகோணமலையில், விசேட பொருளாதார வலயமொன்றை ஏற்படுத்துவதற்கும், ஏனைய பிரதேசங்களில் ஔடதங்கள் மற்றும் துணி உற்பத்திக் கோட்டங்களை ஏற்படுத்துவதற்கும், இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் குர்ஷித் குறிப்பிடுகிறார். தனது அயலவரின் விஞ்ஞானத் தொழிநுட்ப, கல்வி, சுகாதார, வலுச்சக்தி போன்ற துறைகளின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான இந்தியாவின் ஆயத்தம் பற்றியும் அவர் அங்கு அறிவித்தார்.

இதற்கு மேலதிக்மாக இலங்யைடனான மிகப் பரந்த பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் ஒன்று பற்றி 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இந்தியா கூறிவருகிறது. இவ்வாறு 13 தடவைகள் அது தொடர்பான சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன. விரைவில் எதிர்பார்க்கப்பட்ட இவ் ஒப்பந்தத்தை அடைந்துகொள்ள முடியும்.

இந்திய வம்சாவழித் தமிழ் பிரசைகள் தவிர்ந்த இந்திய வம்சாவழி மக்கட் பிரஜைகள் பற்றி கருத்திற்கொள்ளும் போது பல்வேறு வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இந்திய வம்சாவழி சிந்து, போரா, குஜராட்டி, பார்சி இனப் பிரசைகளின் எண்ணிக்கை சுமார் 840,000 ஆகும். அவர்களுள் சுமார் 10,000 பேர் பொருளாதார ரீதியில் மிகவும் செழிப்பானவர்களாவர்.

அவ்வாறே இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் பிரதான பங்காளி இந்தியாவாகும். 2010 ஆம் ஆண்டில் நாட்டிற்கு வருகை தந்த இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 176,340 ஆகும். அது வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையில் 18% சதவீதமாகும். பெருந்தொகையான இலங்கையர்கள் இந்தியாவிற்குச் செல்கின்றனர். அது புத்தகயா, திருப்பதி, புட்டபாரதி சாய்பாபா ஆச்சிரமம், வேளாங்கண்ணி தேவஸ்தானம் மற்றும் தமிழ் நாட்டின் விகாரைகள் என்பவற்றைத் தரிசிப்பதற்காகும்.

**அரசியலை ஏனைய தொடர்புகளிலிருந்து வேறுபடுத்தல்**

பிரசைகளுக்குள்ளும் பிரசைகளுக்கிடையேயும் தொடர்புகள் மற்றும் இலங்கையுடனான தொடர்புகளின் பொருளாதாரத் துறையினால் அரசியலை வேறுபடுத்துதல் அவசியமாகவுள்ளது. உண்மையிலேயே மிகவும் நெருக்கமான பங்களிப்பு மூலம் இன நல்லிணக்கத்தின் மீது பாரிய முதலீடுகளை மேற்கொள்வதன்மூலம் இந்தியாவிற்கு கூடுதலான நன்மைகள் கிடைக்கின்றன. மியன்மாரில் இந்தியாவினால் பயன்படுத்தப்பட்ட தந்திரோபாயம் இதுவாகும்.


இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் முன்னால் அதிகாரியொருவரான ஏஜீவ் சிக்ரி என்பவர் "சவால்களும் தந்திரோபாயங்களும்" எனும் தனது நூலில் காட்டப்பட்டுள்ளவாறு இத்தீவு பாதுகாப்பின்மையினால் கஷ்டப்படும் ஒரு சிறிய அயலவர் என்றாலும் ஏனைய அயலவர்கள் மத்தியில் இந்தியா ஒரு பிசாசாக (பேய்) காட்சியளிக்கக் கூடாது. இதன்மூலம் எமது அயலவரை வழிநடாத்துவதற்கான தகுதி நிலையில் இருப்பதற்கு இந்தியாவினால் முடியுமானதாயிருக்கும்.

---

ஹரி நாராயன் என்பவரால் 'The Hindu" பத்திரிகைக்கு மார்ச் 21 ஆந் திகதி 'Engaging Srilanka the best way forward" எனும் தலைப்பில் வெளியான கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு. (அனுசரணை: விகல்ப இணையத்தளம்)

> **"இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக உறவுகள் பாதிக்கப்படின் தமிழ் நாட்டுக்கே கூடுதலான பாதிப்பு ஏற்படும்" என இந்திய ஆசியான் சிறீலங்கா வர்த்தக சம்மேளனத்தின் முன்னை நாள் தலைவரும் சோஸோவாகக் குழுமத்தின் முகாமைப் பணிப்பாளர் சொமி ஹஸாரி " த ஹிந்து" பத்திரிகைக்குக் கூறியுள்ளார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜெனீவா பிரேரணை : **தமிழர்களின் சவால்**



சுனந்த தேசப்பிரிய

இலங்கையின் வகைப் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பிரேரணை மனித உரிமைகள் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தினத்திற்குப் பிந்திய தினம் சுவிட்சர்லாந்தின் தமிழ் ஒருங்கிணைப்புக் குழு ஜெனீவாவின் மக்கள் பேரணியொன்றினை நடாத்தியது. விசேடமாக மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள வந்திருந்த நாம் தமிழர் கட்சியின் தலைவர் திரு. செபஸ்டியன் சீமான் அவர்களுக்காகவே அப்பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. பொதுவாக இந் நீரோட்டத்துக்குரிய தமிழ் புலம்பெயர் சமூகம் ஈழநாடு உருவாவதைத் தடுக்கும் ஏகாதிபத்தியத்தின் ஒரு திட்டமாகவே ஜெனீவாப் பிரேரணையைக் கருதுகிறது.

சீமன் பற்றிய ஓர் அறிமுகத்தை எனக்களித்த தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் சீமான் தமிழகத்தின் விமல் வீரவன்ச எனக் குறிப்பிட்டார். அது அவர் கரகோசங்களைப் பெறும் வகையில் பேசக் கூடிய ஒரு பிரசித்தமான பேச்சாளர் என்பதனால் ஆகும். சீமானும் பிற்போக்குவாத சிந்தனைகள்மூலம் பிரபல்யமடைந்த ஒருவராவார். ஒருமுறை கனடாவிற்குச் சென்று பொதுக் கூட்டமொன்றில், போரில் கொலை செய்யப்பட்ட ஒவ்வொரு தமிழ் குழந்தைகளுக்காவும் ஒரு சிங்களக் குழந்தை கொலை செய்யப்பட வேண்டுமெனக் கூறினார். அக்கூற்று ஒரு குரோதமான கூற்று என அர்த்தப்படுத்திய கனேடிய அரசாங்கம் அவரை உடனடியாகக் கனடாவிலிருந்து நாடு கடத்தியது. கனடாவில் குரோதப் பேச்சுக்களுக்கு இடமில்லை.

கடந்த மார்ச் 22ஆம் திகதி ஜெனீவாவின் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தலைமையகமான "ப்ளஸ் த நெசியோன்" எனும் இடத்திற்கு எதிரே திரு.சீமான் அவர்கள் பின்வருமாறு கூறினார். இன்னும் 8 வருடங்களில் நான் தமிழகத்தின் முதலமைச்சராவேன். அப்போது நாம் இலங்கையில் தமிழீழத்தை அமைப்போம். ஐக்கிய நாடுகளின் கொடியுடன் சேர்ந்து தமிழ் ஈழத்தின் கொடியும் பறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **இலங்கையிலுள்ள தமிழ் அரசியல் ஒரு திசையிலும் தமிழகத்தினதும் டயஸ்போராவினதும் தமிழ் அரசியல் வேறு ஒரு திசையிலும் திரும்பியிருப்பதாகும். இப் பிளவானது இலங்கையின் தமிழ் அரசியலின் பக்கமும் பயணிக்காது என சிந்திக்காதிருக்க முடியாது. ஜெனீவாப் பிரேரணையினாலும் இனங்காணப்பட்டுள்ள இலங்கை தமிழ் மக்களின் மனக் குறைகள் அணுகப்படுகின்ற குறுகிய கால அரசியல் தீர்வொன்றை அடைந்து கொள்வதற்குள்ள ஒரு பிரதான தடையாக இம் மோதல் மாறுவதற்கான வாய்ப்பு உள்ளது.**

இங்கு இன்று நாம் ஆர்ப்பாட்டம் செய்வதைப் போல் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டமொன்றுக்கு வந்து முறையிடுவார்கள். எமது பெண்களை கற்பழிக்கிறார்கள், எமது மக்களைக் கொலை செய்கிறார்கள் அப்போது இன்று மகிந்த சமரசிங்க மனித உரிமைகள் பேரவைக்கு வந்து போகும் விதத்தில் நாமே ஆடம்பரமாக வந்து போவோம்.

(இவ்வாறான பிற்போக்குவாதக் கூற்றுக்களை வெளியிட்ட சிங்கள அரசியல்வாதிகள் 1983 ல் அதனைப் பாதியளவில் செயற்படுத்தினர். அவ்வாறானவர்கள் இன்றும் உள்ளனர்.)

இக் கதையின் மூலம் மறைமுகமாக, எட்டு வருடங்களில் தமிழ் ஈழத்தை ஏற்படுத்தியதன் பின்பு சிங்களப் பெண்களைக் கற்பழித்து சிங்களவர்களைக் கொலை செய்வோம் என்பதைத் தானே சீமான் கூறுகிறார். திரு. சீமான் அவர்களுக்கு தமிழகத்தில் மக்கள் ஆதரவு உள்ளதாக தேர்தல் முடிவுகள் காட்டாத போதும் இலங்கையில் இவ்வாறான பிற்போக்குவாதிகளைப் போன்று இவ்வாறான நபர்களுக்கும் தமிழகத்தில் பிரதான கட்சிகளில் ஆதிக்கம் செலுத்தும் திறமையுள்ளது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களிடையே வாழும் பெரும்பான்மையினரோ அல்லது அவர்களது அரசியல் கட்சிகளோ மேற்படி பித்துப்பிடித்த கதைகளுக்கு ஆதரவளிக்காது என்பது உறுதி.

ஆயினும் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களைக் கொண்டமைந்த டயஸ்போராவிட்குள் சீமான் போன்ற பிற்போக்குவாத சிந்தனையுடையவர்களுக்கு குறிப்பிடத்தக்க ஒரு வரவேற்பு காணப்படுகிறது. ஜெனீவாவில் நடந்த கூட்டத்திற்குப் பின் டென்மார்க் மற்றும் ஜேர்மனியில் அவருக்காக பொதுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. அக் கூட்டத்திலும் அவ்வாறே பிற்போக்குவாத மற்றும் வன்முறைக் கருத்துக்கள் அவரால் தெரிவிக்கப்பட்டன.

இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் பேரவையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையானது தமிழர்களுக்கு நியாயம் வழங்கும் என ஏற்றுக் கொள்ளும் எந்தவொரு தமிழ் டயஸ்போரா குழுவும் இல்லை.

பொதுவாக அவர்கள் இப் பிரேரணை தொடர்பாக இரண்டு விதமான விமர்சனங்களைத் தெரிவிக்கின்றனர். அதில் முதலாவது இப் பிரேரணையானது இலங்கையின் யுத்தம், தமிழ் மக்களுக்கு எதிரான இனச் சுத்திகரிப்புப் போராகப் பொருள் கொள்ளப்படாமையும், இரண்டாவது போரின் இறுதிக் கட்டத்தில் நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பான சர்வதேச விசாரணையொன்று பரிந்துரைக்கப்படாமையுமாகும். பிரேரணை மூலம் பின்பற்றுதல் மற்றும் சமயம் என்பவற்றுக்கேற்ப நடைபெறும் பாராபட்சம் இலங்கையில் உள்ளதென ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் கூட இனரீதியான அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பாராபட்சம் காட்டுதலை ஏற்றுக்கொள்ளாமையும் அவர்கள் அதற்குரிய காரணமாகக் காட்டுகின்றனர்.

(உண்மையில் இம்முறை ஜெனீவாப் பிரேரணையில் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் பாரிய ஒரு பங்கை இலங்கைச் சிங்களவர்களும் தமிழர்களுமே மேற்கொண்டனர்.)

இப்பிரேரணைக்குப் பின்னால் இருந்த இரண்டு பிரதான நாடுகளான ஐக்கிய அமெரிக்காவையும் இந்தியாவையும் தனது நோக்கத்தைத் தடுக்கும் எதிரிகளாகவே இவர்களுள் சிலர் கருதுகின்றனர். இந்த நாடுகளுடன் பணியாற்றி படிப்படியாக தமது கருத்துக்களை நோக்கி அவர்களை நகர்த்த வேண்டுமென சிலர் நம்பிக்கை கொள்கின்றனர். பிரயோக ரீதியாக ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அரசியல் தீர்வினை எதிர்பார்க்கும் இன்னும் சிலர் மற்றுமொரு நீரோட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

ஆயினும் LTTE கொடியினையும் பதாகைகளையும் தாங்கியவாறு பிரபாகரனின் புகைப்படங்களை ஏந்திய வண்ணம் ஊர்வலம் சென்று கூட்டங்களை நடாத்தும் அரசியல் நீரோட்டத்திற்கே பாரிய ஒரு தொனியும் பலமும் இருப்பதை அவதானிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆயினும் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களைக் கொண்டமைந்த டயஸ்போராவிற்குள் சீமான் போன்ற பிற்போக்குவாத சிந்தனையுடையவர்களுக்கு குறிப்பிடத்தக்க ஒரு வரவேற்பு காணப்படுகிறது. ஜெனீவாவில் நடந்த கூட்டத்திற்குப் பின் டென்மார்க் மற்றும் ஜெர்மனியில் அவருக்காக பொதுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. அக் கூட்டத்திலும் அவ்வாறே பிற்போக்குவாத மற்றும் வன்முறைக் கருத்துக்களே அவரால் தெரிவிக்கப்பட்டன.**

ஏனைய எந்தவொரு தமிழ் டயஸ்போரா குழுவுக்கும் பரந்தளவிலான பொதுக் கூட்டங்களை நடாத்துவதற்கான திறமை இருப்பதாகத் தெரியவில்லை.

(எப்போதுமே பொதுமக்கள் மனிதர்களது அடிப்படை உணர்வுகளை நோக்கி பேசப்படுகின்ற மற்றும் அவற்றை விழிப்படையச் செய்யும் திசை நோக்கியே கணப்பொழுதில் ஈர்க்கப்படுகின்றனர்.)

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளும் ஜெனீவாப் பிரேரணை-யையும் மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்மூலம் இப் பிற்போக்குவாத கருத்துக்களின் ஆதிக்கமே வெளிக்காட்டப்பட்டது. அவர்கள் பிரேரணையினை அக்கினித் தெய்வத்திற்குப் பலியிட்டதுடன் ஐக்கிய நாடுகள் தாபனத்தையும் கொழுத்த வேண்டிய ஒரு கூட்டுத்தாபனமாகக் கருதினார்கள். இம் மாணவர்களின் எதிர்ப்பானது தமிழகத்தின் வசந்தத்திற்குக் காரணமாக அமைந்து அதன் மூலம் இலங்கையிலும் ஈழம் நோக்கிச் செல்ல முடியுமென தற்போது ஒருவர் சிந்திக்கின்றார். 2009 ஆம் ஆண்டு ஏப்பிரல், மே மாதங்களில் தமிழ் டயஸ்போராவினர் இதனிலும் பாரிய ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்தனர். ஆயினும் போரின் இறுதியில் அவ் ஆர்ப்பாட்டங்கள் மங்கிப் போயின. போர் ஓய்ந்த பின்னர் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் அகதி முகாம்களில் முடக்கப்பட்டிருந்த போது குறித்த ஈழம்வாதிகளின் டயஸ்போராவினர் அது பற்றி கரிசனை காட்டவில்லை. இலங்கைத் தமிழர்களின், விசேடமாக யுத்த வலய மக்களின் அன்றாட வாழ்வு தொடர்பான பிரச்சினைகள் இவ் அதிபதி நீரோட்டத்திற்குட்படுத்தப்படாத அளவா-கும்.

இந்நிலைமையிலுள்ள விசேடம் யா-தெனில் இலங்கையில் பிரயோக தமிழ் அரசியலுடன் இச் சக்திகள் செல்வதற்கு அவ்வளவாக அல்லது அவற்றுக்கு விருப்போ இல்லாமையாகும். தமிழ் தேசிய கூட்டமைப்பினை இவ் LTTE கொ-டியின் கீழ்ரன நபர்கள் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் அடிமைப்பட்ட காட்டிக் கொடுப்பவர்களாகவே கருதுகின்றனர். வேறு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்கென ஜெனீவாவிற்கு வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இருவரை சூழ்ந்துகொண்ட அந் நபர்கள் அவர்களுக்கு இடையூறாக நடந்து கொண்டதாக தெரிய வந்தது. இப் பிற்போக்குவாதப் போக்குகள் எவ்வாறான சிந்தனைப் பலத்தைக் கொண்டுள்ளது என்பது கடந்த ஒரு தினங்களில் தமிழ் நாட்டின் இரண்டு பௌத்த பிக்குகளுக்கு பிற்போக்குவாதிகள் தாக்கியதைக் கண்டிப்பதற்கு ஒரே-யொரு டயஸ்போராவிற்கு மட்டுமே தைரி-யம் இருந்தது. சிங்களப் பெண்களை நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் அவர்களின் கூற்றினால் எந்தவொரு டயஸ்போராக் குழுவினரும் (மறைமு-கமாக விமர்சித்தாலும்) இதுவரை பகிரங்கமாகக் கண்டிக்கவில்லை.

இதற்கிணங்க ஜெனீவாப் பிரேரணையிலிருந்து எமக்கு விளங்குவது யாதெனில், இலங்கையிலுள்ள தமிழ் அரசியல் ஒரு திசையிலும் தமிழகத்தினதும் டயஸ்போராவினதும் தமிழ் அரசியல் வேறு ஒரு திசையி-லும் திரும்பியிருப்பதாகும். இப் பிள-வானது இலங்கையின் தமிழ் அரசி-யலின் பக்கமும் பயணிக்காது என சிந்திக்காதிருக்க முடியாது. ஜெனீவாப் பிரேரணையினாலும் இனங்காணப்பட்டுள்ள இலங்கை தமிழ் மக்களின் மனக் குறைகள் அணுகப்படுகின்ற குறு-கிய கால அரசியல் தீர்வொன்றை அடைந்து கொள்வதற்குள்ள ஒரு பிரதான தடையாக இம் மோதல் மாறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

சோஷலிசத்தை ஏற்படுத்தும் வரை பாட்டாளி மக்கள் பொறுத்திருக்க வேண்டுமென்ற இடதுசா-ரிக் கொள்கையினைப் போலவே ஈழத்தினை ஏற்படுத்தும் வரை தமிழ் மக்கள் காத்திருக்க வேண்டும் என்பது நடைமுறைத் தத்துவத்திலும் தொலைவிலுள்ள ஒரு கற்பனையாகும். அவ்வாறான ஒன்றில் தொக்கி நிற்பதற்கு டயஸ்போராவிற்கும் தமிழ் நாட்டிற்கும் முடியும். ஆயினும் இலங்கைத் தமிழ் மக்களின் அவ்வாறான ஒரு கனவின் மூலம் எந்தவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source : vimeo.com

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்

# ஜெனீவா பேரவையை முகாமை செய்யத் தவறியுள்ளோம் எனக் குற்றம் சுமத்துபவர்கள்

# அன்று யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் நாட்டைக் காட்டிக் கொடுத்தார்கள்

**" இன்று, நாம் எதிர்நோக்கியுள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு, இக்கூற்று மிக முக்கியமாமானதாகும். அன்று முப்படைகளில் சேவைபுரிந்த அதிகாரிகளை, வெளிநாடுக-ளில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் வெளிநாட்டு சேவைகளுக்கு நாம் அனுப்பியுள்ளோம். அவர்கள் மேற்படி அபரிமித இராணுவ நடவடிக்கைகளின் சாட்சியாளர்கள். "**

"வெளிநாட்டு உறவுகளை முகாமை செய்வதிலுள்ள குறைபாடுகள் காரண-மாகவே இலங்கை மீது வெளிநாட்டுத் தாக்கங்கள் ஏற்படுகின்றன என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.இதில் உண்மையில்லை. ஏகாதிபத்திய நாடுகளினதும் தமிழ் புலம் பெயர் சமூகத்தினதும் (Tamil Diasposra) தேவைகள் காரணமாகவே மேற்-படி தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன" என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் நேற்று (22) குருநாகலையில் தெரிவித்தார்.

தந்திரோபாயத்திலும் தொழில்சார் துறையி-லும் நிபுணத்துவமிக்க ஒருவரால் எதனைத்தான் தாங்கிக் கொள்ள முடியாது? என ஜனாதிபதியவர்கள் இங்கு கேள்வி எழுப்பினார்.

இலங்கை இராணுவத்தின் ஒரு காலாட்படையான விஜயபாகு காலாட்படைக்கு ஜனாதிபதி வர்ணம் மற்றும் படையணி வர்ணம் என்பவற்றைக் கையளிப்பதற்காக குருநாகல் போயகனையில் அமைந்துள்ள விஜயபாகு படைத்தலைமையகத்தில் நடைபெற்ற உற்சவத்தில் மேற்கண்டவாறு ஜனாதிபதி அவர்கள் தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக மனிதாபி-மான செயற்பாட்டிற்காக போர்க்களத்தில் மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்கிய ஒரு படையணியாக விஜயபாகு காலட்படை கருதப்படுகிறது. ஜனாதிபதி வர்ணம் மற்றும் படையணி வர்ணக் கொடிகள், இப்படையணிக்கு வழங்கப்பட்டமையால் எதிர்காலத்தில் இப்படையணியானது வர்ண இராணுவத் திணைக்களம் என அழைக்கப்படும். வர்ணக் கையளிப்பு நடைபெறுவதற்கு முன்னர் இராணுவ மரியாதை அணிவகுப்பை ஜனாதி-பதி அவதானித்தார். இவ் வைபவத்தில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரியவும் விஜயபாகு காலாட்படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஆர்.வீ.சமரதுங்கவும் பங்கேற்றனர்.


அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதி-பதி பின்வருமாறு குறிப்பிட்டார்,

எமது தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக உன்னத அர்ப்பணிப்பைச் செய்த காலாட்படையணிக்கு இன்று வர்ண மற்றும் படையணி வர்ணம் என்பன கையளிக்கப்படுகிறது. விஜயபாகு படையணி 1988 செப்டெம்பர் மாதம் 28 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைய காலகட்டத்தில் தெற்கில் உருவாகிய பயங்கரவாத நிலைமையினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**போர் நிறுத்த ஒப்பந்தத்தால் அதற்கு ஓரளவு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. வெளிநாட்டுத் தலையீட்டின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை 2008 இல் நாம் கிழித்து எறிந்திருக்காவிட்டால், இன்று இந்நாடு எத்தகைய நிலைமைக்கு முகம் கொடுத்திருக்கும் எனச் சிந்திக்குமாறு நான் கோருகின்றேன். அப்படியாயின் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சர்வதேச ஆவணமாகக் கொண்டு, இந்நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு பாரிய ஒரு தாக்கத்தை ஏற்கனவே செய்து முடித்திருப்பார்கள்.**

கட்டுப்படுத்துவதற்கும், வடக்கில் பயங்கரவாதிகளுடன் போரிடுவதற்குமே இக் காலாட்படை அமைக்கப்பட்டது. தேசிய பாதுகாப்பிற்காக இராணுவத்தில் இணைந்த 5ம் படையணி விஜயாகு காலாட்படையணியாகும். இன்று இப்படையணி மத்திய நிலையமாகவும் நிரந்தரப் படையணியாகவும் அதே சமயம் பயிற்சிக் கல்லூரியுடனும் உங்களது படையணி பலமடைந்துள்ளது.

வடமாராட்சி, ரிவிரெச, சத்ஜய, ஜயசிக்குரு போன்ற இராணுவ நடவடிக்கைகளின்போது விஜயபாகு காலாட்படையணி மேற்கொண்ட வீரச் செயல்கள் மிக உன்னதமானவை என நான் கூற வேண்டும். அதேசமயம் நாட்டை ஒன்றுபடுத்தும் மனிதாபிமான நடவடிக்கைகளின்போதும் விஜயபாகு காலாட்படையணி மிகச் சிறப்பான பணியினைச் செய்தது குறிப்பிட வேண்டும். ஆகவே, படையணி அமைக்கப்பட்ட தினத்திலிருந்து நாட்டின் சுதந்திரத்திற்காகவும், ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காவும் மேற்கொள்ளப்பட்ட சேவை மிக முக்கியமானதாகும். இந்த யுத்தம் காரணமாக உங்களது படையணியின் உத்தியோகத்தர்களினதும் ஏனைய பதவி நிலையினரினதும் பல உயிர்கள் நாட்டுக்காக அர்ப்பணிக்கப்பட்டதை நாம் அறிவோம். படையணியின் 135 உத்தியோகத்தர்களும் ஏனைய 3050 பதவியினரும் இராணுவ நடவடிக்கைகளின்போது நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த அனைத்துப் படையினரும் அமரத்துவம் வாய்ந்தவர்கள் என நான் குறிப்பிட வேண்டும்.

உங்களது படையணியின் பெயர் இந்நாட்டின் ஓர் உன்னதமான பெயர் என ஞாபகமூட்ட விரும்புகின்றேன். கி.பி. 1055 ம் ஆண்டில் ருஹுனுபிரதேசத்தில் மறைந்திருந்த கீர்த்தி குமரன் "விஜயபாகு" என்ற பெயரில் ஆட்சியில் அமர்ந்தபோது, எமது தாய் நாடு ருஹுனுபுரம் வரை சோழர்களுக்கு அடிமைப்பட்டிருந்தது. மிகக் கஷ்டமான நிலைமைகளின் கீழ் ருஹுனையிலிருந்து பொலன்னறுவை நோக்கிப் படைகளை நகர்த்தினார். ஒரு படையணி ருஹுனையிலிருந்து மேற்குக் கரையோரமாகக் கடல் மார்க்கமாக நாட்டிற்குள் வரும் எதிரிகளைத் தாக்கியவாறு மகாதீர்த்த அல்லது மன்னார் வரை சென்றது. மற்றைய படையணி நாட்டின் கிழக்கிலிருந்து சோழர்களின் கோட்டைகளைத் தகர்த்தியவாறு பொலன்னறுவைக்குச் சென்றது. அதன்பின் நாட்டின் மத்தியில் மஹியங்கனையூடாக இன்னொரு படையணி பொலன்னறுவைக்குச் சென்று பொலன்னறுவையை வெற்றி கொண்டு நாட்டை ஐக்கியப்படுத்தியது. அந்த இராணுவ நடவடிக்கை உலக யுத்த வரலாற்றில் சேர்க்கப்பட வேண்டிய வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது என நான் கூறிவைக்க விரும்புகின்றேன்.

அன்று ருஹுனு பிரதேசம் வரை எமது நாட்டை அடிமைப்படுத்திய சோழர்கள் "மும்முடிச்சோழ மண்டலம்" என எமது நாட்டை அழைத்தனர். கீர்த்திக் குமரன் விஜயபாகு என்ற பெயரில் 10ம் நூற்றாண்டில் ஆட்சிக்கு வந்திருக்காவிடின், இலங்கை "மும்முடிச் சோழ மண்டலம்" என அழைக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் பல கால கட்டங்களில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளன. பல்லாயிரம் வருடங்களாக அவை எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து, 1815 ஆம் ஆண்டு வரை முழு இலங்கையும் அடிமைப்பட்டிருக்கவில்லை. கி.பி. 1815 ஆம் ஆண்டில் நாம் யுத்தத்தில் தோல்வி அடைந்து அடிமையாகவில்லை. ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சிகள் காரணமாகவே இலங்கை அடிமைப்பட்டது.

இன்றும், இதையே ஏகாதிபத்தியவாதிகள் நமது நாட்டிற்குச் செய்யப் போகிறார்கள். விஜயபாகு அரசனின் காலத்தில் "மும்முடிச் சோழ மண்டலம்" என இந்நாட்டை அழைத்ததுபோல் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்நாட்டின் ஒரு பகுதி "தமிழ் ஈழப் பிரதேசம்" என அழைக்கப்பட்டது. போர் நிறுத்த ஒப்பந்தத்தால் அதற்கு ஓரளவு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. வெளிநாட்டுத் தலையீட்டின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை 2008 இல் நாம் கிழித்து எறிந்திருக்காவிட்டால், இன்று இந்நாடு எத்தகைய நிலைமைக்கு முகம் கொடுத்திருக்கும் எனச் சிந்திக்குமாறு நான் கோருகின்றேன். அப்படியாயின் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சர்வதேச ஆவணமாகக் கொண்டு, இந்நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு பாரிய ஒரு தாக்கத்தை ஏற்கனவே செய்து முடித்திருப்பார்கள்.

இன்று, நாம் தமிழ் ஈழத்தை ஒரு கனவாக மாற்றியுள்ளோம். தமிழ் ஈழத்தைக் கனவாக மாற்றிய எம்மைப் பழிவாங்குவதே தற்போது ஏகாதிபத்தியவாதிகளின் நோக்கமாகும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்ட போது, எமது நடவடிக்கைகள் வெற்றியளித்தாலும் இன்று எமக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதை நாம் அன்றே அறிந்திருந்தோம். உங்களது பாஷையில் சொல்வதாக இருந்தால் யுத்தத்தில் எதிரி திகைக்கும் விதமாகத் தாக்குதல் நடாத்துதல் (surprise attack) இரு தரப்பினருக்கும் முக்கியமானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தை வெற்றிகொண்டதன் பின் பொய்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்தி ஒரு சில சர்வதேச தொலைக்காட்சி அலைவரிசைகள் உலகத்தை திகைப்படையச் செய்து ஏதோ ஒன்றைச் செய்ய முற்படுகின்றன.

அன்று மனிதாபிமான செயற்பாட்டின் போது அதனை நிறுத்துவதற்கும், அதற்கு எதிராகவும் பணியாற்றிய சிலர் எமக்கு எதிராக ஜெனீவாவில் குற்றம் சுமத்துகின்றனர். அரசாங்கத்தின் தவறுகள் என விமர்சிக்கின்றனர். அரசு முறையாக வெளிநாட்டு உறவுகளை முகாமை செய்யாததால் ஏற்பட்ட நிலைமை எனவும் கூறுகின்றனர். நான் ஒன்றைக்கேட்க விரும்புகின்றேன். வெளிநாட்டு உறவுகள் அன்று முறையாக முகாமை செய்தமையால்தான் இலங்கை மீது பருப்புப் பொட்டலங்கள் வீசப்பட்டனவா? இலங்கைக்கு வெளிநாட்டு இராணுவம் இதனால்தான் வரவழைக்கப்பட்டதா? யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு அடிபணிந்து, நாட்டின் தலைவிதியை சில நாடுகளுடன் இணைந்து புலிகளுக்கு தாரைவார்த்துக்கொடுக்கப்பட்டது இதன் காரணமாகவா? இல்லை. மிகமோசமான முறையில் வெளிநாட்டு உறவுகளை முகாமை செய்து, அன்பு நண்பர்களை மறந்து வல்லரசுகளுக்கு அடிபணிந்து செயற்பட்டதால்தான் 30 வருடங்களாகப் பயங்கரவாதத்தை வெற்றிகொள்ள முடியாது போனது.

மனிதாபிமான செயற்பாட்டை மேற்கொள்ளும் பொழுது இதனைவிடக் கடினமான வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததென்பதை நான் கூற வேண்டும். இவ்வெளிநாட்டுத் தலையீடுகள் முகாமைத்துவக் குறைபாட்டினால் ஏற்படவில்லை. இவை ஏகாதிபத்திய நாடுகளின் தேவைகளாகும். புலம் பெயர் தமிழர்களின் தேவைகளாகும்.

நாம் எவ்வாறு இதற்கு முகங்கொடுப்பது? அதற்கு முகங்கொடுக்க நாம் உங்களது பலத்தையும் பயன்படுத்துகிறோம். விஜயபாகு காலாட் படையணியின் தொனிப்பொருள் "சமர்த்த நங் அதழ பார்க் கங்"

"தனது உபாய மார்க்க நுட்பங்களினதும் தொழில் துறையினதும் சாமர்த்தியசாலி எந்தப் பெரிய சுமையையும் சுமக்க முடியும்."

இன்று, நாம் எதிர்நோக்கியுள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு, இக்கூற்று மிக முக்கியமாமானதாகும். அன்று முப்படைகளில் சேவைபுரிந்த அதிகாரிகளை, வெளிநாடுகளில் இலங்கையைப் பிதரதிநிதித்துவம் செய்யும் வெளிநாட்டு சேவைகளுக்கு நாம் அனுப்பியுள்ளோம். அவர்கள் மேற்படி அபரிமித இராணுவ நடவடிக்கைகளின் சாட்சியாளர்கள்.

எதிரி, அன்று எமக்கு எவ்வளவுதான் பகைமையைக் காட்டினாலும், வெறுத்தாலும், எமது வீரர்களினதும் மக்களினதும் உயிர்களைப் பறித்தாலும் நாம் எமது எதிரிக்கும் அம் மக்களுக்கும் துரோகமிழைக்காத ஒரு கொள்கையைப் பின்பற்றினோம். அதனால்தான் இன்று சிறீ மகாபோதி, தலதா மாளிகை, நாகதீபம், மடுதேவஸ்தானம் என்பன பாதுகாக்கப்பட்டுள்ளன. அதனால்தான் காத்தான்குடி, முஸ்லீம்களின் மஸ்ஜிதில் இன்று முஸ்லீம்கள் சுதந்திரமாக அல்லாஹ்வை வணங்குகிறார்கள். தமிழ் மக்கள் சுதந்திரமாக நல்லூர் கோயில் கொண்டாட்டங்களைப் பக்தியுடனும் கோலாகலமாகவும் நடாத்துகின்றனர். இவை அனைத்தும் உங்களின் அர்ப்பணிப்பின் காரணமாகவே இடம் பெறுகின்றன..

எமது இராணுவ வீரர்களிடமிருந்த மனிதாபிமான நற்குணங்கள் காரணமாகவே எம்மால் அவ்வாறு செய்ய முடிந்தது. அதேபோல், மனிதாபிமான நற்குணங்கள் நிறைந்த இலட்சக்கணக்கான நபர்கள் உள்ள ஒரு முப்படை நாட்டுக்கு வளமாகும். உங்களிடமுள்ள அந்தப் பொறுமை, மனிதாபிமானம் என்பன பல்வேறு இனங்கள் வாழும் பாதிக்கப்பட்ட மாகாணங்களைக் கட்டியெழுப்புவதற்கு நாம் பயன்படுத்திக் கொள்வோம். பல்லாயிரக்கணக்கான LTTE உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்த இன்று எம்மால் முடிந்துள்ளது.

முப்படையினரின் பாரிய அர்ப்பணிப்புக் காரணமாக வடக்கு கிழக்கை துரிதமாக அபிவிருத்தி செய்ய எம்மால் முடிந்துள்ளது. புதுமையானவற்றைத் தற்பொழுது வடக்கு, கிழக்கிற்குச் செல்லும் மக்களால் காண முடியும். வடக்கு, கிழக்கை மீட்டெடுத்தமைபற்றி வியந்து போற்றுபவர்கள் அம் மாகாணங்களை அபிவிருத்தி செய்தமை பற்றி அதைவிட வியப்படைகின்றனர். இவை இரண்டிற்காகவும் இந்நாட்டின் முப்படையினர் முனநின்று செயற்பட்டனர் என்பதை இங்கு மிகப் பெருமிதத்துடன் நான் கூறுகிறேன்.

இன்று உலகின் மிகக் கூடுதலான நலன்புரிச்சேவைகளைப் பெறும், கௌரவத்தைப் பெறுகின்ற ஒரு இராணுவத்திற்கே நீங்கள் உரித்துடையவர்கள். அதேபோல் நாட்டை ஒன்றுபடுத்துகையில் திறமையான தொழிற் பயிற்சி கொண்ட, வெற்றிகரமான ஒரு படையணியாக இதனை நீங்கள் காக்க வேண்டியுள்ளது.

இன்றைய தினம் ஜனாதிபதி வர்ணம் மற்றும் படையணி வர்ணம் என்பவற்றைப் பெற்றுக் கொண்ட விஜயபாகு காலாட்படையணிக்கு அதனை நிறைவேற்ற முடியும் என உறுதியாக நம்புகின்றேன்.



**அன்று மனிதாபிமான செயற்பாட்டின் போது அதனை நிறுத்துவதற்கும், அதற்கு எதிராகவும் பணியாற்றிய சிலர் எமக்கு எதிராக ஜெனீவாவில் குற்றம் சுமத்துகின்றனர், அரசாங்கத்தின் தவறுகள் என விமர்சிக்கின்றனர். அரசு முறையாக வெளிநாட்டு உறவுகளை முகாமை செய்யாததால் ஏற்பட்ட நிலைமை எனவும் கூறுகின்றனர். நான் ஒன்றைக்கேட்க விரும்புகின்றேன். வெளிநாட்டு உறவுகள் அன்று முறையாக முகாமை செய்தமையால்தான் இலங்கை மீது பருப்புப் பொட்டலங்கள் வீசப்பட்டனவா? இலங்கைக்கு வெளிநாட்டு இராணுவம் இதனால்தான் வரவழைக்கப்பட்டதா? யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு அடிபணிந்து, நாட்டின் தலைவிதியை சில நாடுகளுடன் இணைந்து புலிகளுக்கு தாரைவார்த்துக்கொடுக்கப்பட்டது இதன் காரணமாகவா? இல்லை. மிகமோசமான முறையில் வெளிநாட்டு உறவுகளை முகாமை செய்து, அன்பு நண்பர்களை மறந்து வல்லரசுகளுக்கு அடிபணிந்து செயற்பட்டதால்தான் 30 வருடங்களாகப் பயங்கரவாதத்தை வெற்றிகொள்ள முடியாது போனது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source :srilankaguardian.org

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

# வட மாகாண சபைத் தேர்தலை

## உடன்டியாக நடாத்த வேண்டும்

சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதாயின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையும் எல்.எல்.ஆர்.சீ. பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தி, வட மாகாண சபைக்கு உடனடியாகத் தேர்தலை நடாத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2013-03-13 இல் கொழும்பில் நடந்த ஊடகவியலாளர்களின் சந்திப்பின் போது விஷேட பிரகடனத்தை வெளியிட்டு அறிவித்தார்.

இந்த நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்பதாயின் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதா? அன்றேல் சர்வதேச விசாரணையொன்றுக்கு நாட்டை இட்டுச் செல்வதா? என அரசாங்கம் உடனடியாக அறிவிக்க வேண்டுமென சுட்டிக்காட்டிய திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சர்வாதிகார ராஜபக்ஷ ஆட்சிக்காக நாட்டை தாரைவார்க்க இடமளிக்கப் போவதில்லையென சூளுரைத்தார்.

சர்வாதிகார ஆட்சியின் இருப்புக்காக நாட்டையும் மக்களையும் தாரைவார்ப்பதற்கு எதிராக சகல தரப்பினரையும் ஒன்றிணைக்கப் போவதாகவும் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மேலும் கூறினார். கொழும்பு ஜீ.எஸ்.பொன்சேக்கா வீதியில் அமைந்துள்ள எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஆற்றிய விசேட உரையில் மேலும் கருத்துத் தெரிவித்த எதிர்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பின்வருமாறும் கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாடு என்ற ரீதியில் சர்வதேச ரீதியாக இலங்கை எதிர்நோக்கியுள்ள பயங்கர நிலைமை தொடர்பாக ஐக்கிய தேசியகட்சி விரிவாக கலந்துரையாடியுள்ளது.
தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை வழங்குவதற்கு செயற்பட்டுக்கொண்டிருந்தமையினால், சர்வதேசப் போர் குற்றவியல் நீதிமன்ற சட்டத்துடன் தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை பிரதமர் என்ற வகையில் 2002 - 2003 காலப்பகுதியில் நான் தெளிவாக மறுத்தேன்.

சர்வதேசப் போர் குற்றவியல் சட்டம் தொடர்பான இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இலங்கையை அச் சட்டத்திற்கு அடிபணிய வைக்கக் கூடாதென அன்று நான் எடுத்த நிலைப்பாட்டின் காரணமாக போர்க் காலத்தின்போது இலங்கையில் நடந்த நிகழ்வுகள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அதனை விசாரணை செய்ய இயலாது போயிற்று.

தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வழங்கி, இனப்பிரச்சினையைத் தீர்த்து, தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே அச்சந்தர்ப்பத்தில் எனது முக்கிய தேவையாக இருந்தது. ஆயினும் ராஜபக்ஷ அரசாங்கம் மேற்கொண்ட நிலைப்பாட்டின் காரணமாக இச்சந்தர்ப்பத்தில் அன்றைய நிலைமையினை விட முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலைமையினையே நாடு எதிர்கொண்டுள்ளது.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2009 ல் ஐக்கிய நாடுகள் சபையுடன் இரு விசேஷட ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார். இப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுள் ஒன்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பங்கீ மூனுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைப்படி இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்ட ஒப்பந்தமாகும்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்படுகின்றன எனவும், வெள்ளை வான்கள்மூலம் ஆட்கள் கடத்தப்படுவதுடன், நீதிமன்ற உத்தரவுகளை மீறி மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன எனவும், இப் பிரேரணை மூலம் சர்வதேச மனித உரிமைகள் பேரவைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, இலங்கை அரசாங்கம் உறுதியளித்தவாறு, பொது உடன்பாடுகள் எதனையும் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பாகவும், இப்பிரேரணை மூலம் சர்வதேச மனித உரிமைகள் பேரவை விசேஷட கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கமும், சர்வதேசமும் உடன்பட்ட பொது இணக்கப்பாடு என்பது, அதிகாரப் பகிர்விற்கும், அனைவரினது மனித உரிமைகளை உறுதி செய்வதற்குமான இலங்கை அரசாங்கத்தின் இணக்கப்பாடாகும்.

அரசியல் அதிகாரப் பகிர்வின்றி தேசிய ஒருமைப்பாடும், தேசிய ஒற்றுமையும் ஏற்படுத்தப்பட முடியாது, அதே சமயம் அனைவரினதும் மனித உரிமைகளை உறுதி செய்யப்படுவதற்கான எந்த ஒரு சாத்தியமும் இல்லை. இலங்கை அரசாங்கம் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து, மனித உரிமைகளை உறுதிசெய்வதாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இப்பிரேரணை மூலம் இவை குறித்தே குற்றம் சுமத்தப்படுகிறது. அவ்வாறே யுத்த காலத்தின்போதும் அதன் பின்வரும் இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சுதந்திரமானதும் பக்கச் சார்ப்பற்றதுமான சர்வதேச விசாரணை ஒன்றும் நடாத்தப்பட வேண்டும் எனவும் கேட்டும் கொள்கின்றது. அத்துடன் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் அனைத்து பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும், அப்பிரேரணை மூலம் சர்வதேச மனித உரிமைகள் பேரவையிடம் காரண காரியங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்படும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தமையால் யுத்த கால கட்டத்தில் இலங்கையில் நடந்த சம்பவங்களைப் பற்றிய விடயங்களைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆற்றலைக் கொண்ட சர்வதேசப் போர் குற்றவியல் சட்டத்துடன் தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடக் கூடாது என்ற நிலைப்பாட்டில் நான் 2003 ம் ஆண்டிலிருந்தே இருந்தேன். அன்றிலிருந்து இன்று வரை கடந்து சென்ற தசாப்தத்தில் நான் கொண்டிருந்த நிலைப்பாடு தலைகீழாக மாற்றப்பட்டதுடன் மனித உரிமைகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கியது. அதுமட்டுமன்றி முப்படை வீரர்கள் ஏதோ ஒரு விதத்தில் மனித உரிமைகளை மீறியிருப்பின் அவர்களுக்கு எதிராக இராணுவச் சட்டத்தின்கீழ் இராணுவ நீதிமன்றத்தின்மூலம் செயற்படுவதற்கு அரசாங்கம் உடன்பட்டது.

அரசாங்கம் அன்று சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய, இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகச் சுதந்திரமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கூறுகிறது.

2003 ம் ஆண்டிலிருந்து 2013 வரையான தசாப்தத்தில் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு மாற்றமடைந்துள்ள நில்மையே இதன்மூலம் தெளிவாகிறது. ஒரு நாடு என்ற வகையில் ஏன் இவ்வாறான ஒரு கஷ்டமான நிலை இலங்கைக்கு நேர்ந்துள்ளது.

"சர்வதேசப் போர் குற்றவியல் நீதிமன்றச் சட்டத்திற்கு அமைய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இலங்கையை அதற்கு அடிபணிய வைக்கக் கூடாது என 2003 ல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது நான் ஒரு தெளிவான தீமானத்தை மேற்கொண்டேன். 2009 ல் யுத்தம் ஓய்ந்த பின்னர் இலங்கையை சர்வதேச் போர் குற்றவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றச் சட்டம் தொடர்பான ஒப்பந்தத்தில் உள்ளடக்குவதா? அல்லது 2003 ல் நான் பிரதமராக இருந்தபோது கொண்டிருந்த நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருப்பதா என இவ் அரசாங்கமே தீர்மானிக்க வேண்டியிருந்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2009 ல் ஐக்கிய நாடுகள் சபையுடன் இரு விஷேட ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார். இப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுள் ஒன்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பங்கீ மூனுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைப்படி இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்ட ஒப்பந்தமாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2009 ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் ஏற்றுக்கொள்ளும் பொது உடன்பாட்டுடன் தொடர்பான விடயம் கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

**அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரசியல் தீர்வொன்றை சமர்ப்பித்து 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுவதுடன், அந்நடவடிக்கையை அமுல்படுத்துவதற்காக தமிழ் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய சகல அரசியல் கட்சிகளுடனும் பரந்துபட்ட கலந்துரையாடலை நடத்துவதாகப் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் மூலம் மகிந்த ராஜபக்ஷ சர்வதேசத்திற்கு வாக்குறுதியளித்தார்.**

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும் மனிதாபிமான சட்டத்தையும் மீறியவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் உடன்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் நாயகம் அன்று குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து மனித உரிமைகள் யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் அன்று ஏற்றுக்கொண்டது அதே சமயம் இச் சந்தர்ப்பத்தில் நாட்டிற்கு வழங்கப்பட வேண்டியது யுத்தம் மூலமான தீர்வு அல்ல மாறாக அரசியல் தீர்வாகும் எனவும், ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்காக 13வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி உடன்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

**நாட்டின் சகல இனத்தவர்களுடனும் ஆழமான ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டதுடன் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அவர்களும் இலங்கை அரசாங்கமும் ஏற்றுககொண்ட பொது உடன்பாட்டுடன் தொடர்பான பிரகடனத்தில் இவ்விரு யோசனைகளும் உள்ளடக்கப்பட்டன.**

அதன் பின்னர் அன்றைய சட்டமா அதிபரான மொஹான் பீரிஸ், வெளிநாட்டுச் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பாலித்த கொஹொன ஆகியோர், 2011 இல் ஐக்கிய நாடுகளின் செயலாளரினால் இலங்கை தொடர்பாக அறிவுரை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் எதிரே தோன்றி மனித உரிமைகளை மீறிய பாதுகாப்புப் படை உறுப்பினர்களுக்கு எதிராக இராணுவச் சட்டத்தின்கீழ் அல்லது குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதாகக் குறிப்பிட்டனர்.


**ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில், அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றபடவில்லையெனக் கூறப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரத்தை அரசாங்கமே தட்டில் வைத்து சர்வதேசத்திற்கு வழங்கியுள்ளது. அது நடந்து முடிந்த கதையாகும். அவ்வாறாயின் தற்போது என்ன செய்ய வேண்டும்? 2009ல் சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கு ஏற்பவும், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளருக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டிற்கு அமைய செயற்பட வேண்டியிருப்பினும், அரசாங்கம் அவ்வாறு செயற்படவில்லை. இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துமாறு நான் பல தடவைகள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்ட போதும் அரசாங்கம் அதற்கு செவிமடுக்கவில்லை.

சர்வதேச இணக்கப்பாடுகளையும் வழங்கிய வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவையும் நியமித்தது. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு முன்னிலையில் ஐக்கிய தேசியக் கட்சி சாட்சியமளிக்காத போதும், ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை என்பதனை நாம் தெளிவாகக் கூறியுள்ளோம். அவ்வாறே தமிழ் தேசிய கூட்டமைப்பும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் தனது நிலைப்பாட்டைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கம் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆட்சேபிக்கவில்லையென்பதுடன், எம்முடன் இது தொடர்பாகப் பேச வேண்டுமென கூறினாலும் அரசாங்ம் அதற்கான எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதிமொழிக்கு ஏற்பவும், ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகளுக்கு அமையவும் பணியாற்றி, கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாதுவிடின், அரசாங்கத்திற்கு எதிராக சர்வதேச விசாரணையொன்று நடாத்தப்பட



**அரசாங்கம் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆட்சேபிக்கவில்லையென்பதுடன், எம்முடன் இது தொடர்பாகப் பேச வேண்டுமென கூறினாலும் அரசாங்ம் அதற்கான எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென உலகம் கருதும்.

இலங்கை இன்று ஒரு பாரிய அபகீர்த்திக்குள்ளாகியுள்ளது. உண்மையிலேயே நாடு என்ற வகையில் இச் சந்தர்ப்பத்தில் அடல்ப் ஹிட்லரின் ஜெர்மன் நாட்டின் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளது. நாடு என்ற வகையில் அவ்வாறான ஒரு நிலைமையை நீங்கள் விரும்புவீர்களா? மனித உரிமைகளை மீறும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்படுவதை நீங்கள் அங்கீகரிப்பீர்களா? ஏன் இந்த நிலைமையிலிருந்து மீள முடியாது?

இச் சந்தர்ப்பத்தில் பிரச்சினைகளைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு வெறும் அரசியல் இலாபம் பெறக் கூடாது இந்நிலைமையிலிருந்து எவ்வாறு மீள முடியுமென ஆழமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டுமென நான் இதற்கு முன்னரும் அரசாங்கத்திடம் தெளிவாகக் கூறியுள்ளேன்.



**அரசாங்கம் நாட்டையும் மக்களையும் பற்றிச் சிந்தித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் அனைத்து தரப்பினரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள். ஆளுங் கட்சியினதும், எதிர்க்கட்சியினதும் சம அளவிலான பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளுள் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமான பரிந்துரைகள் யாவையெனச் சுட்டிக்காட்டப்படல் வேண்டுமென நாம் கூறுகின்றோம்.**

நாட்டினதும் நாட்டு மக்களினதும் தவறினால் சர்வதேசம் மிக மோசமான முத்திரையை பதிக்கவில்லை. மாறாக அரசாங்கம் தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றாமையே அதற்கான காரணமாகும். மனித உரிமைகளை மீறும், மனிதர்களைக் கொலை செய்யும் ஒரு நாடாகவே இன்று இலங்கையை அனைவரும் கருதுகின்றனர்.

அன்று நாம் வெளிநாடொன்றுக்குச் சென்றால், இலங்கை ஒரு அழகான நாடு எனக் கூறி வெளிநாட்டவர்கள் எம்மையும் எமது நாட்டையும் பாராட்டினார்கள். ஆயினும், தற்போது எமது நாட்டில் என்ன நடந்துகொண்டிருக்கிறது? என எம்மைக் கேள்வி கேட்கின்றனர். ஏன் இவ்வாறு மனிதர்கள் கொலை செய்யப்படுகின்றார்கள்? ஏன் மனிதர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என வினவுகின்றனர்.

சுமார் 60 வருட காலமாக நாம் வாழும் உலகம் பூராவும் பயணம் செய்து உலகின் கௌரவத்திற்கும் பாராட்டுதல்களுக்கும் வழி வகுத்தோம். ஆயினும், இன்றைய இளைஞர்கள் வெளிநாடொன்றுக்குச் சென்று அந்தக் கௌரவத்தையும் பாராட்டையும் பெற முடிகின்றதா? எதிர்காலத்தில் இலங்கையர்களை கொலைகாரர்களாகவே நோக்குவார்கள். இந் நிலைமைகளின் கீழ் இளைஞர் யுவதிகள் கல்வி கற்பதற்காகவோ தொழில் புரிவதற்காகவோ அல்லது வாழ்வதற்காகவோ எவ்வாறு வெளி நாடொன்றுக்குச் செல்ல முடியும்?

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அங்கீகரித்துள்ள பிரேரணை அமுல்படுத்துவதற்கு குறிப்பிட்டதொரு காலம் எடுக்கும் எனவே தற்போதுள்ள நிலைமைகளின் கீழ் மக்களை மீட்டெடுப்பதற்கான சாத்தியம் தற்போதுகூட இல்லாமல் இல்லை.

2009 ல் சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதிமொழிகளையும் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு மாற்று வழியினை மனித உரிமைகள் பேரவைக்குச் சமர்ப்பிப்பதே தற்போது எம்மால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையாகம். கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதாகத் தெளிவான ஓர் அறிக்கையினைச் சமர்ப்பித்து, வட மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடாத்துவதே தற்போதைய தேவையாகவுள்ளது.

**13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அரசாங்கத்தின் ஒரு சாரார் கூறுகின்ற அதே வேளை இது தொடர்பாக எதுவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையென அரசு கூறுகிறது. சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதி மொழிகளும் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகளும் நல்லதோ கெட்டதோ தற்போது இவற்றுக்கிடையே சிக்கித் தவிக்கின்றோம்.**

**சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதிமொழிகளையும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாடுகளையும் அமுல்படுத்துவதற்காக சகல அரசியல் கட்சிகளுடனும் சகல இனத்தவர்களுடனும் அன்று அரசு கலந்தாலோசிப்பதற்கு இணங்கியது. மனித உரிமைகள், சனநாயக உரிமைகள், நாட்டின் பிரச்சினைகள், தமிழ் மக்களுக்கான தீர்வு வழங்கல், சிறுபான்மையினரதும் பெரும்பான்மையினரதும் பிரச்சினைகள் என்பன தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தி நாம் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும்.**

அவ்வாறான ஒரு செயன்முறையைப் பின்பற்றி சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வாய்ப்பு இருந்தும் ஏன் அவ்வாறு நடந்துகொள்வதில்லை? நாம் இதற்குத் தயார். சென்ற வாரம் நான் இது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஞாபகமூட்டினேன். இதனை இந்த வாரமும் அவர்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இவ் விடயங்கள் தொடர்பாகச் சென்ற வாரம் சிறிகொத்தவில் நான் வெளியிட்ட அறிக்கைக்கு அரசாங்கம் இதுவரை பதிலளிக்கவில்லை. இச் சந்தர்ப்பத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ளாது அமைதி காக்கும் பட்சத்தில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும். மாறாக எனக்கல்ல.

அரசாங்கம் நாட்டையும் மக்களையும் பற்றிச் சிந்தித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் அனைத்து தரப்பினரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள். ஆளுங் கட்சியினதும், எதிர்க்கட்சியினதும் சம அளவிலான பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துரைகளுள் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமான பரிந்துரைகள் யாவை-யெனச் சுட்டிக்காட்டப்படல் வேண்டுமென நாம் கூறுகின்றோம்.

அப்போது ஆளும்கட்சியினதும் எதிர்கட்சியினதும் பிரதிநிதிக-ளைக் கொண்ட குழுவில் 35 பேர் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வதாயின் பரிந்துரைகளைப் புறக்கணிக்க முடியும் என்பதுடன் அவ்வாறில்லா விடின் அனைத்து பரிந்துரைகளையும் அரசு அமுல்படுத்த வேண்டும்.

அரசு தானாகவே தயாரித்த அறிக்கையான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏன் நடைமுறைப்படுத்துவதில்லை? பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை தொடர்பாக சர்வதேசம் அரசாங்கத்தைச் சாடியிருப்பினும், இறுதியில் பாதிப்படைபவர்கள் பொது மக்களே. சர்வாதிகார ஆட்சியைப் பாதுகாப்பதற்காக நாட்டையும் மக்களையும் பலிகொடுக்க வேண்டாம்.

ஏப்பிரல் மாதத்தில் கூடி இவ் விடயங்கள் தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டிற்கு வர முடியுமாயின் நாட்டையும், மக்களையும் காப்பாற்றுவதற்காகப் பின்பற்றப்பட வேண்டிய செயன்முறைகளை உள்ளடக்கிய ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் நாம் தயாராக உள்ளோம்.

மத்தள சர்வதேச விமான நிலையத்தைப் பார்வையிட ஊடகவியலாளர்களை இலவசமாக விமானத்தில் அழைத்துச் சென்றதுபோல் என்னையும் இலவசமாக அழைத்துச் செல்வார்களா எனக் கூறமுடியாத போதும் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் அச்செயற்பாட்டிற்கு இணங்குவதற்கு நான் தயாராகவுள்ளேன்.

பாராளுமன்ற எதிர்கட்சிக் குழு இணங்கியுள்ள நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நிராகரிக்கவில்லை. வடமாகாணத் தேர்தலை எதிர்வரும் ஜுன் மாதத்தில் அரசு உடனடியாக நடாத்துதல் வேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பாக இந்தியப் பாராளுமன்றத்தில் கொந்தளிப்பான ஒரு நிலைமை ஏற்பட்டதுடன் தமிழ் மக்களுடனும் பேச வேண்டும் என இந்தியப் பிரதமர் கூறினார். 2009 ல் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய அரசு தமிழ் மக்களுடன் மட்டுமல்லாது சகல இனங்களுடனும் பேச வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். மிகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே எனினும் பிரச்சினை அவர்களுக்கு மட்டும் உரியதொன்றல்ல. வடக்கின் தமிழ் மக்கள் போல் துன்பங்களை அனுபவித்த மக்கள் கூட்டத்தினர் தெற்காசியாவிலோ, தென்கிழக்கு ஆசியாவிலோ இல்லையென்றே கூறலாம்.

அனைவரினதும் உரிமைகள் பறிக்கப்பட்டு கஷ்டப்படுகின்றமையினால் இலங்கையர்கள் என்ற வகையில் நாட்டையும் மக்களையும் பாதுகாத்து நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும், 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தையும் அமுல்படுத்தி அரசு உடனடியாக வடமா-காண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும். அதே சமயம் இவ்விடயங்கள் தொடர்பாக எமது யோசனை-களைத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.


கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதா அல்லது சர்வதேச விசாரணையை எதிர்கொள்வதா என்ற இரண்டு மாற்றுவழிகள் தற்போதுள்ளன. இவற்றுள் எதனை அரசாங்கம் தெரிவு செய்கிறது என்பதை உடனடியாக நாட்டிற்கு அறிவிக்க வேண்டும்.

சர்வதேச விசாரணையை அரசு ஏற்றுக்கொள்கிறதா? இன்றேல் கற்ற பாடங்களுக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதா? நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென அவரும் வலியுறுத்தியுள்ளார்.

நவநீதம் பிள்ளை அவர்களது அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று அவரது அறிக்கையில் வெளியிடப்பட்ட பகுதியுடன் அனைவரும் இணங்கலாம்.

அவரது அறிக்கையின் அப் பகுதி-யையும் பின்பற்றி கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தினால் நவநீதம் பிள்ளையும் இதில் சிக்கிக் கொள்வார். நவநீதம் பிள்ளையை சிக்க வைக்கும் ஒரு நிலைப்பாட்டிற்குச் செல்லாது அரசு அவரது ஏனைய நிபந்தனைகளில் தானே சிக்கிக் கொண்டுள்ளது.

உண்மையில் அரசாங்கம் நாட்டையும் மக்களையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கிறது. ஆகவே சர்வாதிகார ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக நாட்டைப் பலிகொடுக்க வேண்டாம் என நான் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். அனைவரும் ஒன்று திரண்டு செயற்பட்டால் நாட்டையும் மக்களையும் காப்பாற்றலாம். சர்வாதிகார ஆட்சியின் எதிர்காலம் பற்றி எனக்கு எதுவித பயனுமில்லை. ஆட்சி மாற்றத்திற்கான தேசியத் தேர்தலின் பின்பு இந்த ஆட்சியைத்தான் கவனித்துக் கொள்ளப் போவதாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அங்கு மேலும் குறிப்பிட்டார்.



**கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும், 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தையும் அமுல்படுத்தி அரசு உடனடியாக வடமாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும். அதே சமயம் இவ்விடயங்கள் தொடர்பாக எமது யோசனைகளைத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source : www.vikalpa.org

# அமெரிக்க பிரேரணை

## "ராஜபக்ஷ தனது வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்வதற்கு கூடிய நேரத்தை வழங்குவதாகும்."



**கேர்ணல் ஆர்.ஹரிஹரன்**
**தென்ஆசிய விடயங்கள் தொடர்பான புலனாய்வு நிபுணர்**

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பான வகைப் பொறுப்பு கூறும் வகையில் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 24 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை தற்போது ஏனைய அரசுகளின் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேற்படி நகல் பிரேரணை இந்திய தொலைக்காட்சி ஒன்றின் ஊடாக என்னிடம் கிடைக்கப்பெற்றுள்ளது. அது உத்தியோகபூர்வமான பிரதியாக இல்லாவிட்டாலும் அது உண்மையான பிரேரணையாக அங்கீகரிக்கப்படலாம் என்ற நம்பிக்கையில் நான் இக்கட்டுரைமூலம் இது தொடர்பான பகுப்பாய்வினை மேற்கொள்கின்றேன்.

முதன்முறையாக காணும் ஒரு பொருளை இதற்கு முன்னர் ஏற்கனவே கண்டுள்ளேன் என்ற ஒரு மாயைக்கு சமமான உணர்வு அமெரிக்க பிரேரணை தொடர்பாகவும் ஏற்படுகிறது. 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் கண்காணிப்பு நடவடிக்கையாக ஒரு "செயற்பாட்டு மார்க்கம்" உள்ளடங்கிய பிரே-ரணையை சமர்ப்பிக்கும் வரையிலான நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த அசைவு தொடர்பாக முக்கிய தரப்பினர் பலர் பின்னூ ட்டல்களை முன்னரைப் போலவே சமர்ப்பித்துள்ளனர். எவ்வாறாயினும் கொழும்பு அரசாங்கத்திடம் இருந்து இம்முறை தோன்றும் எதிர்ப்பு சற்றுத் தளர்ந்துள்ளது (அல்லது எதிர்ப்பியக்கத்தை நடத்துவது சற்று காலத்திற்கு முன்னையது எனக் கருதி இருக்கலாம்.) சில சமயங்களில் செயற்படாமை என்ற கர்மத்தின் பயனாகவும் இது ஏற்பட்டு இருக்கலாம். அல்லது இராணுவத்தினுள் நாம் குறிப்பிடுவதைப் போல "ஒன்றைத் தடுக்க முடியாவிட்டால், புன்சிரிப்போடு அதனை ஏற்றுக்கொள்க!" என்ற கூற்றுப்படி அரசாங்கம் செயற்படுவதாக அமையலாம்.

போர்க் குற்றங்கள் பற்றி ஏனோ தானோவென்று பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு இலங்கை அரசின் மனப்பாங்கிலான மாற்றமா? நான் இதனைச் சந்தேகிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையில் போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் பொருட்படுத்தாமை பற்றி இந்திய அரசாங்கம் காரசாரமாக விமர்சிக்கின்றது. அதேசமயம் திராவிட முன்னேற்ற கழகம். உலகில் வாழும் அனைத்து தமிழ் மக்களினதும் ஒரே இரட்சகர் தான் என்று நிரூபிக்க முயல்கின்றது.**

நிகழ்கால ஓவியத்தில் இது இடம்பெற வேண்டுமாயின் "பன்றிகள் பறக்க வேண்டும்!" இதற்கான காரணம் மிகச் சரளமானது. புதியதொரு நடவடிக்கையின் பொருட்டு ஓர் கருத்தை முன்வைப்பதாக சமிஞ்சையின் மூலமேனும் ஐக்கிய அமெரிக்கா அறிவிக்கவில்லை. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல இது தொடர்பான ஒரு கண்காணிப்பையே செய்ய முடிகிறது.

எனக்குத் கிடைத்துள்ள அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையின் பிரதிக்கு அமைய தற்போதைய நிலைமை தொடர்பாக இலங்கை அரசுக்கு எதுவித அச்சுறுத்தலும் ஏற்பட மாட்டாது. ஆனால் அங்கு இலங்கை அரசு வழங்கிய உறுதி மொழிகளை நடைமுறைப்படுத்தவில்லை என்று ஒரு உறுதிமொழிகளின் பட்டியலை அமெரிக்கா முன்வைத்துள்ளது. அதன்மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது இலக்கு வைக்கும் அழுத்தம் தீவிரப்படுத்துவதையும் முன்னைய பிரேரணைக்கு அமைய செயற்படாமை குறித்து இலங்கை அரசுக்கு எதிராக கூட்டு நடவடிக்கையை ஏற்படுத்துவ்து பற்றியும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ராஜபக்ஷ தனது வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்வதற்குக் கூடிய கால அவகாசத்தை வழங்கி உள்ளமையாகும். "இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் வகைப் பொறுப்புக்குக் கொண்டுள்ள கடப்பாடுகளின் மேம்பாடு" என்பவை மூலம் அதில் உள்ள தலையங்கம் (கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளில் சமர்ப்பித்த யோசனையில் இருந்தவாறு அமெரிக்காவின் நடவடிக்கைகளின் இயல்பைக் காட்டுகிறது. இலங்கையின் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பாக எதுவிதமான அச்சுறுத்தல்கள் அல்லது பலாத்காரமாக தலையிடுதல் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

**அமெரிக்க பிரேரணையின்மூலம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் விடயங்கள் பின்வருமாறு.**

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தொடர்ச்சியாகக் கிடைக்கும் அறிக்கைள், சட்டத்தின் ஆட்சிக்கும் நீதிமன்றத்தின் சுயாதீனத்திற்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், இலங்கை அரசியல் அமைப்பில் குறிப்பிடப்படும் வகையில் மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிருவதற்கு, இலங்கையின் மத்திய அரசாங்கம் செயற்படாது உள்ளது. இவை உட்பட பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை அமுலாக்குவதில் காட்டும் அசிரத்தை.

சட்டத்திற்குப் புறம்பான முறையிலே செய்யப்படும் படுகொலைகள், பலாத்காரமாகக் கடத்தப்படுதல் பற்றி காணாமல் போதல் பற்றி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், இலங்கையின் வடமாகாணம் இராணவ மயமாக்கல், காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு பக்கசார்பற்ற பொறிமுறையை நடைமுறைப்படுத்தல், முன்னர் சுயாதீனமாக இருந்த நிறுவனங்களை வலுவூட்டல், மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கான அரசியல் தீர்வை நாடுதல், அனைவர் சார்பிலும் பேச்சுச் சுதந்திரத்தை எழுத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தி பாதுகாத்தல், சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்தல் மற்றும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு இலங்கை அரசு முன்வைத்திருக்கும் தேசிய நடவடிக்கைத் திட்டம் போதுமானதல்ல.

அதன்மூலம் எதிர்காலத்திற்கான வழிமுறைகளின் திசை மார்க்கமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கை அரசுடன் கலந்துரையாடி ஓர் இணக்கப்பாட்டிற்கு வருவதன் மூலம், இலங்கை அரசுக்கு அவசியமான ஆலோசனைகளையும் தொழிநுட்ப உதவியையும் இப்பிரேரணை ஊக்குவிக்கிறது. அதே சமயம் வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக நல்லிணக்கம் மற்றும் வகை பொறுப்பு கூறும் கடப்பாடு போன்ற விடயங்களுக்கு ஏற்புடைய வகையில் குறிப்பாக இலங்கைக்குள் சர்வதேசச் சட்டம் மீறப்பட்டமைபற்றி மேற்கொள்ளப்படும் புலனாய்வுகளின் முன்னேற்றம் பற்றிய அறிக்கையை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும், இப்பிரேரணை மனித உரிமைகள் ஆணையாளரிடம் வேண்டி நிற்கிறது.

**நிலைமை இவ்வாறாக இருக்கையில், அமெரிக்காவின் பிரேரணை 22 ஆவது அமர்வில் சமர்பிக்கப்பட்ட பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதி-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லும் செயற்படுத்தப்படாத விடயங்களை செயற்படுத்துவதற்கு முன்வைக்கப்படும் ஒரு தள்ளு விசை மாத்திரமேயொழிய மேலதிகமாக ஒன்றும் இடம்பெறப் போவதில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் கட்டிடத் தொகுதிக்குள் இவை நடைபெறுகின்ற காரணத்தினால் இப்பிரேரணை ஒரு நடுநிலை மார்க்கத்தை முன்வைக்கிறது. அது இலங்கை நடைமுறைப்படுத்திய நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஆராயும் அதேவேளை இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையை வலியுறுத்துகிறது. இலங்கை தொடர்பாக இதற்கு முன் பிரேரிக்கப்பட்ட பிரேரணையோடு வாழ முடிந்தால் இம்முறை அது குறித்து ஏன் அல்லோலகல்லோலப்பட வேண்டும்.**

எனினும் இலங்கை கவனம் செலுத்த வேண்டிய ஒரு விடயம் உண்டு. இம்முறை சமர்ப்பிக்கப்படும் பிரேரணை ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. அனைத்தையும் பொதுமைப்படுத்தி இதற்கு முன்னர் சமர்ப்பித்த பிரேரணையைப் போல் அல்லாது, ஒப்புநோக்கில் பார்க்குமிடத்து இம்முறை, "பொறுப்புக்கூற கடப்பாடு கொண்டுள்ளது" பற்றி ஏற்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். அதேசமயம் அவற்றைப் பட்டியல் படுத்தவும் வேண்டும். இப்பிரேரணை மூலம் உள்நாட்டு நிர்வாகத்தையும் போருக்குப் பின்னரான நல்லிணக்கத்தோடு ஏற்புடைய இலங்கை அரசாங்கம் தொடர்ந்து கண்டுகொள்ளாதவையுமான சர்வதேச சட்டத்தை மீறுதல் போன்ற மிகப் பாரிய விடயங்கள் பற்றியும், சர்வதேச சமூகத்தின் மத்தியில் வளர்ந்து வரும் அதிருப்தியான தன்மையும் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். போர்க் குற்றங்கள் மூலம் சர்வதேச சட்டம் மீறப்பட்டுள்ளது. இப்பிரேரணை மூலம் அவர்கள் மீது இலக்கு வைக்கப்படும் சர்வதேச விசாரணைகளில் இருந்து தப்பித்துக்கொள்ள மேற்கொண்ட முயற்சியும் இலக்காகும் ஓர் இடைவெளியை உருவாக்கியுள்ளது.

இந்தியப் பாராளுமன்றத்தில் நேற்று இதுபற்றி நடந்த கலந்துரையாடல்மூலம் எதிர்பார்த்த மட்டத்தில் பிரச்சினைகள் நிலவியது. எதிர்கட்சிகள், குறிப்பாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையில் போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் பொருட்படுத்தாமை பற்றி இந்திய அரசாங்கம் காரசாரமாக விமர்சிக்கின்றது. அதேசமயம் திராவிட முன்னேற்ற கழகம். உலகில் வாழும் அனைத்து தமிழ் மக்களினதும் ஒரே இரட்சகர் தான் என்று நிருபிக்க முயல்கின்றது. வெளிநாட்டு அமைச்சர் சல்மான் குர்ஷிட் அவர்களின் உரை மிகவும் பலம் குன்றியதாகவே அமைந்திருந்தது. போர்க் குற்றங்கள் பற்றி உரையாற்றுவதை அவர் தவிர்த்துக் கொண்டார். ஆனால் அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு செல்வாக்கு செலுத்துவதன்மூலம், அதிகார பகிர்வுபற்றிய விடயத்திற்கு ஏற்புடைய வகையில் இந்தியாவின் திடசங்கற்ப்பம் பற்றி அளவுக்கதிகமாக எடுத்துக் கூறினார்.

புதிய கருத்துக்கள் இன்மை இலங்கை மீதான இந்தியக் கொள்கை ஒரு யதார்த்தமற்றதாக வீழ்ச்சியுற்று இருந்ததைக் காண முடிந்தது. ராஜபக்ஷ அரசு 13 ஆவது திருத்தத்தை அரசியல் பிரேத அறையில் போட்டு இழுத்து மூடிய நிலையில் இந்தியா அது பற்றி அலட்டுகின்றது.

அமெரிக்கப் பிரேரணை மூலம் கொழும்பையோ, களனியையோ, பாக்கு நீரிணையையோ தீயிட மாட்டாது. ஏற்கனவே இந்தியா இப்பிரேரணைக்கு சார்பாக வாக்களித்துவிட்டு நிலைமைகளை கண்காணித்துக் கொண்டிருக்கிறது. இவற்றைப் பற்றி கருத்தில் கொள்கையில் வெளி நாட்டு அமைச்சர் குர்ஷிட் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் இந்தியா வாக்களித்தமையையிட்டு அமைதி காப்பது ஆச்சரியத்திற்கு உரியது அல்ல. இதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் நாராயண சுவாமி, இந்தியா அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்குமென சூளுரைத்தார். அவ்வாறாயின் இதற்கான காரணி யாது? தவறான தகவல்களை அடிப்படையாக் கொள்வதா அல்லது சிக்கலானதா?

சில சூதாட்டக்காரர்கள் அனேகமாக அவர்கள் செயற்படும்போது அவர்களுக்கு பழக்கப்பட்ட முறையில் செயற்பட்டாலும் அந்தச் சிறப்புரிமை இலங்கையரிடம் கிடையாது. உலகம் முழுவதும் எதிர்ப்பியக்கங்கள் உருவாக்கும். இலங்கை பாரதூரமாகத் தனது கவனத்தில்கொள்ள வேண்டிய விடயங்கள் உண்டு. இது சர்வதேச சமூகத்தால் முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறை எதிர்ப்பு இயக்கங்கள் கடந்த சந்தர்ப்பங்களைவிட மேலோங்கின. சனல் 4 வீடியோ வெளியீடு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் அறிக்கைகள் உலகம் பூராகவும் முக்கியமாக பிரதான நகரங்களில் ஸ்தாபன ரீதியான அணிவகுப்புக்கள் இடம்பெறுகின்றன. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகங்கள் ஒழுங்கு செய்யும் எதிர்ப்பு இயக்கங்கள், புதுடெல்லி, ஜெனீவா ஆகிய முக்கிய நகரங்களில் இடம்பெறுகின்றன. அதே சமயம் அரசியல் சந்திப்புக்களும் இடம்பெறுகின்றன.

இவை அனைத்தும் தமக்கெதிரான சர்வதேச சதிகள் என இலங்கை அரசாங்கம் கூறினாலும், இலங்கையானது தனது நிகழ்ச்சித்திட்டத்தை மாற்றி அமைக்காவிட்டால் இந்நிலைமை மேலும் மோசமாகலாம். இலங்கை அரசுக்கு எதிரான எதிர்ப்புக் குரல் மேலும் தீவிரமாகலாம். எதிர்ப்பியக்கங்கள் பாரிய பேரணிகளாக உருவாகலாம். இலங்கை அரசும் அதன் அதிகாரிகளும் வெட்கமடைதல் சாதாரண நிகழ்வாக மாறலாம். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உலகத்தில் மிகப் பயங்கரமான அமைப்பிற்கு எதிராக வெற்றிவாகை சூடிய ஒரு தேசம் இந்நிலைமையை எதிர்நோக்குவது கவலைக்குரியதாகும்.

---

கோ்ணல் ஆர்.ஹரிஹரன் தென்ஆசிய விடயங்கள் தொடர்பான புலனாய்வு நிபுணராகக் கருதப்படுகிறார். இந்திய அமைதிப்படை இலங்கையில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டபோது புலனாய்வுப் பிரிவின் தலைவராக கடமையாற்றினார். சென்னையில் அமைந்துள்ள சீனா பற்றிய கற்கை நிலையத்தின் (Chennai Centre for China Studies) மற்றும் தென்ஆசிய பகுப்பாய்வுக் குழு (South Asia Analysis Group) தொடர்பாக தற்போது அவர் கடமையாற்றுகிறார். 2013 மார்ச 01 ஆந் திகதி Sri Lanka (US Procedural Resolution at UNHRC – Update 229) என்ற தொனிப்பொருளில் அவர் எழுதிய கட்டுரை (South Asia Analysis Group) இணையத்தளத்தில் பிரசுரமாகியது. அதன் தமிழ் வடிவம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source : www.srilankabrief.org

உலக நாடுகள் மத்தியில் இலங்கை தனது மதிப்பை இழக்கும் போது பல விளைவுகள் ஏற்படுகின்றன. சில விளைவுகள் சிறியவை. ஆனால், உலக நாடுகள் மத்தியில் கடந்த காலத்தில் இலங்கைக்கு உரித்தான அந்தஸ்தை ஒப்பு நோக்கும் போது நிலைமை என்றுமில்லாதவாறு மோசடைந்துள்ளது.

# உலக நாடுகள் மத்தியில் ஓரங்காட்டலை நோக்கி: பழைய மியன்மாரின் பாணி

**நாமாகவே உலக மக்களிடையே அவமானத்திற்குள்ளாகுதல்.**

கனடா அரசின் சில நடவடிக்கைகள் தொடர்பாக அந் நாட்டு நீதிமன்றம் பல சந்தர்ப்பங்களில் அரசுக்கு எதிராகச் செயற்பட்ட போதும், எந்தவொரு விதத்திலும் அந்நாட்டின் பிரதம நீதியரசர் தான்தோன்றித் தனமாக குற்றப் பிரேரணைக்குட்படுத்தப்படவில்லை என இவ் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொழும்பில் நடைபெற்ற தனது உரையின்போது வெளியிட்ட சர்ச்சைக்குரிய குறிப்பானது, அவரது உபசரணையாளரான இந்நாட்டின் வெளி நாட்டமைச்சரான ஜீ.எல்.பீரீஸ் அவர்களைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது. நடைபெற்ற அக்கருத்தரங்கில் உரையாற்றிய போது அவரின் அக் குறிப்பு பற்றி கருத்து வெளியிட்ட எமது வெளிநாட்டு அமைச்சர் அது ஒரு பொருத்தமற்ற கூற்று எனக் கூறியது மட்டுமன்றி உங்களது நாட்டைப்பற்றி அவ்வாறான ஒரு கூற்றை எனது கனடா விஜயமொன்றின்போது கனவிலும்கூட நான் செய்யப் போவதில்லையென ஞாபகப்படுத்தியுள்ளார். (டெய்லி மிரர், மார்ச் 23)



கிஷாலி பிந்து ஜயவர்தன

இலங்கைக்கு நிலைபேறான ஒரு வெளிநாட்டுக் கொள்கை மற்றும் முறையான சனநாயகப் பொறிமுறையொன்று காணப்பட்ட காலகட்டத்தில் வெற்றுப் பேச்சுக்களற்ற சிறந்த அறிவுக்கூர்மையுடன் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் ராஜதந்திரிகள் இருந்தபோது இவ்வாறான ஒரு கூற்றை இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெளியிட்டிருப்பின் பெரும்பாலானவர்கள் வியப்படைவது உறுதி. ஆயினும், இன்று இலங்கை அவ்வாறான ஒரு நற்குணத்திற்குச் சொந்தக்காரன் அல்ல என்பதனை எவராலும் புரிந்துகொள்ள முடியும்.

ஆகவே இவ்வாறான கூற்றுக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்காவின் பிரேரணையில் சுட்டிக் காட்டப்பட்டவாறு அதன் அங்கத்தவரிடையே இலங்கை தொடர்பாகக் கட்டியெழுப்பப்பட்டு வரும் இறுக்கமான மனப்பாங்கும் இலங்கையின் நீதி நியாயப் பொறிமுறையானது சர்வதேச சமூகம் திருப்தியடையக்கூடிய வகையில் தயார் செய்யப்பட வேண்டுமென இந்தியா வெளியிட்ட விசேட அறிக்கையொன்றின் மூலமும், இலங்கையானது உலக நாடுகள் மத்தியில் ஓரங்காட்டப்பட்டுள்ள விதமும் இலங்கையின் தற்போதைய தலைமை மிகவும் கவனக் குறைவான விதத்தில் இலங்கையை சர்வதேச சமூகத்தின் மத்தியில் குறைகூற வைத்துள்ள விதமும் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் செவிடன் காதில் ஊதிய சங்கினைப் போன்று பொறுமை காக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் எமது அமைச்சர் அவர்களுக்கு தான் கனவில் எதைச் செய்வது, எதைச் செய்யக்கூடாது என்பது பற்றிய உரிமை இருப்பினும் தான் கனடாவில் அவ்வாறான ஒரு உரையை கனடா அரசாங்கம் தொடர்பாக உரையாற்றப் போவதில்லையென தெரிவித்ததானது உண்மையிலேயே ஒரு வெற்றுப் பேச்சாகும். ஏனெனில் கனடாவின் முறையான பிரதம நீதியரசர்

அவமானப்படுத்தப்பட்டு இராணுவப் பலத்தினைப் பிரயோகித்து அவரை விரட்டியடிக்கவும் மிகவும் கீழ்த்தரமான முறையில் நீதிமன்ற முறைமையைத் தாக்கி இல்லாதொழிப்பதற்கும் கனடா அரசாங்கம் ஒருபோதும் துணை போகாது என்பது சுயமாகச் சிந்திக்க முடியுமான எவராலும் புரிந்துகொள்ள முடியும்.

ஆயினும் இலங்கை எந்தவித கருணையும், வெட்கமுமின்றி மிகச் சரியாக அதனையே மேற்கொண்டுள்ளது. நாட்டிற்கு வரும் ஒரு விருந்தினரால் மேற்கொள்ளப்படும் அவ்வாறான ஒரு கூற்று உபசரணை நாட்டின் கோணத்திலிருந்து நோக்கும்போது கசப்பானதாகத் தோன்றினாலும் துரதிஷ்டவசமாக விருந்தாளியின் உரை உண்மையிலே கூக்குரலிட்டு அதற்கு எவ்வளவுதான் எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும் அவ் உண்மை பொய்யாக மாட்டாது.

**கொள்கையை கௌரவிக்கும் நாடுகளுக்கான ஒத்துழைப்பு**

இது ஒரு சிறிய சம்பவமாயிருப்பினும்கூட வரவர உலக மக்கள் முன்னிலையில் இலங்கை எவ்வளவு தூரம் அவமானத்திற்குள்ளாகிறது என்பதே இதன்மூலம் படம் போட்டுக் காட்டப்படுகிறது. சென்ற வாரத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்காவின் பிரேரணையில் சுட்டிக் காட்டப்பட்டவாறு அதன் அங்கத்தவரிடையே இலங்கை தொடர்பாகக் கட்டியெழுப்பப்பட்டு வரும் இறுக்கமான மனப்பாங்கும் இலங்கையின் நீதி நியாயப் பொறிமுறையானது சர்வதேச சமூகம் திருப்தியடையக்கூடிய வகையில் தயார் செய்யப்பட வேண்டுமென இந்தியா வெளியிட்ட விசேட அறிக்கையொன்றின் மூலமும், இலங்கையானது உலக நாடுகள் மத்தியில் ஓரங்காட்டப்பட்டுள்ள விதமும் இலங்கையின் தற்போதைய தலைமை மிகவும் கவனக் குறைவான விதத்தில் இலங்கையை சர்வதேச சமூகத்தின மத்தியில் குறைகூற வைத்துள்ள விதமும் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நாடகத்தின் சிரிப்புக்கு இடமான சம்பவங்களும் இருந்தன. அமெரிக்கப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தல் கொள்கையை கௌரவிக்கும் நாடுகளுக்கான ஒத்துழைப்பின் ஓர் அபூர்வமான சந்தர்ப்பமாகும் என, ஜெனீவாவில் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி குறிப்பிட்டமை இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

வல்லரசுகள் தமது சர்வதேச குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறாது சிறிய நாடுகளின் பின்னால் துரத்துகின்றமையானது கொள்கையின்மையினைத் தெளிவாகப் புரிய வைக்கிறது. அமெரிக்காவின் பல்வேறு அசாங்கங்கள் ஆயுதக் கடத்தல்காரர்களுக்கு துணை போகின்ற விதத்தைத் தத்துருபமாகச் சித்தரித்துக் காட்டிய மைக்கல் முவரின் விவரணச் சித்திரத்தில் காட்டப்பட்டவாறு ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விதமான துஷ்பிரயோகம் தொடர்பாக அமெரிக்காவின் கொள்கை வகுப்பாளர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் மற்றும் டிர் செனி போன்றோரை உலகிலேயே மிகக் கொடூரமான போர் குற்றவாளிகளாகக் கூறலாம். எந்தவித தண்டனைகளுக்கும் ஆளாகாமல் அவர்கள் செயற்பட்டுள்ள விதமானது மைக்கல் முவர் சுட்டிக் காட்டுகின்றவாறு தனக்கும் சட்டத்திலிருந்து விடுபட்டு அவ்வாறு செயலாற்ற முடியுமென்று ஏனைய நாடுகளின் சர்வாதிகாரிகளுக்கு வழங்கிய ஒரு முன்மாதிரியினைப் போன்றதாகும்.

ஆகவே சர்வதேச நீதி தர்மத்தின் சக்கரங்கள் பக்கச் சார்பாகவே சுழலுகின்றன என்பதில் எதுவித தர்க்கமும் இல்லை. ஆயினும், பலம் பொருந்திய நாடுகள் தான் நினைத்தவாறு செயற்படும் அதிகாரமோகம் படைத்த அரசியல் என்றும் அவ்வாறு தான் இருந்துள்ளன. சிறிய நாடுகளது தலைவர்களும் அதே விதமாகத் தமக்கும் தமது குடிமக்களை வழிநடத்துவதற்கான உரிமையுண்டு எனக் கூறுவதற்கு அதே வழியைப் பின்பற்றி .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி வழங்கப்படுவதில்லை. சர்வதேச அரசியல் தளம்பல்களின் கீழ் அவ்வாறான ஒரு வாதம் எவ்வளவு தூரம் உறுதியானது என்பதனை சர்வதேச உறவுகள் பற்றி கற்கின்ற முதலாம் ஆண்டு மாணவன் ஒருவன்கூட நன்கு அறிவான்.

**இந்த அரசாங்கம் கொள்கைகளை மதிக்கின்றதா?**

விடயம் இவ்வாறிருக்க, ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாகத் தனது வாக்குகளைப் பிரயோகித்த நாடுகளின் கொள்கைகள் பற்றி பெருமையடிக்கின்ற இலங்கைப் பிரதிநிதியின் வாதமானது இலங்கை மீது நோக்கப்படுமாயின் அது எவ்வாறான ஒரு கட்சியை நம்முன் பிரதிபலிக்கச் செய்கிறது. அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாடுகளை மூடி மறைக்கும் கீழ்த்தரமான ஒரு கேடயமாக உபயோகிக்கப்பட்ட கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவானது அரசாங்கம் எதிர்பார்த்த விதத்திலான ஓர் அறிக்கையினை சமர்ப்பித்தபோது அதில் உள்ளடங்கியுள்ள ஆகக் குறைந்தளவிலான பரிந்துரைகளையேனும் நடைமுறைப்படுத்தாது நழுவிச் செல்வதுதானா கொள்கைவாதிகளின் பண்பு? பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமெனக் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பரிந்துரைத்த உதலாகம ஆணைக்குழு அறிக்கை எங்கே? அது அரசாங்கத்தின் ஏனைய ஆவணக்கோவைகளுக்குள் மறைந்து விட்டதா? ஆறு வருடங்களாக நீட்டடிக்கப்பட்டு வந்த திருகோணமலை மாணவர்களது துரதிஷ்டவசமான கொலைகள் தற்போது முறையற்ற ஒரு விசாரணைக்காக விடப்பட்டுள்ளதெனக் கூறுவதனை நாம் கரகோசமிட்டு வரவேற்ற வேண்டுமென அரசாங்கம் கருதுகிறதா?

நாட்டின் சாதாரண ஒரு குற்றவாளியை விடவும் கீழ்த்தரமான முறையில் பிரதம நீதியரசரை வழிநடத்தும் ஒரு முறைமையிலுள்ள கொள்கைதான் என்ன? இலங்கையின் முஸ்லீம் மக்களுக்கு எதிராக பொதுபல சேனாவினால் தூண்டப்படுகின்ற மத ரீதியான குரோதம் எவ்வாறுதான் கொள்கை வாதமாகின்றது. இத் தீவிரவாதமானது தமிழ் நாட்டில் பௌத்த பிக்குகளைத் தாக்கிய தீவிரவாதத்தைப் போலவே பயங்கரமானதொன்றாகும்.

**உலக நாடுகள் மத்தியில் ஓரங்காட்டப்பட்ட பழைய மியன்மாரின் பாதையை நாமும் தேர்ந்தெடுத்தல்.**

ஆயினும் இவை அனைத்திற்கும் மேலாக அரசாங்கத்திற்குள் காணப்படும் சிக்கல் தன்மை மிக அபூர்வமானதாகும். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக வெற்றிகொள்ளப்பட்ட வாக்களிப்பு போன்ற ஒரு முக்கிய விடயம் தொடர்பில் கூட ஒரு தெளிவான கொள்கை அரசாங்கத்திடம் இல்லையென்பது அன்றைய தினமே தெளிவாக விளங்கியது. அப்பிரேரணையின் கடினத்தன்மையைக் குறைப்பதற்கு உதவியமைக்காக அன்று ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் இந்தியாவிற்கு நன்றி செலுத்தினார். ஆயினும், மறுபுறத்தில் இலங்கையின் இரண்டாவது மிகப் பலம் பொருந்தியவராகக் கருதப்படும் பாதுகாப்புச் செயலாளர் அவர்கள் இந்தியா அப் பிரேரணைக்கு சார்பாக வாக்களித்தது தொடர்பாகத் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்தார். அது மாத்திரமின்றி தமிழ் நாட்டிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கும் ஒருவர் இருப்பின் அவர் அவ் விமான நிலையத்திலேயே கைது செய்யப்படக்கூடிய அபாயம் இருப்பதாக மிகவும் மூடத்தனமாக அவர் கத்தினார். (மார்ச் 21 லங்கா ட்ருத்)

இந்த நிலைமைகளின் கீழ் பழைய மியன்மாருடன் ஒப்பிடாமலிருப்பது கடினமாகும். மியன்மார் என்பது முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டவாறு பர்மா, முன்னொரு காலத்தில் அப் பிராந்தியத்தில் நெல் பயிரிடப்பட்ட ஒரு பிரதான நாடாகும். ஆயினும் பின்னர் வந்த இராணுவ ஆட்சியாளர்களின் கீழ் கடந்து சென்ற நீண்டகால எல்லைக்குள் சர்வதேச ரீதியில் ஓரங்காட்டலுக்கும் அதன்மூலம் பொருளாதார சீர்குலைவிற்கும் உட்பட்ட அந்நாடு பயணித்த அதே பாதையில் நாமும் சென்று கொண்டிருக்கும் ஒரு சாயலைக் காணக் கூடியதாயுள்ளது. உலக நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பலகோடித் தொகைக் கடன்கள் மூலம் இரண்டாவது சர்வதேச விமான நிலையமொன்று அதிவேகப் பாதையொன்று (கற்பனை) பூங்காக்கள் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் உல்லாச ஹோட்டல்கள் போன்ற கேளிக் கூத்துக்களின் முன் சிங்களவர்களுள் பெரும்பான்மையானவர்கள் ஆட்டு மந்தையைப்போல் அடிமைத்தனத்தினால் கைகூப்பி நின்று தாக்குப் பிடிக்க முடியாத மாதிரியளவிலான கருத்திட்டங்களுக்காக அரசாங்கத்திற்கு கடன்களை வழங்கிய அரசாங்க வங்கிகள் அக்கடன் சுமைகள் காரணமாக அதிர்ந்து போயுள்ள நிலையில் நாம் எதிர்நோக்கியுள்ள இந்த அபாக்கிய நிலைமைக்கு காரணமான குற்றவாளிகள் ராஜபக்ஷாக்கள் அல்ல. எமது பெயரால் மேற்கொள்ளப்படுகின்ற முடிவுகளின் அழிவின் பிரதிபலன்களை முற்கூட்டியே அடையாளங் காண்பதற்கு இயலாமல் போன நாங்களேதான். (நாமே நாம்)

> **நாட்டின் சாதாரண ஒரு குற்றவாளியை விடவும் கீழ்த்தரமான முறையில் பிரதம நீதியரசரை வழிநடத்தும் ஒரு முறைமையிலுள்ள கொள்கைதான் என்ன? இலங்கையின் முஸ்லீம் மக்களுக்கு எதிராக பொதுபல சேனாவினால் தூண்டப்படுகின்ற மத ரீதியான குரோதம் எவ்வாறுதான் கொள்கை வாதமாகின்றது. இத் தீவிரவாதமானது தமிழ் நாட்டில் பௌத்த பிக்குகளைத் தாக்கிய தீவிரவாதத்தைப் போலவே பயங்கரமானதொன்றாகும்.**

---

2013 மார்ச் 24 ஆந் திகதி ஷசன்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியான Towards international isolation (Old Myanmar Style) ஆக்கத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு "நல்லாட்சி இலங்கை" அனுசரணையுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்படாமை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்



Photo source : www.dailynews.lk

லக்ஷ்மன் கிரியெல்ல

**மனித உரிமைகள் பிரேரணை எவ்வாறு இலங்கையைப் பாதிக்கும் ?**

இப் பிரேரணை இலங்கைக்குச் சாதகமானது. நன்மைபயக்கும். அரசாங்கத்திற்குப் பாதகமானது. எந்தவொரு நாகரிகமான ஒரு நாட்டுக்கும் இருக்க வேண்டியவைகளையே இப் பிரேரணையில் குறிப்பிடப்படுகின்றன. 2012 மற்றும் 2013 ஆகிய பிரேரணைகள் இரண்டிலுமே மக்களுக்கு நன்மை தரும் விடயங்களே உள்ளன. இலங்கையில் மனிதர்கள் காணாமல் போகின்றனர். அவற்றைத் தடுக்க இலங்கையில் சுதந்திரமான தேசிய நிறுவனங்கள் இல்லை. அவை சுதந்திரமாக இயங்க முடியாது. அதாவது 17 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆயுதமேந்திய குழுக்கள் எல்லா இடங்களிலும் நடமாடுகின்றனர். அவற்றை நிறுத்த முடியவில்லை. அதேபோலத்தான் ஊடகச் சுதந்திரம். ஊடகவியலாளர்கள் காணாமல் போகின்றனர். ஊடக நிறுவனங்களுக்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றை நிறுத்த வேண்டும் என்றே இப்பிரேரணையில் குறிப்பிடப்படுகின்றது. நியாயமான ஒரு தேர்தலை நடாத்தவும், அரசியலில் தீர்வொன்றை வழங்கவும் சட்டத்தின் ஆதிக்கத்தை பாதுகாக்குமாறும் இப்பிரேரணைகள் கூறுகின்றன. இவை இலங்கைக்கு ஆரோக்கியமான பிரேரணைகள். இவை ஒரு காலத்தில் எமது நாட்டில் நடைமுறை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வு வழங்கினால் நாடு பிளவுபடும் ஆபத்து சில காலங்களுக்கு நிறுத்தப்படும். எதிர்கட்சி என்ற ரீதியில் நாமும் நாட்டுப் பற்றுடையவர்கள். அரசாங்கம் மாத்திரமல்ல. நாட்டுப்பற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மட்டுமே அரசாங்கம் உள்ளது. ஆனால் நாமும் நாட்டின்மீது பாசம் கொண்டுள்ளோம்.**

யில் இருந்தன. தற்போது நாம் அவற்றை இழந்துள்ளோம். எந்தவொரு நாகரீகமான நாட்டிலும் இவை இருத்தல் வேண்டும். இப்பிரேரணைகள் இரண்டிலும் அரசாங்கம் உறுதியளித்தவைகள் தான் இருக்கின்றன. இவை சர்வதேச சமூகம் கேட்டுக் கொண்டதனால் கிடைத்தவை அல்ல. இப் பிரேரணைகள் அரசாங்கத்திற்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ளன. LLRC பரிந்துரைகள் நாட்டுக்கு எதிரானவை அல்ல. இப்பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவது நாட்டுக்கு நல்லது. ஆயினும், இவை நாட்டு மக்களிடையே, பிரபல்யமடையாமைக்குக் காரணம் அரசாங்கமே. அரசாங்கத்தின் ஊடகங்கள் இவற்றை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதில்லை. உண்மையாகவே தனியார் ஊடகங்களும் அச்சத்தினால் இவற்றை வெளிப்படுத்துவதில்லை. ஏனெனில், ஒரு தொலைபேசி அழைப்பு போதும் இவை அனைத்தையும் அடக்குவதற்கு. அதுதான் நாட்டின் இன்றைய நிலைமை.

**எல்எல்ஆர்சீ பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எதிர்கட்சியானது அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றுக்கு வரவேண்டுமென எதிர்கட்சித் தலைவர் அவர்கள் யோசனை கூறினார் இது தொடர்பான உங்கள் கருத்து யாது?**

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பயங்கர நிலைமையினை யாருமே புரிந்துகொள்ளவில்லை. நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் சூடான் நாடு இருந்த ஸ்தானத்தில் இன்று எமது நாடு உள்ளது. சூடான், கிழக்கு தீமோர் போன்ற அனைத்து நாடுகளும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினூடாகவே உருவாகின. இவை சின்ன விடங்களாகவே ஆரம்பிக்கப்பட்டன. இறுதியாக நாடு பிளவுபடும் வரைக்கும் அவை தொடர்ந்தன. அவ்விடத்திலேயே எமது நாடும் இன்று உள்ளது. நாம் எல்எல்ஆர்சீ அறிக்கையை நடைமுறைப்படுத்தினால் நாடு இரண்டாகப் பிளவுறும் அபாயத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஏனெனில் அரசியல் தீர்வுத் திட்டத்துடன் எல்எல்ஆர்சீ அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால் நாட்டைப் பிரிக்கின்ற அபாயம் இல்லாதொழிக்கப்படும். 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வு வழங்கினால் நாடு பிளவுபடும் ஆபத்து சில காலங்களுக்கு நிறுத்தப்படும். எதிர்கட்சி என்ற ரீதியில் நாமும் நாட்டுப் பற்றுடையவர்கள். அரசாங்கம் மாத்திரமல்ல. நாட்டுப்பற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மட்டுமே அரசாங்கம் உள்ளது. ஆனால் நாமும் நாட்டின்மீது பாசம் கொண்டுள்ளோம். நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பதனால் தான் எமது தலைவர் பின்வருமாறு கூறினார். நாம் அரசாங்கத்திற்கு உதவத் தயார் என்று. இந்த எல்எல்ஆர்சீ அறிக்கையினை நடைமுறைப்படுத்தவும் தயார். ஏனெனில் நாம் இதனை நடைமுறைப்படுத்தாவிடின் தெளிவாக நாடு பிளவுபடும் நிலைமை அதிகரிக்கும். ஏனெனில் சர்வதேச சமூகம் கூறுவதை அரசாங்கம் செயற்படுத்தாமல் இருப்பதைக் காண்பதே தமிழ் புலம்பெயர் அமைப்புக்களினதும் தேவையாகும். சர்வதேச சமூகம் கூறுவதைச் செய்யாமலிருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புலம்பெயர் அமைப்புக்களின் தேவைகள் நாளுக்கு நாள் உறுதி செய்யப்படுகின்றன. உண்மையிலேயே 13 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தையும் எல்எல்ஆர்சீ பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தாதிருப்பதை புலம்பெயர் அமைப்புக்கள் பெரிதும் விரும்புகின்றன. அரசியல் தீர்வு இல்லாவிடின் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் ஒன்றாக வாழ முடியாதென்பதைக் காண்கிறீர்கள்தானே என்று அப்போது அவர்கள் கூறுவார்கள். அதைத்தான் சூடான் கூறியது, முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஒன்றாக வாழ முடியாதென. அவர்கள் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் மூலம் சூடானைப் பிரித்தார்கள். இன்று தமிழ் புலம்பெயர் அமைப்புக்களும் நேரடியாகவே கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்றை நோக்கியே இதனை நகர்த்திக் கொண்டு செல்கின்றன. ஜெயலலிதாவும் இதனையே கூறுகிறார். வடக்கு கிழக்கிற்கு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடாத்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி, வடக்கு கிழக்கிற்கு அரசியல் தீர்வொன்றை வழங்காவிட்டால், அரசு எல்எல்ஆர்சீ பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால், இந்த அரசாங்கத்தின் கீழ் இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவருக்கு, உரிமைகள் கிடைப்பதில்லையென நிருபிக்கப்படும் அது புலம்பெயர் அமைப்புக்களின் குரலை வலுவடையச் செய்யும். அரசாங்கம் இதைப் புரிந்துகொள்ளவில்லை. மிகப் பெரிய ஒரு அபாயத்தை நாடு எதிர்நோக்கியுள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசு கிழித்தெறிந்தது. ஆயினும், எல்எல்ஆர்சீ ஆணைக்குழுவின் மூலம் இப்புரிந்துணர்வு ஒப்பந்தக் காலஎல்லைதான் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இதைப் பற்றிய உங்களது கருத்து என்ன?**

போர் நிறுத்தம் நிலவிய காலத்தின்போது மனிதர்கள் கடத்தப்படவில்லை. வெள்ளை வான் கலாசாரமொன்று இருக்கவில்லை. சட்டம் மீறப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலம் எல்.ரீ.ரீ.ஈ. இற்கு ஒத்துழைப்புக் கிடைத்ததாக எதுவித முறைப்பாடுகளும் தெரிவிக்கப்படவுமில்லை. மிகக் கூடுதலான முறைப்பாடுகள் போரின் இறுதிக் கால கட்டமான 2008-2009 காலப் பகுதியிலேயே கிடைக்கப்பெற்றன.

**உண்மையிலேயே அரசாங்கம் எல்எல்ஆர்சீ யின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

2009 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ அவர்களும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களும் ஒன்றிணைந்த அறிக்கையொன்றை வெளியிட்டனர். 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் தீர்வுக்கு வருவதாகத் தெளிவாக வாக்குறுதியொன்றை வழங்கினார். ஆயினும் அவ் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. அதன் பின்னர் ஜீ.எல்.பீரீஸ் அமைச்சர் அவர்களும் இந்தியாவின் வெளிநாட்டமைச்சருடன் கையொப்பமிட்டு அவ்வாறான ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார். எல்எல்ஆர்சீ யின் பரிந்துரையிலும் அரசியல் தீர்வொன்றை சமர்ப்பிக்குமாறு கூறப்பட்டுள்ளது.

ஆகவே மகிந்த ராஜபக்ஷ அவர்களும் ஜீ.எல்.பீரீஸ் அவர்களும் தமது ஒன்றிணைந்த அறிக்கை மூலம் 13வது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வுத் திட்டத்திற்கு வருவதாக சுட்டிக் காட்டியுள்ளனர். ஆயினும் 13வது திருத்தத்தை அமுல்படுத்தினால் தமது கௌரவத்திற்கும் பங்கம் விளையுமென்று அவர்கள் கருதுவதாகவே நான் நினைக்கின்றேன்.

யுத்த நிறுத்தத்தினூடாக 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வொன்றுக்குச் செல்வதற்கே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது நாம் முயற்சித்தோம். நாம் யுத்தத்தில் வெற்றிகொள்வோமாயின் இவை ஒன்றையும் வழங்கத் தேவையில்லையென்று அப்போது மகிந்த ராஜபக்ஷவும் ஹெல உறுமயவும் கூறினார்கள். யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டாலும் இறுதியில் 13 ஐ அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வை நோக்கிச் செல்ல நேரிடும் என்று நாம் கூறினோம். யுத்தத்தை தீவிரப்படுத்தாது இவற்றைச் செய்வோம் என்று நாம் தான் கூறினோம்.

அரசியல் தீர்வொன்றை அடைய நாம் முயற்சி செய்து பார்த்தோம். உண்மையிலேயே அது வெற்றிகரமாக முன்னோக்கிச் சென்றது. பிரபாகரன் பேச்சு வார்த்தைகளை முறித்துக் கொண்டு சென்றாலும் 2004 மே மாதமளவில் மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு வரத் தயாராக இருந்ததை சந்திரிக்கா அறிந்து கொண்டார். ஏனெனில் சர்வதேச சமூகம் அவ்வளவு தூரம் பிரபாகரனை வற்புறுத்தியது. பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டு 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வுக்கு அவர் இணங்கினார். அன்று பேச்சு வார்த்தைகளுக்கு வந்திருப்பின்

**மகிந்த ராஜபக்ஷ அவர்களும் ஜீ.எல்.பீரீஸ் அவர்களும் தமது ஒன்றிணைந்த அறிக்கை மூலம் 13வது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வுத் திட்டத்திற்கு வருவதாக சுட்டிக் காட்டியுள்ளனர். ஆயினும் 13வது திருத்தத்தை அமுல்படுத்தினால் தமது கௌரவத்திற்கும் பங்கம் விளையுமென்று அவர்கள் கருதுவதாகவே நான் நினைக்கின்றேன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாதைகளை அபிவிருத்தி செய்தால் மட்டும் போதாது. மனிதர்களால் வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்கு ஏதுவுமே இல்லை. இப் பாதைகளை அண்மித்து கைத்தொழிற்சாலைகள் இல்லை. பாதைகளை அண்மித்து விவசாயக் கிராமங்கள் இல்லை. பாதை ஒன்றை அமைப்பதால் ஏதாவதொரு பயன் கிடைக்க வேண்டும். மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் என்று கூறினாலும்கூட 500 இற்கும் குறைவான வீடுகளே கட்டப்பட்டுள்ளன. அவர்கள் பொலித்தீன் கூரைகளின் கீழேயே வாழ்கின்றனர். உறவினர்களை இழந்தவர்களுக்கு இழப்பீடாவது வழங்கப்படல் வேண்டும். 1994 ல் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதனைச் செய்தது. 1988-89 பயங்கரவாத சூழ்நிலைகளின்போது காணாமல் போனவர்களுக்கான இழப்பீடு வழங்கும் ஆரம்பக் கூட்டத்தின்போது 400 இற்கும் அதிகமானவர்களுக்கு 25000 ரூபா இழப்பீடு வழங்கப்பட்டது.**

45000 ரூபா கோடிப் பணம் எமக்கு கிடைத்திருக்கும். அது கடனாக அல்ல நிவாரணமாகக் கிடைத்திருக்கும். இதைத் தெரிந்துகொண்டுதான் சந்திரிக்கா பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

13 ஆவது திருத்தத்தை தற்போது நடைமுறைப்படுத்தினால் "நீங்கள் கூறினீர்கள்தானே யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தால் இதைச் செய்யத் தேவையில்லையென்று. தற்போது என்ன செய்கிறீர்கள்?" என்று நாம் வினா எழுப்பக்கூடும் என்பதனாலேயே மகிந்த ராஜபக்ஷ இதைச் செய்ய முடியாதுள்ளது. அவ் வினாவை நாம் அவரிடம் கேட்கத் தயாராக உள்ளோம்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த விருப்பமில்லை. 13வது திருத்தத்தைக் கொண்டு நாட்டைப் பிரிக்கின்றனர் என்று கூறியவர் யுத்தமொன்றைச் செய்து இதைச் செய்யப் போவதில்லை. பதவி மோகத்திற்காக அவர்கள் மக்களை வழி தவறச் செய்துள்ளார்கள். ஐக்கிய தேசியக் கட்சி அவ்வாறு செய்யவில்லை. யுத்தமொன்றைச் செய்து ஒருபோதும் இரண்டு இனங்களை ஒன்றுபடுத்த முடியாது. கிழக்கு தீமோரில் அதுதான் நடந்தது. முஸ்லீம் இராணுவம் கிழக்கு தீமோரில் பெருந் தொகையான கிறிஸ்தவர்களைக் கொன்றது. சூடான் இராணுவம் தெற்கில் வாழும் பெருந்தொகையான கிறிஸதவர்களைக் கொன்றது. தற்போது இலங்கையிலும் இதுதான் நடந்துள்ளது. இலங்கையில் நடந்த சிவில் மக்களது கொலைகள் காரணமாக இனங்களுக்கிடையே பாரிய ஒரு பகைமை உருவாகியுள்ளது. தற்போது சர்வதேச சமூகத்திற்கு இலங்கை மீது ஆதிக்கம் செலுத்த ஒரு பலமான ஆயுதம் கிடைக்கப்பெற்றுள்ளது.

**எல்எல்ஆர்சீ யின் செயற்பாட்டுத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறதா?**

எல்எல்ஆர்சீ அறிக்கை மக்களால் உணரக்கூடிய வகையில் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. வடக்கும் கிழக்கும் சுதந்திரத்தையே வேண்டி நிற்கின்றன. பாதைகளைக் கேட்கவில்லை. இராணுவ ஆட்சியே வடக்கு கிழக்கில் நிலவுகிறது. சிவில் நிருவாகம் இல்லை. அங்குள்ள பிரதேசச் செயலாளர் இராணுவத்திடமிருந்தே கட்டளைகளைப் பெறுகின்றார். இராணுவ முகாம்களை அகற்றக்கூடாது. அவை காணப்பட வேண்டும். இராணுவ முகாம்களை அகற்றுமாறு தமிழர் தேசியக் கூட்டமைப்பு கூட கூறுவதில்லை.

பாதைகளை அபிவிருத்தி செய்தால் மட்டும் போதாது. மனிதர்களால் வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்கு ஏதுவுமே இல்லை. இப் பாதைகளை அண்மித்து கைத்தொழிற்சாலைகள் இல்லை. பாதைகளை அண்மித்து விவசாயக் கிராமங்கள் இல்லை. பாதை ஒன்றை அமைப்பதால் ஏதாவதொரு பயன் கிடைக்க வேண்டும். மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் என்று கூறினாலும்கூட 500 இற்கும் குறைவான வீடுகளே கட்டப்பட்டுள்ளன. அவர்கள் பொலித்தீன் கூரைகளின் கீழேயே வாழ்கின்றனர். உறவினர்களை இழந்தவர்களுக்கு இழப்பீடாவது வழங்கப்படல் வேண்டும். 1994 ல் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதனைச் செய்தது. 1988-89 பயங்கரவாத சூழ்நிலைகளின்போது காணாமல் போனவர்களுக்கான இழப்பீடு வழங்கும் ஆரம்பக் கூட்டத்தின்போது 400 இற்கும் அதிகமானவர்களுக்கு 25000 ரூபா இழப்பீடு வழங்கப்பட்டது.

உண்மையிலேயே அரசாங்கம், அரசியல் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி கடந்தகால சம்பவங்களுக்கு மன்னிப்புக்கோரி தனது அனுதாபத்தைத் தெரிவித்து இழப்பீட்டுத் தொகையொன்றினை வழங்குவதன்மூலம் பெரும்பாலும் இப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்று நாம் நம்புகிறோம்.

**எல்எல்ஆர்சீ பரிந்துரைகள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டும் கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ளதா?**

கட்டாயமாக அதனை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்எல்ஆர்சீ அறிக்கையினை சிங்களத்தில் மொழிபெயர்த்து எமது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வழங்கினோம். இதைச் சிங்களத்தில் மொழிபெயர்க்குமாறு நான் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டேன். அவ்வாறு செய்தால் தருஸ்மானின் அறிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மக்கள் அறிந்துகொள்வார்கள்.

**இது தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு பற்றி உங்களது கருத்து யாது?**

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின்போது இந்தியாவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்த வேண்டிய தேவை இருந்தது. நாம் இந்தியப் பிரஜைகளுக்கு வீசா நடைமுறைகளை விடுவித்தோம். இந்தியர்கள் சுதந்திரமாக இலங்கைக்கு வர முடியுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்தது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமாகும். அதனால்தான் இந்தியப் பயணிகள் இலங்கைக்கு வர ஆரம்பித்தார்கள். இந்தியா எங்களுடன் தொடர்பு வைத்திருப்பதை விட இந்தியாவுடன் தொடர்பு வைத்துக் கொள்வது எமக்குத்தான் முக்கியத்துவம் வாய்ந்தது. 13 வது திருத்தம் இந்தியாவின் அரசியலமைப்பாகும். இந்தியா அவர்களது மாநிலங்களுக்கு வழங்கியுள்ள அதிகாரங்கள் 13வது திருத்தத்தில் உள்ளன. இதுதான் சிறந்த தீர்வு.

**2012 ஆம் ஆண்டின் ஜெனீவா பிரேரணைகளுக்கும் 2013 ஆம் ஆண்டின் பிரேரணைகளுக்குமிடையில் நீங்கள் காணும் வேறுபாடுகள் யாவை?**

இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணையொன்று 2012 பிரேரணையில் இருக்கவில்லை. ஆயினும் 2013 ஆம் ஆண்டில் அது உள்ளது. 2013 செப்டெம்பர் மாதமளவில் அது வரவுள்ளது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சர்வதேச பருவகால மீளாய்வு வரும்போது முன்னேற்றம் காணப்படாதவிடத்து அவர்கள் சர்வதேச விசாரணையொன்றுக்குச் செல்வார்கள். அவ்வாறான சர்வதேச விசாரணையொன்றின்மூலம் ஒரு சில நபர்கள் குற்றவாளிகளாகப் பெயர் குறிப்பிடப்படுவர். அதன் பின்னர் தண்டனை விதிக்கப்படும். இந்த நாட்டில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் ஒன்றாக வாழ முடியாதெனவும், அரசியல் தீர்வொன்று இல்லையெனவும், சிறுபான்மையினரின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதில்லையெனவும் அவர்கள் தீர்மானிப்பின் வடக்கு கிழக்கில் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தப்படும். அதுவே, சர்வதேச சமூகம் செல்லும் பாதை. அரசாங்கத்திடம் இதற்கான விடை கிடையாது. இன்று அரசாங்கம் சர்வதேசத்தின் பரிந்துரைகளை நிறைவேற்ற மறுக்கின்ற ஒவ்வொரு கணப்பொழுதும் நாடு பிளவுபடும் பாதைக்கு தள்ளப்படுகிறது.

உதாரணமாக அமெரிக்காவின் நிவ்ஜர்ஸி நகரில் ரீ.ஜீ.ஈ. என்ற தற்காலிக அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளது. அதில் பிரதமர் ஒருவரும் சபாநாயகர் ஒருவரும் அமைச்சர்களும் உள்ளனர். அதில் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். ஜேர்மன் நாட்டிலுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 10-15 பேர் வரை தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள். பிரான்ஸிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களது பாராளுமன்றமொன்று நியூஜேஸி நகரில் காணப்படுகிறது. அவர்கள் அங்கு கூடுகிறார்கள். இது ஸ்டேண்ட் பை ஆகவே அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை, தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத பட்சத்தில் தனி நாட்டுக்கான கோரிக்கை நாளுக்கு நாள் உறுதிசெய்யப்படுகிறது. இதில் ஒரு முடிவு காணப்படும். இந்த நாட்டைப் பிரிக்கும் முயற்சி மறைமுகமாக நடைபெற்றுக்கொண்டுதான் உள்ளது. உறுதியளிக்கப்பட்டவைகளை நிறைவேற்றாமையினால் அரசாங்கம் எமது நாட்டைப் பலி கொடுக்கிறது.

கலந்துரையாடற் குறிப்பு :
**தம்மிக எஸ்.குமார**
**ப்ரியான் அமரசிங்ஹ**
(2013.04.03 ஆந் திகதி நேர்காணல்.)

**உதாரணமாக அமெரிக்காவின் நிவ்ஜர்ஸி நகரில் ரீ.ஜீ.ஈ. என்ற தற்காலிக அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளது. அதில் பிரதமர் ஒருவரும் சபாநாயகர் ஒருவரும் அமைச்சர்களும் உள்ளனர். அதில் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். ஜேர்மன் நாட்டிலுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 10-15 பேர் வரை தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள். பிரான்ஸிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களது பாராளுமன்றமொன்று நியூஜேஸி நகரில் காணப்படுகிறது. அவர்கள் அங்கு கூடுகிறார்கள். இது ஸ்டேண்ட் பை ஆகவே அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை, தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத பட்சத்தில் தனி நாட்டுக்கான கோரிக்கை நாளுக்கு நாள் உறுதிசெய்யப்படுகிறது. இதில் ஒரு முடிவு காணப்படும். இந்த நாட்டைப் பிரிக்கும் முயற்சி மறைமுகமாக நடைபெற்றுக்கொண்டுதான் உள்ளது. உறுதியளிக்கப்பட்டவைகளை நிறைவேற்றாமையினால் அரசாங்கம் எமது நாட்டைப் பலி கொடுக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source : www.colombotelegraph.com

# எதிர்பார்ப்புக்களும் நல்லிணக்கமும்

## இலங்கை மோதல்களின் காயங்களைக் குணப்படுத்தல்

நாட்டில் சிவில் யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன. பாதைகள் மீண்டும் சீரமைக்கப்பட்ட போதும், மனித உரிமைகளின் பாதுகாப்பு குறைந்து கொண்டே வருகிறது. மோதலினால் பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட சோகக் கதைகளை ஏற்றுக் கொள்ளலும் அதற்கான நியாயம் வழங்குதலும் இன்னும் எஞ்சியுள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான சூழ்நிலை இதுவரை உருவாகவில்லை.

இலங்கை அதிகாரிகளின் அர்த்தபுஷ்டியுள்ள செயன்முறையில் ஆதிக்கம் செலுத்துவதற்கான ஒரு அரிய சந்தர்ப்பம் தனது புதிய கூட்டத் தொடரை ஜெனீவாவில் ஆரம்பித்து வைத்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்குக் கிடைத்துள்ளது. அவ்வாறு செய்வதன்மூலம் அனைத்து இலங்கையர்களின் மனதிலும் கொண்டுள்ள வகைப் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பிரார்த்தனைகளைப் பாதுகாக்க அது செயலாற்றுதல் வேண்டும். குற்றத்திற்குத் தண்டனை வழங்காமலிருக்கும் தற்போதைய கலாசாரத்தை நிச்சயம் முடிவுக்குக் கொண்டு வரல் வேண்டும். கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மூலம் இலங்கை அரசாங்கத்தினால் அடையாளங் காணப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதைக் கோரிநிற்கின்ற ஒரு திருப்பு முனையான பிரேரணை கடந்த ஆண்டு பேரவை அங்கீகரித்துக் கொண்டது. இன்று நாங்களும் உள்ளடக்கியுள்ள சமாதானத்திற்கும் மனித உரிமைகளுக்கும் தம்மை அர்ப்பணித்த சுதந்திரமான தலைவர்களின் ஒரு குழுவான தி எல்டர்ஸ் (முதியோர்கள்) அச்சந்தர்ப்பத்தில் அப் பிரேரணைக்கு தமது முழு ஆதரவை வழங்கியது. அது சரியானதொரு திசையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட தீர்க்கமான ஒரு நடவடிக்கையாகும்.

துரதிஷ்டவசமாக அன்றிலிருந்து மிகக் குறைந்தளவே இடம்பெற்றுள்ளன. நிரந்தரமான ஒரு நல்லிணக்கம், நீதி நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஆகிய அத்தியாவசியமான நோக்கங்கள் எதிலும் சாத்தியமான




டெஸ்மன்ட் டுடு மற்றும் மேரி ரொபின்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலும் எல்எல்ஆர்சீ இன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்த்தமுள்ள எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். குறித்த கால வரையறையினை காலந் தாழ்த்தியுள்ளதுடன் அரசாங்கத்தின் பங்காளிகள் ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை நிராகரிப்பதற்காகவோ அவற்றை நலிவடையச் செய்வதற்காகவோ பயமுறுத்தல்களை மேற்கொள்கின்றனர்.**

ஒரு முன்னேற்றம் காணப்படுகின்றதென்ற உணர்வை ஏற்படுத்துவது கடினமாகும்.

பெப்ரவரி 01 ம் திகதி தலைசிறந்த ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊடகவியலாளர் ஒருவரான பராஸ் சௌகத் அலி தனது இல்லத்தில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். அது அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு எதிராகத் தாக்குதல் நடாத்தும் கவலை தரும் போக்கின் புதியதொரு நிகழ்வு மட்டுமே. ஜனவரி மாதத்தில் பிரதம நீதியரசராகக் கடமையாற்றிய சிராணி பண்டாரநாயக்கா (இப் பதவியை வகித்த முதலாவது பெண்மணி) அவர்கள் குற்றப் பிரேரணை மூலம் பதவியில் இருந்து அகற்றப்பட்டார். இது சட்டத்தின் ஆதிக்கத்தையும் நீதிமன்றச் சுதந்திரத்தையும் கேவலமான முறையில் புறக்கணித்தலாகும்.

மேலும் எல்எல்ஆர்சீ இன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்த்தமுள்ள எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். குறித்த கால வரையறையினை காலந் தாழ்த்தியுள்ளதுடன் அரசாங்கத்தின் பங்காளிகள் ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை நிராகரிப்பதற்காகவோ அவற்றை நலிவடையச் செய்வதற்காகவோ பயமுறுத்தல்களை மேற்கொள்கின்றனர்.

இலங்கையின் இராணுவப் படையினராலும் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் ஏனைய பயங்கரவாதக் குழுக்களினாலும் சிவில் யுத்தத்தின் இறுதிக் காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்படல் தொடர்பிலும் சுதந்திரமானதும் விசுவாசமானதுமான சர்வதேச விசாரணையொன்றுக்கான இலங்கையின் சிவில் சமூகத்தினதும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரினதும் வேண்டுகோளுக்கு எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கணிப்பீடுகளின்படி சுமார் 40,000 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் பேரவை இச் சந்தர்ப்பத்தில் இதனை அணுகும் முறைமையானது சர்வதேச சமூகம் இலங்கை தொடர்பாகக் கருமமாற்றப்போகும் விதம் தொடர்பான பாரிய செல்வாக்குச் செலுத்தும். இவ்விடயம் தொடர்பாகத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளவாறு இலங்கை பொதுநலவாய நாடுகளின் 2013-15 கால எல்லைக்கான தலைமைப் பதவிக்காகப் பெயரிடப்படல் தொடர்பாக ஆழமாக சிந்திக்குமாறு நாம் பொதுநலவாய நாடுகளிடம் வேண்டுகிறோம். இந் நடிபங்கின்போது பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுக்கான ஈராண்டுக்கொரு முறையான சந்திப்பு இவ் ஆண்டு நவம்பர் மாதமளவில் இலங்கையில் நடைபெறவுள்ளது.

நிலைமையில் ஆரோக்கியமான முன்னேற்றம் காணப்படாதவிடத்து, இம் மாகாநாட்டைப் பகிஷ்கரிப்பதாக கனடா நாட்டுப் பிரதமர் ஸ்டெபான் ஹாபர் அறிவித்துள்ளார். அவ்வாறே செயற்படுமாறு பிரித்தானிய பாராளுமன்றம் அதன் பிரதமர் டேவிட் கெமரன் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

எல்டர்ஸ் (முதியோர்கள்) என்ற வகையில் நாம் இந்த உறுதியான நிலைப்பாட்டை வெகுவாக அங்கீகரிப்பதுடன் பொதுநலவாய நாடுகளின் அடிப்படை அர்ப்பணிப்பான சனநாயகம், சுதந்திரம், சமாதானம் மற்றும் நீதிக்கான அணுகுமுறை ஆகிய துறைகளை மீண்டும் ஞாபகமூட்டுகிறோம்.

ஒப்பீட்டு ரீதியாக 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளினால் புதிதாகக் கூட்டிணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் பேரவையானது தனது ஒவ்வொரு கூட்டத்தொடரின் போதும் தனது வெற்றியை விருத்தி செய்து கொள்ள முடியும் என்பதை நிச்சயம் வெளிக்காட்டுதல் வேண்டும். கடந்த கூட்டத் தொடரின்போது இலங்கையர்களுக்கு எதிர்பார்ப்பினை வழங்கியிருப்பின் இம்முறை கூட்டத் தொடரின் போது மேலும் ஒருபடி முன்னேறி அவ் எதிர்ப்புக்களை உயிரோட்டமுள்ளதாக மாற்றுதல் வேண்டும்.

கடந்த ஆண்டில் மேலும் பல பிரச்சினைகள் உருவாயின. மிகப் பிரபல்யமான இரண்டு உதாரணங்களான சிரியாவையும் மாலியையும் எடுத்துக் கொள்வோமாயின் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் மிகச் சரியாக அவை முதலிடத்தில் காணப்பட்டன. இலங்கை தொடர்பான விடயம் வித்தியாசமான ஒரு விசாரணையைச் சந்திக்கிறது. உலகத்தின் கவனம் திசைதிருப்பப்பட்டுள்ள போதும்கூட அரசாங்கங்களின் வகை பொறுப்புக் கூறல் செயற்பாட்டைத் தக்க வைத்துக் கொள்வதில் பேரவைக்குள்ள ஆற்றல் இதன்மூலம் பரீட்சிக்கப்படுகிறது.

---

டெஸ்மன்ட் ட்டுட்டு நோபல் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டவர். மாரீ ரொபின்ஸன் அயர்லாந்தின் முன்னை நாள் ஜனாதிபதியாவார். இவ்விருவரும் நீதி, சமாதானம் மனித உரிமைகள் தொடர்பாகச் செயற்படும் சுயாதீன தலைமைக் குழுவான த எல்டர்ஸ் (மூத்தோர் அமைப்பின்) உறுப்பினர்களாவர். Hope and Reconciliation Healing Sri Lanka's wounds of conflict என்ற கட்டுரை 2013-03-11ம் திகதி Times of India பத்திரிகையில் வெளியானது

அனுசரணை: விகல்ப இணையத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source : blog.dzone.lk

# அரசாங்கத்திற்கெதிராக அங்கீகரிக்கப்பட்ட ஜெனீவாப் பிரேரணை தொடர்பாக பேச்சுவார்த்தைக்குச் செல்வதா?

## எதிர்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் கேள்வி

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அங்கீகரிக்கப்பட்ட பிரேரணை தொடர்பாக அரசாங்கம் வொஷிங்டனிலோ ஜெனீவாவிலோ கொழும்பிலோ பேச்சுவார்த்தை நடாத்துமா என பாராளுமன்றில் நேற்று (09) எதிர்கட்சித் தலைவர் வினவினார்.

எதிர்கட்சித் தலைவர், நிலையியற் கட்டளை 23/2 இன் கீழ் நேற்று பாராளுமன்றத்தில் பேசும்போதே இக் கேள்வியைக் கேட்டார்.

அங்கு விக்கிரமசிங்க அவர்கள் மேலும் கூறியதாவது:

இலங்கை தொடர்பான "இலங்கையினுள் நல்லிணக்கத்தையும் வகைப் பொறுப்புக் கூறலையும் மேம்படுத்தல்" என்ற தலைப்பிலான A/HRC/22/2.1 ஆம் இலக்கமுடைய பிரேரணை அங்கீகரிக்கப்பட்ட உடனேயே இலங்கை அரசாங்கம் இப் பிரேரணையுடனோ அதில் உள்ளடங்கியிருப்பவைகளுடனோ இணைங்குவதில்லை என்பதுடன் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நல்லிணக்க வேலைத்திட்டங்கள் திருப்திகரமான மட்டத்தில் உள்ளன என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க அவர்கள் கூறியிருப்பதாகத் தெரிய வந்தது.

"இவ்வாறான ஒரு அபாயத்தை இலங்கை தெரிவு செய்வதற்கான காரணம் பிரச்சினையின் பாரதூரம் காரணமாக அல்ல மாறாக பண்பாட்டு ரீதியானதும் ஒழுக்க ரீதியானதுமான பெறுமானங்களுடன் எந்த விதத்திலும் பொருந்தாத காரணங்களினால் ஆகும். அவை அரசியல் சுபாவத்தின் பெறுமதிகள் என நான் நேரடியாகவே கூறுகிறேன்" என்பது அரச உத்தியோகத்தர்களது நிலைப்பாடாக இருந்தது.

அதன் பின்னர் 2013.03.27 ஆந் திகதியுடைய காங்கிரஸ் இணைய தளத்தின் "த ஹில்" இற்கு அறிக்கையொன்றை வழங்கிய ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய அவர்கள் "2009 ஆம் ஆண்டு தொடக்கம் பல விடயங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய இன்னும் பல விடயங்கள் காணப்படுகின்றன" எனக் குறிப்பிட்டார்.

இக் கூற்றுக்கு எதிராக இதுவரை எந்தவொரு கருத்தும் தெரிவிக்கப்படவில்லை என்பதனால் அது அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை பிரதிபலிக்கின்றன என ஏற்றுக்கொள்ளலாம்.

"ஜனநாயகம் மீது மாத்திரமல்ல, சட்டத்தின் ஆட்சிக்கு, சுய ஆதிபத்தியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும், மதிப்பளிப்பதையிட்டு அர்ப்பணிப்புக் கொண்டதுமான" எனவும் மனித உரிமை ஆணையாளர் கருத்து வெளியிட்டார்.

"உட்கட்டமைப்பு வசதிகளை மீளக்கட்டியெழுப்புதல், மிதிவெடிகளை அகற்றுதல், இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையினரை மீளக்குடியேற்றல் தொடர்பாக இலங்கை அரசு காட்டியுள்ள முன்னேற்றத்தை ஏற்றுக்கொள்வதோடு, அவை பெரிதும் வரவேற்கப்படுகின்றன. அதே சமயம், நல்லிணக்கம், வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புதல், என்னும் துறைகளில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதை குறிப்பிடும் அதே வேளை, இம் முயற்சியில் சிவில் சமூகத்தினதும் சிறுபான்மை சமூகங்களினதும் பங்களிப்பை தேசிய ரீதியல் உள்வாங்கி, உள்ளர் மக்களின் பூரண பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தி பிரகடனப்படுத்தும் யோசனைகளுடன் இது ஏற்புடையதாகும்."

உண்மையில், "கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பயனுறுதிவாய்ந்த முறையில் செயற்படுத்துமாறு இலங்கையிடம் வேண்டிக்கொள்கிறது." என்று பிரேரணையின் 3ம் பகுதி வலியுறுத்துகின்றது.

இக்கொள்கை மாற்றம் A/HRC/22/L.1 என்னும் பிரேரணையை ஏற்பதற்குச் சமம். அதன் மூலம் அமெரிக்காவுடன் கொண்டிருக்கும் உறவுகள் மேலும் விரிவாக்குவதற்கான அபிலாசை தொக்கி நிற்கிறது. இவ்வாறாக மாற்றமுற்ற கொள்கை தொடர்பாக: தெளிவான ஒரு பிரகடனத்தை விடுக்குமாறு நான் அரசை வேண்டுகின்றேன்.

வாராந்தர ஊடகங்கள் மூலமும் இவ்வாறு மாற்றமடைந்த நிலைப்பாடு பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக,


1. இவ்வாறாக எதிர்பார்க்கும் பேச்சுவார்த்தைகள் வொஷிங்டனில், ஜெனீவாவில் அல்லது கொழும்பில் நடத்தப்படுமா?
2. இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்னர் அரசு உரிய தரப்பினரின் அபிப்பிராயங்களைப் பெறுமா?
3. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தும் கால அட்டவணையை அரசு அறிவிக்குமா?
4. இப்பேச்சுவார்த்தைகள் அமெரிக்காவிற்கு மாத்திரம் வரையறுக்கப்படுமா? அல்லது மேற்படி பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்த இந்தியா, பிரித்தானியா, உட்பட ஏனைய நாடுகளையும் உள்ளடக்குவீர்களா?

என்பதை இச்சபைக்கு அறிவிப்பீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேரணையை ஏற்க மாட்டோம் பேச்சுவார்த்தை நடத்தவும் மாட்டோம்

அமைச்சர் ஜீ.எல். பீரீஸ் பதில் கூறுகிறார்.


Photo source : www.thesundayleader.lk

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் அங்கிகரீக்கப்பட்ட பிரேரணையை அரசு ஏற்றுக்கொள்ள மாட்டாது. இது தொடர்பாக இலங்கையிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ பேச்சுவார்த்தை நடத்தப்படவும் மாட்டாது. என வெளிநாட்டு அமைச்சர் பேராசியர் ஜீ.எல்.பீரிஸ் ,பாராளுமன்றத்தில் பிரகடனப்படுத்தினார்.

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 23/2 கீழ் எதிர் கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் முன்வைத்த பிரகடனத்திற்கு விடையளிக்கும் போதே பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து உறையாற்றிய அமைச்சர் பின்வருமாற குறிப்பிட்டார்.

எதிர் கட்சித் தலைவரின் பிரகடனம் மூலம் அரசாங்கத்தின் கொள்கையை வெட்கமடையச் செய்துள்ளார். கற்ற பாடங்களும் நல்லிணக்மும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மிகப் பரந்து பட்டவை. நாம் செய்யக் கூடியவற்றை செய்துள்ளோம். ஆனால் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டும். நாம் சொற்ப காலத்தையே கடந்துள்ளோம். எமது நிலைப்பாடு தெளிவானது. நியாயமான முறையிலும் நடு நிலையாகவும் நோக்கினால். ஜெனிவாவில் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைகளை ஏன் நாம் ஏற்கொள்ளவில்லை என்பது தெளிவு. இப்பிரேரணைகளை நாம் ஏற்க முடியாது. ஆண்டு தோறும் இப்பிரேரணை மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படுகின்றது. எமது நாட்டிலேயே மிகவும் மோசமான நிலைமை இருக்கின்றது என எவரும் கூற முடியாது. எமது நாட்டை விட மிக மோசமான நிலைமைகள் கொண்ட நாடுகள் உலகில் இருக்கத் தக்கதாக ஏன் எம்மை மாத்திரம் இலக்கு வைக்கின்றார்கள்? ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஏன் இவ்வாறு இடம்பெறுகிறது? நாம் இப் பிரேரணையை ஏற்க மாட்டோம்.

ஐக்கிய நாடுகள் சபையும் இப்பிரேரணையைக் கவனத்திற் கொள்ள வேண்டும் என இப்பிரேரணை கோருகின்றது. சர்வதேச விசாரணையை இப்பிரேரணை கோருகின்றது. மீண்டும் மீண்டும் இவ்விசாரணை கோரப்படுகின்றது. நாம் இதனை ஏற்கவில்லை. தருஸ்மானின் அறிக்கையையும் கவனத்திற்கொள்ளவேண்டுமெனவும் இப்பிரேரணை கோருகின்றது. இது ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட அறிக்கை. இது இலங்கை அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு எதிரான ஒரு செயற்பாடு. இவ்வறிக்கையை நாம் பொருட்படுத்தவில்லை. மேற்படி பிரேரணையையிட்டு எமது நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் கிடையாது. இப்பிரேரணையை நாம் முற்றிலும் நிராகரிக்கின்றோம். இம்மனித உரிமைகள் பேரவை நாடுகளைப் பிளவுபடுத்தியுள்ளது. கிரிக்கட் விளையாட்டு மற்றும் சினிமாக் கைத்தொழில் வரை இப்பிரச்சினை விரிவடைந்துள்ளது. எந்த ஓர் அரசினதும் ஆலோசனைகளை ஏற்க நாம் தயாராக இல்லை.

எதிர்கட்சித் தலைவர் நான்கு வினாக்களுக்கு என்னிடம் விடை கோரியுள்ளார். இப்பேச்சுவார்த்தைகள் வொஷிங்டனிலா, ஜெனீவாவிலா, கொழும்பிலா நடத்தப்படும் என வினவுகின்றார்? நாம் இது பற்றி எங்கும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை, எனக் கூற விரும்புகிறேன். இடத்தைப் பற்றி எமக்குப் பிரச்சினை இல்லை.

நாம் எந்த ஒரு நாட்டினதும் ஆலோசனைகளை பின்பற்றத் தயாராக இல்லை. எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் கால அட்டவணை யாது? என எதிர்கட்சித் தலைவர் வினவுகிறார். சில வினாக்கள் சிக்கலானவை. ஒரே நாளில் தீர்வு காண முடியாது. சில பரிந்துரைகளை அமுல்படுத்தியுள்ளோம். மேலும் சில பரிந்துரைகளை அமுல்படுத்த கால அவகாசம் தேவை. இவை அனைத்தையும் ஒரே முறையில் செய்ய முடியாது.

இப்பேச்சுவார்த்தைகள் அமெரிக்காவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படுமா? இந்தியாவுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படுமா என எதிர்க்கட்சித் தலைவர் வினவுகிறார். நாம் கலந்துரையாடுவோம். ஆனால், இது பற்றிப் பேச்சுவார்தை நடத்தும் அவசியம் எமக்கில்லை. இந்தியப் பாராளுமன்றத்தின் ஒரு சில பிரதிநிதிகள் இச் சபையில் பிரசன்னமாகி இருக்கின்றனர். இன்னும் சொற்ப நேரத்தில் நான் அவர்களைச் சந்திப்பேன்" என்றும் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் ஆணைக்குழு

22 வது அமர்வு

நிகழ்ச்சி நிரலின் 2வது குறிப்பெண் (Item)

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்குப் பொறுப்பான ஆணையாளரின் ஆண்டறிக்கையும் மேற்படி அலுவலகத்தினதும் செயலாளர் நாயகத்தினதும் அறிக்கைகள்**

இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டையும் மேம்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை,

ஐக்கிய நாடுகள் சாசனத்திலுள்ள நோக்கங்கள் மற்றும் விழுமியங்களை மீளவலியுறுத்தியும்,

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான பொறிமுறைகளினது வழிகாட்டலின் கீழும்

2006ம் ஆண்டு மார்ச் 15ம் திகதிக்குரிய 60/251 பொதுச்சபை பிரேரணையை நினைவிற்கொண்டும்,

மனித உரிமைகள் பேரவையின் 2007ம் ஆண்டு ஜுன்18ம் திகதிக்குரிய நிறுவனங்களை மேம்படுத்துவது தொடர்பான 5/1 ம் மற்றும் விசேட நடைமுறைகளுக்குரிய ஒழுக்கக்கோவை தொடர்பான 5/2 பிரேரணைகளை நினைவுறுத்தியும்,

2012ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை ஊக்குவித்தல் தொடர்பான 19/2 பிரேரணையை நினைவுறுத்தியும்,

அனைத்து மக்களும் சகல மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் முழுமையாக அனுபவித்துமகிழ்வதை உறுதிப்படுத்துவது ஒவ்வொரு நாட்டினதும் பொறுப்பாகும் என்பதை மீளவலியுறுத்தியும்,

நாடுகள் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்காக மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கையின் போதும் சர்வதேச சட்டத்திற்கு இணங்க குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டம் சர்வதேச அகதிகள் சட்டம் இமற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றிற்கமைவாக உடன்பட்டு நடப்பதை மீளவலியுறுத்தியும்,

2013ம் ஆண்டு செப்டம்பரில் வடக்கு மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறும் என்ற இலங்கை அரசாங்கத்தின் அறிவிப்பை வரவேற்றும்,

உட்கட்டமைப்பு, மீள்கட்டுமானம், கண்ணிவெடியகற்றல், உள்ளக இடப்பெயர்விற்குள்ளானவர்களில் பெரும்பான்மையானவர்களை மீள் குடியமர்த்தியமை ஆகியவற்றில் இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றங்களை ஏற்றுகொண்டு வரவேற்கின்றோம். இருந்தபோதிலும் குறிப்பாக நீதி, நல்லிணக்கம் மற்றும் வாழ்வாதாரத்தை மீள ஆரம்பித்தல் ஆகிய விடயங்களில் இன்னமும் கணிசமான பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதைக் கவனித்திற்கொண்டும் இந்த முயற்சிகளில் சிவில் சமூகம் மற்றும் சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் அடங்கலாக உள்ளூர் மக்களின் முழுமையான பங்குபற்றுதலில் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும்,

இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அதன் தீர்ப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்கை கவனத்திற்கொண்டும் இலங்கையின் தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் அது ஆற்றக்கூடிய பங்களிப்பை ஏற்றுக்கொண்டும்,

இலங்கை அரசாங்கத்தின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயற்திட்டம் மற்றும் ஆணைக்குழுவின் தீர்ப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் விடயத்தில் அதன் அர்ப்பணிப்புக்களைக் கவனித்திற்கொண்டும்,

ஆணைக்குழுவின் தீர்ப்புக்கள் மற்றும் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை அனைத்தையும் தேசிய செயற்திட்டமானது போதுமானளவில் கவனத்திற்கொண்டு செயற்படவில்லை என்பதை கவனத்திற்ககொண்டும்,

நீதிக்குப் புறம்பாக இடம் பெற்றதாக மிகப்பரந்துபட்ட முறையில் குற்றஞ்சாட்டப்படும் கொலைகள் மற்றும் பலவந்தமான காணாமற்போதல் தொடர்பாக புலனாய்வு செய்யப்பட வேண்டும், இலங்கையில் வடமாகாணத்தில் இராணுவமயமாக்கலை நீக்குதல், காணித்தகராறுகளைத் தீர்ப்பதற்கான பக்கச் சார்பற்ற பொறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், ஆட்கள் தடுத்துவைக்கப்படும் கொள்கைகளை மீள மதிப்பாய்வு செய்தல் வேண்டும், முன்னைய சுயாதீன சிவில் நிறுவனங்களை வலுப்படுத்தவேண்டும், மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து, அரசியல் தீர்வை எட்டுதல் வேண்டும், அனைவர-தும் கருத்துவெளியிடுவதற்கான சுதந்திரத்தை பாதுகாத்து மேம்படுத்தவேண்டும், சட்ட ஆட்சி மறுசீரமைப்பை முன்னெடுக்கவேண்டும் போன்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நினைவுறுத்தியும்,

தேசிய செயற்திட்டம் மற்றும் ஆணைக்குழுவின் அறிக்கையானது சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியன மீறப்பட்டமை தொடர்பான பாரதுாரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதை கரிசனையுடன் குறிப்பிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் ஆணைக்குழு

22 வது அமர்வு

நிகழ்ச்சி நிரலின் 2வது குறிப்பெண் (Item)

## ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்குப் பொறுப்பான ஆணையாளரின் ஆண்டறிக்கையும் மேற்படி அலுவலகத்தினதும் செயலாளர் நாயகத்தினதும் அறிக்கைகள்

பலவந்தமான காணாமற்போதல்கள், நீதிக்குப்புறம்பான படுகொலைகள், சித்திரவதைஇ கருத்து வெளியிடும் சுதந்திரம் இஅமைதியான முறையில் கூட்டங்கூடுவதற்கான உரிமை என்பவை மீறப்படுதல் மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூக அங்கத்தவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் மற்றும் பழிவாங்கல்கள்இ நீதித்துறை சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கெதிரான அச்சுறுத்தல்கள்இ சமயம் அன்றேல் நம்பிக்கையின் அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுகின்ற பாராபட்சங்கள் அடங்கலாக இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றமை குறித்து தொடந்தும் வருகின்ற அறிக்கைகள் குறித்து கரிசனையை வெளிப்படுத்தியும்,

நல்லிணக்கத்திற்கு இன்றியமையாத அம்சமாக அமைந்துள்ள அரசியல் அதிகாரம் மற்றும் அனைத்து மக்களும் தமது மனித உரிமைகளை முழுமையாக அனுபவித்து மகிழ்வதை உறுதிப்படுத்துவது அடங்கலாக தனது மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என நாம் கோரிநிற்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை சேர்ந்த தொழில்நுட்ப தூதுக்குழுவின் ஒரு விஜயத்திற்கு வசதியேற்படுத்திக்கொடுத்தமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவிப்பதுடன் ஆணையாளரின் அலுவலகத்துடனான கருத்தாடல்களையும் ஒத்துழைப்புச்செயற்பாடுகளையும் அதிகரிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கின்றோம்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் ஆகியன மீறப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் குறித்து நம்பகரமான மற்றும் சுயாதீனமான சர்வதேச விசாரணையொன்று நடத்தப்படவேண்டும் என மனித உரிமைகள் ஆணையாளர் விடுத்த கோரிக்கையையும் குறிப்பிட்டு,

1. இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டையும் மேப்படுத்துவதற்காக தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையையும் அதில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்களையும் குறிப்பாக நிலைமாற்று நீதி தொடர்பில் உண்மையைக் கண்டறியும் கட்டமைப்பை ஸ்தாபித்தல் என்பவற்றை வரவேற்கின்றோம்.

2. மனித உரிமைகள் ஆணையாளரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கின்றோம். அத்தோடு சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகியன மீறப்பட்டமை தொடர்பில் அரசாங்கம் சுயாதீனமான நம்பந்தகுந்த விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

3. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை செயற்திறான முறையில் இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மீள வலியுறுத்துகின்றோம். அத்தோடு அது தொடர்பான சட்டக் கடப்பாடுகளை நிறைவேற்றத்தேவையான அனைத்து விதமான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அனைத்து இலங்கையர்களுக்கும் நீதி சமத்தும் பொறுப்புக்கூறும் கடப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் நம்பகரமான மற்றும் சுயாதீன நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்பை வெளிப்படுத்துமாறும் கோருகின்றோம்.

4. விசேட ஆணையுடையர்வர்கள் இணைந்து செயற்படுமாறு இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிப்பதுடன் அவர்களது நுழைவுக்கான அனுமதி வழங்கல் மற்றும் அழைப்புக்களைக் கொடுத்தல் உட்பட ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக பதிலளிக்குமாறு கேட்கின்றோம்.

5. மேற்படி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாராய்ந்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தையும் தொடர்புபட்ட விசேட நடைமுறை ஆணைகொண்ட தரப்பினரையும் ஊக்குவிக்கின்றோம்.

6. விசேட நடைமுறை ஆணைகொண்ட தரப்பினர்களது கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டு மனித உரிமைகள் பேரவையின் 24வது அமர்வின் போது வாய்மூல தகவலளிப்பையும் தற்போதைய பிரேரணையின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலைத் தொடர்ந்து 25வது அமர்வின் போது பூரணமான அறிக்கையையும் சமர்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை கேட்டுக்கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source : lankaenews.com

**ஜெனீவாவில் 2013 மார்ச் மாதம் 15 ஆந் திகதி நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றிய மனித உரிமைகள் தொடர்பான இலங்கை சனாதிபதியின் விசேட பிரதிநிதியும் குறித்த கூட்டத் தொடரின் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க அவர்கள் ஆற்றிய உரை.**

நானும் எனது பிரதிநிதிகள் குழுவினரும் இன்றைய காலைப்பொழுதில் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கை இரண்டாவது சர்வதேச பருவகால மீளாய்வினை எதிர்கொண்டது. அச் சந்தர்ப்பத்தில் 2008 ஆம் ஆண்டு முதல் நாங்கள் அடைந்த முன்னேற்றம் பற்றி உங்கள் குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் நடந்த முதலாவது சர்வதேச பருவகால மீளாய்வினைத் தொடர்ந்து நாம் நீண்ட தூரம் பயணம் செய்துள்ளோம்.

இச் சர்வதேச பருவகால கால மீளாய்வு (UPR) கூட்டத் தொடரின் போது மனித உரிமைகள் பேரவையின் எமது நண்பர்களுடன் எமது வெற்றிகள் நாம் எதிர்நோக்கியுள்ள சவால்கள் என்பன பற்றிப் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வாறே எதிர்காலத்தை நோக்கிப் பயணம் செய்வதற்காக எம்மிடம் காணப்படும் மனஉறுதியையும் சுட்டிக் காட்டினோம். இலங்கை தொடர்பாக (UPR) காட்டும் ஆர்வத்தினையும் நாம் நேர்மையாகவே மதிக்கின்றோம். கடந்த (UPR) கூட்டத் தொடரில் கலந்துகொண்ட நாடுகளுள் பெரும் எண்ணிக்கையான நாடுகள் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை ஏற்றுக்கொண்டது. அச் சந்தர்ப்பத்தில் எமது நாடு எதிர்கொள்ள வேண்டியிருந்த சவால்களையும் சில நாடுகள் சுட்டிக் காட்டின. அங்கு சமர்ப்பிக்கப்பட்ட சில சாதகமான பரிந்துரைகளை நாம் ஏற்றுக்கொண்டோம். அதே நேரம் தன்னார்வத்துடன் அர்ப்பணிப்புக்களைச் செய்யவும் நாம் முன்வந்தோம்.

கௌரவ தலைவர் அவர்களே, கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற கூட்டத் தொடரின்போது சாராம்சமொன்றாக இலங்கை தொடர்பாக சுமார் 204 பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. செயலாற்றுகைக் குழுவின் அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தில் நாம் அவற்றுள் 110 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டதுடன் ஏனைய பரிந்துரைகள் மேலதிக ஆலோசனைக்குட்படுத்தப்பட்டு மேலும் மூன்று பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டோம். 91 பரிந்துரைகள் தொடர்பாக இலங்கை ஆதரவு வழங்கவில்லை. ஆதரவு வழங்க முடியாது போன குறித்த பரிந்துரைகள் தொடர்பான எமது நிலைப்பாடு செயலாற்றுகை குழுவின் A/ HRC/22/16/Add என்ற அறிக்கையின் பின் இணைப்புக்களில் தெளி-வாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வாறே மீளாய்வின் பின்னர் சில பரிந்துரைகள் தொடர்பாக இலங்கையின் நிலைப்பாடும் அங்கு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து பரிந்துரைகள் தொடர்பாகவும் இலங்கை பொருத்தமானவாறு குறிப்பிட்டுள்ளது. குறித்த தேசிய கொள்கையினூடாகவும் செயற்திட்டங்களனூடாகவும் இவ் விடயங்கள் தொடர்பாக ஆலோசிப்பதற்கு இலங்கை தயாராகவுள்ளது. அதற்கு மேலதிகமாக இலங்கையானது தன்னார்வத்துடன் அதனோடு தொடர்புடைய 19 விடயங்கள் தொடர்பாகத் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந் நிலைமைகளின் கீழ் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் தேசிய செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய 12 பரிந்துரைகளை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளதென நான் இங்கு கட்டாயம் குறிப்பிடல் வேண்டும் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறை தேசிய செயற்பாட்டுத் திட்டம் ஆகும்.

மேலும் ஓரளவு பரிந்துரைகளுடன் இணங்க முடியுமாயிருப்பினும் அப் பரிந்துரைகளின் உள்ளடக்கத்துடன் உடன்பட முடியாததன் காரணமாக அவற்றை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் இல்லாமலிருப்பதையிட்டு கவலையடைகிறோம்.

(UPR) மீளாய்வுக் கூட்டத் தொடரில் காணப்படுகின்ற கடுமையான போக்குடன் ஒப்பிடுகைளில் ஓரளவு நெகிழ்வான போக்கினை 2008 ஆம் ஆண்டின் கூட்டத் தொடரின் போது பிரதிபலித்ததென்பது எமது நம்பிக்கையாகும். (UPR) என்பது ஒத்துழைப்பினையும் மிகவும் ஆரோக்கியமான தலை-யீடுகளையும் அடிப்படையாகக் கொண்ட நாடுகளுக்கிடையேயான ஒரு செயற்பாடாகும். கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் உருவாகியுள்ள சாத்தியமான மாற்றங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கமளிக்க விரும்புகிறேன். பெப்ரவரி மாதம் முடிவடைந்த மனித உரிமைகள் பேரவையின் உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்பாக எமது தேசிய அறிக்கையிலும் நாம் அடையப்பெற்றுள்ள வரவேற்கத்தக்க ஒருசில வெற்றிகள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**மேலே குறிப்பிடப்பட்ட தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடும் 2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான பல்வேறு பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு சுமார் 1.2 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அக்கறையுள்ளவர்களின் நன்மை கருதி இத் தகவல்கள் இணையத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பணி-களை நிறைவேற்றும்போது பெறப்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி எந்தவொரு நபருடனும் ஒளிவு மறைவின்றி கருத்துப் பரிமாற்றப்படுவதுடன் இவற்றிலிருந்து நாம் செய்துள்ள தியாகங்கள் பற்றி தெளிவான ஒரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.**

மீள் குடியேற்றம் தொடர்பான முன்னேற்றத்தை அடைந்துகொள்ள தொடர்ந்தும் எம்மால் முடிந்துள்ளது. மிகக் குறுகிய காலத்திற்குள் நாம் பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றத்திற்கு நிகரான தரத்திலான ஒரு முன்னேற்றத்தை நாம் இதற்கு முன் கேள்விப்பட்டதில்லை.

இக் கூட்டத் தொடரின்போது விசேடமாகக் கலந்துரையாடப்பட்ட விடயமான பாதிப்படைந்ததாகக் கூறப்படும் பொதுமக்கள் தொடர்பான விடயங்கள் பற்றி கட்டாயம் விளக்கமளிக்கப்படல் வேண்டும். அதன் உண்மைத் தன்மைபற்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆராய்ந்து பார்க்காமலேயே காலத்திற்குக் காலம் குறித்த இப் புள்ளிவிபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதனைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

2012 ஆம் ஆண்டின் தொகை மதிப்புப் புள்ளி விபரமும் அதற்கு முன்னரான 2011 ஆம் ஆண்டில் வடக்கில் நிலவிய நிலைமைகளும் இதனாலேயே முக்கியத்துவம் பெறுகின்றன. குறித்த விடயங்கள் தொடர்பான உண்மை நிலைமை-யைக் கண்டறியும் பணிகள் தொடர்ந்தவண்ணமுள்ளன. ஆகவே பொதுமக்கள் இறந்து போனமைபற்றி எதிர்காலத்தில் மிகச் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் திறமை எமக்கு இருக்கின்றதென்பதுடன் அதற்கு ஏதுவாயமைந்த பல்வேறு விடயங்கள் பற்றி தெளிவான ஒரு விளக்கத்தை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

குற்றமிழைக்கப்பட்டவர்களுக்காவும், சாட்சியமளிப்பவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற மற்றும் அவர்களைப் பாதுகாப்பதுடன் தொடர்பான சட்டமூலமொன்று தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று நீதி அமைச்சு மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைச் சந்திப்பின்போது இவ் விடயம்பற்றி கலந்துரையாடப்பட்டன. இது தொடர்பான அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சட்டமா அதிபருக்குச் சமர்ப்பிப்பதற்கு அங்கு முடிவெடுக்கப்பட்டன.

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து திருகோ-ணமலையைச் சேர்ந்த மாணவர்கள் ஐவர் தொடர்பாகவும் ACF அமைப்பின் ஊழியர்கள் தொடர்பாகவுமான வழக்கு விசாரணைகள் சட்டமா அதி-பரினால் மீளாய்வு செய்யப்பட்டன. அங்கு திருகோணமலையைச் சேர்ந்த மாணவர்கள் ஐவர் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் அவர்கள் பொலீசாருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார். ACF ஊழியர்கள் விவகாரம் தொடர்பான விடயங்கள் மேற்படி மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

வகைப் பொறுப்புக் கூறல் தொடர்பாகவும் இராணுவ அதிகாரிகளி-னால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு மனிதாபிமான செயற்பாட்டின்போது பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகுதல் மற்றும் உண்மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதற்கு முன்னர் குறிப்பிட்டதைப் போன்று UPR கூட்டத்தொடரில் கலந்துகொண்ட உறுப்பினர்களைப் போலவே கண்காணிப்பு தரத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இலங்கை தொடர்பாகக் காட்டுகின்ற ஆர்வத்தை நாம் வெகுவாக வரவேற்பதாக நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்த விரும்புகிறேன். எமது நாடு மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை வரவேற்பதுடன் அது தொடர்பாக சாதகமான கருத்துக்களை மற்றும் பிரேரணைகளைச் சமர்ப்பித்தல் தொடர்பில் உறுப்பினர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதன் பின்னரும் சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் பணிகளுக்காக இலங்கை வெளிப்படையாகவும் நிச்சயமாகவும் செயல் ரீதியாகவும் தொடர்புபடுவதாகத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

தன்மை ஊர்ஜிதப்படுத்தப்படாத சனல் 4 வீடியோக் காட்சிகள் தொடர்பான விடயங்களை உறுதிசெய்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு மேலதிகமாகக் காணாமல் போயுள்ளதாகக் குறிப்பிடப்படும் தமது உறவினர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான தரவு வங்கி ஒன்றினையும் நாம் ஆரம்பித்துள்ளோம். அவ் உறவினர்களது தேடுதல்களுக்குப் பதிலளிக்கும் வகையில் இதன்மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். காணாமற் போதலுக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் நபர்கள் தொடர்பான தேசிய பொறிமுறையொன்றினூடாக மேலும் விடயங்களை ஆய்வு செய்வதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

மனித உரிமைகள் பேரவைக்கு நாம் அடிக்கடி கூறியுள்ளதைப் போன்று 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது மீளாய்வு கூட்டத் தொடரின் பின்னர் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை நாம் தயாரித்துள்ளதுடன் அதன்மூலம் இது தொடர்பாக நாம் காட்டும் அர்ப்பணிப்பு தெளிவாகப் பிரதிபலிக்கப்படுகிறது. அது நாம் வழங்கிய பிரதானமானதொரு உறுதிமொழியை நிறைவேற்றுதல் என்பதுடன் அதற்கு ஏற்ப குறிப்பிடத்தக்க ஒரு காலம் முடக்கப்பட்டதுடன் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டன. 2012 ஆண்டு டிசெம்பர் மாதம் அது முதன்முதலாக நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலாம் ஆண்டின் பணிகள் தொடர்பாகத் தற்போது நாம் ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டு வருகின்றோம். யுத்தத்தின்மூலம் நாம் பெற்றுக்கொண்ட வெற்றியை மேலும் உறுதி செய்துகொள்வதற்காக நாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதுடன் அதன்மூலம் மனித உரிமைகள் துறையின் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முறைசார்ந்த ரீதியில் தீர்வு பெற்றுக் கொடுப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இக்கூட்டத் தொடர்களின்போது இலங்கை ஆதரவு வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நாம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கான ஒரு பொறிமுறையினைத் தயாரித்துக் கொள்வதே எமது எதிர்கால எதிர்பார்ப்பாகும்.

2017 ஆம் ஆண்டளவில் அடுத்த கூட்டத்தொடர் நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் நாம் பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றம் பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கக் கூடியதாயிருக்கும். அம் மீளாய்வின்போது இலங்கையர்களின் நன்மை கருதி மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நாம் மேற்கொண்ட எதிர்கால நடவடிக்கைகளை உங்கள் முன்னிலையில் வெளிப்படுத்த முடியுமாயிருக்கும்.

இதற்கு முன்னர் குறிப்பிட்டதைப் போன்று UPR கூட்டத்தொடரில் கலந்துகொண்ட உறுப்பினர்களைப் போலவே கண்காணிப்பு தரத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இலங்கை தொடர்பாகக் காட்டுகின்ற ஆர்வத்தை நாம் வெகுவாக வரவேற்பதாக நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்த விரும்புகிறேன். எமது நாடு மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை வரவேற்பதுடன் அது தொடர்பாக சாதகமான கருத்துக்களை மற்றும் பிரேரணைகளைச் சமர்ப்பித்தல் தொடர்பில் உறுப்பினர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதன் பின்னரும் சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் பணிகளுக்காக இலங்கை வெளிப்படையாகவும் நிச்சயமாகவும் செயல் ரீதியாகவும் தொடர்புபடுவதாகத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அதேபோன்று இலங்கை மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாக உறுப்பு நாடுகளுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் விளக்கமளிப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அடுத்த மணித்தியாலயத்தினுள் நடைபெறவுள்ள கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக எதிர்பார்ப்புடன் இருப்பதுடன் அது இலங்கையின் பல்லின மற்றும் பல்கலாசார மக்களது நன்மை கருதி ஆரோக்கியமான முடிவுகளை வழங்கும் ஒரு கூட்டத் தொடராக வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Photo source : www.businesstoday.lk/ www.ida.wp.gov.lk/

அமைச்சர் சம்பிக்க ரணவக்க

அமைச்சர் உதய கம்மன்பில

# எம்மை விசாரணை செய்ய முன்னர் காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதை விசாரிக்கவும்

## ஜாதிக்க ஹெல உறுமய இந்தியாவைக் கோருகிறது.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாகக் கண்டறிவதற்கு முன்னர் காஷ்மீர் மோதல்களின்போது இடம் பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக கண்டறிய இந்தியா நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஜாதிக்க ஹெல உருமய கூறுகிறது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இனவாத, மதவாத மற்றும் சாதி அமைப்பு ரீதியான மோதல்கள் தொடர்பாக எதுவித அக்கறையுமின்றி இந்த நாட்டில் பல்வேறு மனித உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறி கோஷமிடுவது ஒரு நகைச்சுவையான செயலென ஜாதிக்க ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல பன்னிபிட்டிய வீதியில் அமைந்துள்ள ஜாதிக்க ஹெல உறுமயவின் தலைமை அலுவலகத்தில் நடந்த ஊடக சந்திப்பொன்றில் உரையாற்றிய அமைச்சர் அவர்கள் மேலும் கூறியதாவது,

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டமொன்றின் முன்னேற்ற மீளாய்வுக்காக இந்தியாவின் பாராளுமன்றக் குழுவொன்று தற்போது இலங்கை வந்துள்ளது. நாகரிகம் மிக்க மக்கள் என்ற வகையில் நாம் அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம். ஆயினும், அவர்கள் எமது நாட்டை சுதந்திரமும் இறைமையும் கொண்ட ஒரு நாடாக ஏற்றுக் கொள்வதாயின் மாத்திரமே அவ்வாறு நாம் வரவேற்போம். தமிழ் நாடு உட்பட இந்தியாவின் ஒரு சில பகுதிகளைச் சேர்ந்த அரசியல் குழுக்கள் நம்புவதைப் போன்று அவர்களும் இந் நாட்டை இந்தியாவின் ஒரு

**கடந்தகால பயங்கரவாத யுத்த நிலைமைகளின் போது தெற்கில் அதிகளவு குண்டுகள் கொழும்பிலேயே வெடித்தன. ஆயினும் கொழும்பில் வாழும் தமிழ் மக்களைத் தாக்குவதற்கோ துன்புறுத்துவதற்கோ எந்தவொரு சிங்களவரும் முன்வரவில்லை. இன்று கொழும்பு நகரில் 24 வீதமான சிங்களவர்கள் குடியிருக்கின்ற அதே நேரம் 33 வீதமான தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்க்கை நடாத்துவதற்கான சந்தர்ப்பம் இதனாலேயே கிடைக்கப் பெற்றுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலமாகக் கருதி ஆதிக்கம் செலுத்தும் நோக்கில் இங்கு வருகை தந்திருப்பின் நாம் அவர்களை வரவேற்கத் தயாராக இல்லை.

**கடந்தகால பயங்கரவாத யுத்த நிலைமைகளின் போது தெற்கில் அதிகளவு குண்டுகள் கொழும்பிலேயே வெடித்தன. ஆயினும் கொழும்பில் வாழும் தமிழ் மக்களைத் தாக்குவதற்கோ துன்புறுத்துவதற்கோ எந்தவொரு சிங்களவரும் முன்வரவில்லை. இன்று கொழும்பு நகரில் 24 வீதமான சிங்களவர்கள் குடியிருக்கின்ற அதே நேரம் 33 வீதமான தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்க்கை நடாத்துவதற்கான சந்தர்ப்பம் இதனாலேயே கிடைக்கப் பெற்றுள்ளது.**

வெள்ளவத்தை கடற்கரை வீதியில் சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக வாழ்க்கை நடாத்தும் தமிழ் மக்கள் பற்றித் தேடிப் பார்க்குமாறு நாம் இந்தியாவின் பாராளுமன்ற தூதுக் குழுவினருக்கு அழைப்பு விடுக்கின்றோம். அதே போன்று இந்த நாட்டின் வியாபாரிகள் தமிழ் நாட்டில் பல்வேறு வகையான இன்னல்களை எதிர்கொள்கின்ற அதேவேளை கொழும்பு கோட்டைப் பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள எந்தவொரு இந்திய வியாபாரிகளும் சிங்களவர்களினால் துன்புறுத்தப்பட்டுள்ளார்களா எனக் கண்டறியுமாறு நாம் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்திய பாராளுமன்றக் குழுவினர் சரியான நோக்கத்துடன் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொள்வார்களாயின் தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களைவிடச் சிறந்ததொரு வாழ்க்கைத் தரத்தினை வடக்கின் தமிழ் மக்கள் அனுபவிக்கின்றனர் என்பதை அவர்களால் கண்டுகொள்ளலாம்.

பாரதிய ஜனதா கட்சியின் முன்னைநாள் அமைச்சர் யஸ்வாந்த்சிங் அவர்கள், இந் நாட்டில் நடைபெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாகக் கண்டறிவதற்காக இந்தியாவினால் சுதந்திர ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இந்தியாவினால் அவ்வாறான ஓர் ஆணைக்குழு நம் நாட்டில் நியமிக்கப்படுவதை விடுத்து 1984 ஆம் ஆண்டு முதல் தமிழ் நாட்டினதும் மத்திய பிரதேசத்திலும் முகாம்களை நிறுவி எல்ரீரீஈ பயங்கரவாதிகளைப் பயிற்றுவிப்பதற்கும் அவர்களை வளர்ப்பதற்கும் இந்திய அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாகக் கண்டறிவதற்கே மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான ஆணைக்குழு ஈடுபடுத்தப்படல் வேண்டும்.

எல்ரீரீஈ அமைப்பிற்கு இந்திய மத்திய அரசும் மாநில அரசாங்கங்களும் வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணைக்குழு அறிக்கையில்கூட இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் இன,மத,குல பேதங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகையான மோதல்கள் கடந்த காலங்களில் நடைபெற்றன. காஷ்மீர் யுத்தத்தினால் மட்டும் சுமார் 93000 பேர் வரை காணாமல் போயுள்ளனர்.

இவை தொடர்பாக ஆராய்வதற்கே இந்தியாவினால் குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமே தவிர இந்த நாட்டில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு அல்ல. இந் நாட்டின் தெற்குப் பிராந்தியத்தில் சிங்கள, தமிழ், முஸ்லீம் ஆகிய அனைத்து இனங்களும் சமாதானமாக வாழ்ந்தபோதும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் வாழக்கூடியவாறான ஒரு சூழ்நிலை கட்டியெழுப்பப்படவில்லை.

**இலங்கைக்கு எதிராக தமிழ் நாட்டின் அரசியல்வாதிகளை காங்கிரஸ் கட்சியும் பாரதிய ஜனதா கட்சியுமே வழிநடத்துகிறது. ஆயினும் இந்த மறைமுகமான யுத்தமானது இந்தியாவுக்கெதிரான ஒரு யுத்தத்தில் முடிவடையப் போகின்றது என்பதனை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. எதிர்வரும் 8 ஆண்டுகளுக்குள் தமிழ் நாட்டைப் பிரித்தெடுப்பதற்கான ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பார்கள்.**

ஆகவே தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாம் இந்தியாவைக் கேட்டுக் கொள்கிறோம். இங்கு கருத்துத் தெரிவித்த ஜாதிக்க ஹெல உறுமயவின் பிரதிச் செயலாளரும் மாகாண சபை அமைச்சருமான உதய கம்மன்பில அவர்கள் இவ்வாறு கூறினார்.

இன்று எமது அமைச்சர்களுக்கும் பராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தியாவுக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அவ்வாறான ஒரு நிலைமையிலும்கூட நாம் இந்தியப் பாராளுமன்ற தூதுக் குழுவினரை அன்புடன் வரவேற்கின்றோம்.

இதற்கு முன்னர் 2009 ஆம் ஆண்டில் திரு கருணாநிதி அவர்களது புதல்வி உள்ளிட்ட குழுவொன்றும் கடந்த ஆண்டில் இந்தியாவின் எதிர்கட்சித் தலைவி திருமதி சுஷ்மா சுவராஜ் அவர்கள் உள்ளிட்ட குழுவொன்றும் இலங்கைக்கு வந்தனர். இந்த நாட்டில் நடைபெற்றுவரும் மீள்குடியமர்த்தல், வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக இங்கு புகழ்ந்து பேசியதுடன் இந்தியா சென்றதும் வேறு விதத்திலேயே நடந்து கொண்டனர்.


ஆகவே அவர்கள் சரியானதைச் சரியான விதத்தில் பார்ப்பதில்லை என்பது தெளிவாகிறது. அவர்கள் நாட்டில் நிலவுகின்ற அரசியல் அலைகளுக்கு ஏற்பவே செயற்படுகின்றனர்.

**ஆகவே தமிழ் நாட்டில் நடைபெற்ற தென் இந்திய நடிகர் நடிகைகளின் ஆர்ப்பாட்டத்திற்கும் இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களின் இந்நாட்டுக்கான விஜயத்திற்குமிடையில் எதுவித வேறுபாட்டையும் நான் காணவில்லை. அவை இரண்டுமே வெறும் நடிப்பு மாத்திரமேயாகும்.**

அவர்கள் வடக்கில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கண்கூடாகப் பார்த்த போதிலும் சமீபத்தில் நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் நாட்டின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக செவிடர்கள் போன்றும், குருடர்கள் போன்றும் நடந்துகொள்வார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை. ஆயினும் நாம் ஒரு நாகரீகமுடைய மக்கள் என்பதனால் அவர்கள் எந்தவொரு இன்னலுமின்றி இந்நாட்டில் பயணம் மேற்கொள்ளலாம்.

அனுசரணை லங்காதீப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2012 எல்.எல்.ஆர்.சீ. அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பான பிரஜைகள் கலந்துரையாடல்

**நிறைவேற்றுச் சாராம்சம்**

பாரிய எதிர்பார்ப்புடன் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு நிறுவப்பட்டது. இதன் அறிக்கை 2011.12.16ம் திகதி வெளியிடப்பட்டது. தொடர்ந்து பல அனர்த்தங்களையும், உயிரிழப்புக்களையும் ஏற்படுத்திய பயங்கர யுத்தம் 2009 இல் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. 2002-02-27ம் திகதி கையொப்பமிடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பலவீனங்களுக்கான காரணிகளை ஆய்வு செய்து அதன் மூலம் கற்ற பாடங்களை மேலோங்கச் செய்வதும், தேசிய ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதும் இவ்வாணைக்குழுவின் இலக்காக அமைந்தது. இப்பெறுபேறுகளை அடையவே இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டது. இலங்கை வரலாற்றில் நாம் கண்ட மிகச் சிறந்த ஆணைக்குழு அறிக்கை என இதனைக் குறிப்பிடலாம்.

2012 ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பாக கொண்டுவந்த தீர்மானம் நாட்டில் விவாதத்திற்கிடமான பொருளாக நோக்கப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ அமைப்பை போர் மூலமாக தோற்கடித்த பின்னர், தாபிக்கப்படட கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் (எல்.எல்.ஆர்.சீ) பரிந்துரைகளை அரசாங்கம் தவிர்த்து வரும் தோற்றப்பாட்டை அடிப்படையாகக்கொண்டு மனித உரிமைகள் பேரவை தனது தீர்மானத்தைக் கொண்டு வந்தது. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்பாட்டுத் திட்டமொன்றின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தி, அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தலும் அறிக்கையிடுதலும் தீர்மானத்தின் அடிப்படையான கோரிக்கையாகும்.

இந்த விடயம் கருத்து வேறுபாட்டுச் சூழலை உருவாக்கியதன் விளைவாக நாட்டினுள் இரண்டு கருத்துநிலைகளைக் கொண்ட இரு தரப்பினரின் எழுச்சியைக் காண முடிந்தது. நாட்டின் உட்பூசல்களை நாமே தீர்த்துக்கொள்வதற்கு அந்நிய நாட்டுச் சக்திகளின் பிரசன்னம் தேவையில்லை எனும் பிரபல கருத்துநிலை கொண்டோர் முதன்மை நிலையில் வைத்து பார்க்கப்பட்டனர்.

ஆணைக்குழுவின் சில பரிந்துரைகள், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் தனியாத பிரச்சனைகளுக்கு ஓரளவு தீர்வினை வழங்கியிருப்பதால் அவற்றை முழுமையாகவும் துரிதமாகவும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் மீண்டும் ஒரு மோதல் சூழல் ஏற்படுவதற்கான ஆபத்தினைக் குறைத்துக்கொள்ள முடியுமென்பது அதிகம் பிரபலம் பெறாத தரப்பினரின் கருத்தாகவிருந்தது.

இக்கருத்துக்கு வலுவூட்டிய பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணிகள் இருந்தன. பொதுமக்களின் அசமந்தப் போக்கும் மெய்யறிவுக்கு அப்பாற்பட்ட பதில்களும் இதன்பால் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் பரந்துபட்ட மக்கள் வட்டத்தினுள் இடம்பெறாமை முதலாவது விடயமாகும். இரண்டாவது விடயம் பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுவதில் தவறியுள்ளமையாகும். ஆணைக்குழுவின் அறிக்கையை தமிழ் அல்லது சிங்கள மொழியில் வெளியிடாது ஆங்கிலத்தில் மாத்திரம் வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு எதிராக அரசாங்கத்தின் ஒருசிலர், மக்களை தூண்டியபோது அரசாங்கம் மௌனம் காத்துவந்தமை மூன்றாவது விடயமாகும். அடுத்ததாக ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கைகளுக்கு இயைந்தொழுகும் நாடு என்ற நிலையை மறந்து, தேசிய அளவில் தான்தோன்றித்தனமாக செயற்பட்டு வெளிநாட்டு ஊடகங்களின் வாயிலாக சர்வதேச உடன்படிக்கையுடன் கொண்டுள்ள இறுக்கத்தை வெளிக்காட்டல்.

மேலும் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த சிவில் அமைப்புகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதை அரசாங்கம் நிராகரித்தமை மற்றும் மக்கள் மத்தியில் சிவில் அமைப்புகள் தொடர்பான பாதகமான உளப்பாங்கினை வளர்த்தல்.

இந்நிலைமையின் கீழ் உண்மையான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் ஐக்கியமான எதிர்காலத்திற்காகவும் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி நாடு என்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய முறைமை பற்றி பரந்துபட்ட பொது மக்கள் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்படவில்லை. இலங்கையின் மோதல் நிலைமாற்றச் செயற்பாட்டிற்கு சிவில் சமூகத்திற்குப் பெறுமதியானதும் சாதகமானதுமான பங்களிப்பைச் செய்ய முடியும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர்பார்க்கின்றது. எனவே, எல்.எல். ஆர்.சீ பரிந்துரைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் பங்களிப்புடன் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் அவசியமான இடையீட்டை மேற்கொள்வது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நோக்கமாக அமைந்தது.

அதே சமயம் சிவில் அமைப்புகளில் ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைத்த போதிலும், அரசு அதனைப் புறக்கணித்து பகைமை மனப்பாங்கையே மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் ஒரு குழப்பமான நிலையே காணப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில் உண்மையான நல்லிணக்கமோ ஐக்கியப்பட்ட எதிர்காலம் தொடர்பான நடவடிக்கைகளைப் பற்றியோ முழுமையான மக்கள் கலந்துரையாடல் உருவாக்கப்படவில்லை. இலங்கையில் மோதல் நிலைமாற்றச் செயற்பாட்டிற்கு, சிவில் சமூகத்தின் சாதகமான பங்களிப்பு உண்டென மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நம்புகின்றது. எனவே எல்.எல்.ஆர்.சீ அறிக்கையின் உள்ளடக்கத்தையும் பரிந்துரைகளையும் பற்றிய தொடர் கலந்துரையாடலை சமூக மட்டத்தில் அமுல்படுத்துவதோடு, எல்.எல்.ஆர்.சீ. அறிக்கை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. குறிப்பிட்ட மக்களின் கருத்துக்களைப் பயன்படுத்தி எல்.எல். ஆர்சீ அறிக்கையின் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு பயனுள்ள தேசிய மட்டத்திலான உரையாடலை முன்னெடுப்பதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இடையீடு செய்து வருகிறது.

**நூல்களும் வெளியீடுகளும்**

1. முதல் கட்டமாக எல்.எல்.ஆர்.சீ அறிக்கை பற்றிய தகவல்கள் பிரசைகளுக்கு வழங்கும் நோக்கத்துடன், சட்டத்தரணி திரு.எஸ்.ஜீ. புஞ்சிஹேவாவினால் தொகுக்கப்பட்ட நூலொன்று சிங்களத்திலும் தமிழிலும் மக்களுக்கு வழங்கப்பட்டது. மக்கள் குறித்த விடயங்களை விளங்கிக்கொள்வதற்காக நூல் இலகு மொழியில் தயாரிக்கப்பட்டது. எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள், ஐ.நா செயலாளரின் நிபுணர் குழு (தருஸ்மான் அறிக்கை) அறிக்கை, ஐரோப்பிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் என்பவற்றைத் தழுவி இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.
2. திரு. லயனல் குருகேயினால் தொகுக்கப்படும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதான நோக்கு சஞ்சிகையின் 2012 செப்ரெம்பர் இதழ் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் அறிக்கை வெற்றியளிக்குமா? என்ற பிரதான தலைப்பின் கீழ் தயாரிக்கப்பட்டு சிங்களத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்டது.

**அச்சு வெளியீடுகளின் எண்ணிக்கை**

| நூல்கள் | எண்ணிக்கை |
|---|---|
| சிங்களம் | 45,000 |
| தமிழ் | 24,000 |
| **மொத்தம்** | **67,000** |
| **சஞ்சிகைகள்** | **எண்ணிக்கை** |
| சிங்களம் | 46,000 |
| தமிழ் | 17,500 |
| மொத்தம் | 63,500 |
| முழு மொத்தம் | 130.500 |

அட்டவணை 1 (தகவல் மூலம் – கருத்திட்ட தரவுகள், அறிக்கைகள்)

எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் அடங்கிய நூலில் 67,000 பிரதிகளும், சமாதான நோக்கு சஞ்சிகையின் 63,500 பிரதிகளும் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன. இதில் 70% சிங்கள மொழி மூலமும் 30% தமிழ் மொழி மூலமும் விநியோகிக்கப்பட்டன. சம்பாசணை அமர்வுகள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள், நபர்களின் கோரிக்கையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட குழுக் கலந்துரையடல்கள்

| மாகாண | மாவட்ட | மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட குழுக் கலந்துரையாடல்கள் |
|---|---|---|
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 43 |
| | மட்டக்களப்பு | 41 |
| | திருகோணமலை | 44 |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | 41 |
| | பொலனறுவை | 38 |
| ஊவா மாகாணம் | பதுளை | 44 |
| | மொணறாகலை | 40 |
| மேல் மாகாணம் | கொழும்பு | 35 |
| | கம்பஹா | 32 |
| | களுத்துறை | 40 |
| தென் மாகாணம் | காலி | 35 |
| | மாத்தறை | 45 |
| | அம்பாந்தோட்டை | 63 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 40 |
| | கிளிநொச்சி | 35 |
| | மன்னார் | 44 |
| | வவுனியா | 41 |
| | முல்லைத்தீவு | 38 |
| மத்திய மாகாணம் | கண்டி | 47 |
| | மாத்தளை | 42 |
| | நுவரெலியா | 45 |
| சபரகமுவ மாகாணம் | கேகாலை | 43 |
| | இரத்தினபுரி | 38 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | 40 |
| | புத்தளம் | 39 |

அட்டவணை 4 (தகவல் மூலம் – கருத்திட்ட தரவுகள், அறிக்கைகள்)

பேரில் இந்த வெளியீடுகள் வினியோகிக்கப்பட்டதன் ஊடாக அவற்றை வாசித்தறிந்து பிரதிபலிப்பு வழங்குவோரின் உருவாக்கம் முக்கியமான ஒரு நகர்வாகும்.

3. மேற்கூறிய நூல் மற்றும் சஞ்சிகையின் மின்னஞ்சல் பிரதியை எவரும் தாங்கள் விரும்பும் மொழியில் வாசிப்பதற்காக CPA இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

#### பயிலமர்வுகளும் செயலமர்வுகளும்

எல்.எல்.ஆர்.சீ அறிக்கை பற்றிய பிரஜைகள் கலந்துரையாடலின் போது சுமார் 13,000 இற்கும் மேற்பட்ட பங்காளர்கள் கலந்துரையாடல் அமர்வுகளில் பங்குபற்றினர். மேலும் பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் தொடர்பாக பிரசைகளின் கலந்துரையாடல் ஊடாக மக்களை விழிப்பூட்டுவதற்காக மாவட்ட மட்டத்தில் 47 பயிற்றுநர்களுக்கும் வசதிபடுத்துநர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்றப்பட்டோரின் பங்களிப்புடன் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் ஒரு பயிற்றப்பட்டவர் 22 கலந்துரையாடல் அமர்வுகளை நடத்தினார்.

இந்த பயிலமர்வின் வளவாளர்களாக கலாநிதி திரு. பாக்கியசோதி சரவணமுத்து, சட்டத்தரணி திரு. எஸ். ஜீ.புஞ்சிஹேவா, பேராசிரியர் திரு. ஜயந்த செனவிரத்ன, பேராசிரியர் திரு. கே.குருபரன், விரிவுரையாளர் திரு. சர்ஜுன் மற்றும் ஊடகவியலாளர் திரு. திம்பிரியாகம பண்டார ஆகியோர் பங்குகொண்டனர்.

சம்பாசணையாக நெறிப்படுத்தப்பட்ட இந்த பயிலமர்வின் ஊடாக சமுதாயத்தில் வேரூன்றியிருந்த ஒருசில தவறான கருத்துக்களைக் கண்டறிந்து அவற்றை தெளிவுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டதோடு பரந்த நோக்கில் பிரச்சனைகளை இனம்காணும் பயிற்றுநர் குழுவொன்றை உருவாக்கவும் முடிந்தது.

பயிற்றுநர்களினதும் வசதிபடுத்துநர்களினதும் தலைமையில் இலங்கை முழுவதும் உள்ளடங்கும் வகையில் நடாத்தப்பட்ட 1033 சம்பாசணை அமர்வுகளின் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

பிரசைகளை மையப்படுத்திய இந்த சம்பாசணை அமர்வுகளுக்கென அரசியலில் ஆர்வம் கொண்டவர்கள், பல்வேறு தொழில்புரிவோர் மற்றும் மதகுருமார்கள் பங்குகொண்டமை சிறப்பம்சமாகும். கொழும்பிலுள்ள வளவாளர்களைக் கொண்டு நடாத்தப்பட்ட சம்பாசணை அமர்வுகளின் நிறைவுக்கு வந்தபோது 30,990 பிரசைகளின் பங்கேற்பு பதிவாகியிருந்தது. விபரங்கள் வருமாறு,

பல்வேறுபட்ட அரசியல் கருத்துக்கள், பிற கருத்துக்கள் உயிரோட்டமாக ஆய்ந்தறியப்பட்ட இச்செயற்பாடு முன் நோக்கி நகர்த்தப்பட்டதால் எல். எல்.ஆர்.சீ பரிந்துரைகள் தொடர்பில் அறிவார்ந்த குழுவொன்றின் உருவாக்கமும் அவர்களின் பல்நிலைப்பட்ட கருத்துக்கள் சமூகத்தைச் சென்றடைவதனையும் இங்கு அவதானிக்க முடிந்தது.

**கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த நபர்களின் கருத்துக்களை ஆய்ந்தறிந்து அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப் பட்டமைக்குக் காரணம் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் தற்போதைய நிலையில் அவர்களின் அவதானிப்பு முக்கியம் பெறுவதே ஆகும். இதற்கென ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த 46 பேரின் கருத்துக்கள் பெறப்பட்டன. எல்.எல்.ஆர். சீ அறிக்கை தொடர்பாக பிரசைகளின் கருத்துக்களை உள்வாங்கி தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கென மாவட்ட மட்டத்திலான**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவட்ட பயிற்றுனர்களின் எண்ணிக்கை**

| பயிற்றுநர்களின் மொத்த எண்ணிக்கை | ஆண் | பெண் |
|---|---|---|
| 45 | 40 | 05 |
| | | |
| **மாகாணம்** | **மாவட்டம்** | **மாவட்ட பயிற்றுனர்களின் எண்ணிக்கை** |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 02 |
| | மட்டக்களப்பு | 02 |
| | திருகோணமலை | 01 |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | 02 |
| | பொலனறுவை | 01 |
| ஊவா மாகாணம் | பதுளை | 02 |
| | மொணறாகலை | 02 |
| மேல் மாகாணம் | கொழும்பு | 02 |
| | கம்பஹா | 01 |
| | களுத்துறை | 02 |
| தென் மாகாணம் | காலி | 02 |
| | மாத்தறை | 02 |
| | அம்பாந்தோட்டை | 03 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 02 |
| | கிளிநொச்சி | 01 |
| | மன்னார் | 02 |
| | வவுனியா | 02 |
| | முல்லைத்தீவு | 01 |
| மத்திய மாகாணம் | கண்டி | 02 |
| | மாத்தளை | 02 |
| | நுவரெலியா | 02 |
| சபரகமுவ மாகாணம் | கேகாலை | 01 |
| | இரத்தினபுரி | 01 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | 03 |
| | புத்தளம் | 02 |

அட்டவணை 3 (தகவல் மூலம் – கருத்திட்ட தரவுகள், அறிக்கைகள்)

| மாதம் / 2012 | பயன்படுத்தியோரின் எண்ணிக்கை | ஊடகம் | |
|---|---|---|---|
| | | சிங்களம் | மாதம் |
| செப்ரெம்பர் | 1800 | 1425 | 375 |
| ஒக்ரோபர் | 3700 | 2275 | 1425 |
| நவம்பர் | 2100 | 1120 | 980 |
| டிசெம்பர் | 405 | 245 | 160 |
| மொத்தம் | 8005 | 5065 | 2940 |

அட்டவணை 2 (தகவல் மூலம் – கருத்திட்ட தரவுகள், அறிக்கைகள்)

**சம்பாஷனை அமர்வில் பங்கேற்ற நபர்களே இணைத்துக்கொள்ளப்பட்டன.**

இச்செயற்பாட்டின்போது எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் தொடர்பாக விழிப்பூட்டும் செயற்பாடு தொடக்கக் கட்டத்தில் செயற்படுத்தப்பட்டிருப்பின் நிலைமை இதைவிடவும் வேறுபட்டிருக்கலாமென்ற விடயம் பங்கேற்ற பிரசைகளின் மட்டத்தில் கண்டறியப்பட்டது. கொள்கை வகுப்பின்போது பிரசைகளின் பங்கேற்பு குறைதல் சமூக வீழ்நிலைக்கு இட்டுச் செல்கிறது. இதற்கு காரணம் ஆட்சியாளர்கள் தான்தோன்றித்தனமாக செயற்பட எத்தனிப்பதாகும்.

மேலும் எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் பற்றிய மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக மக்களை தொடர்ந்தும் விழிப்புணர்வூட்ட வேண்டியதன் அவசியத்தை பிரசைகளும் சுட்டிக்காட்டியுள்ளனர். எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடித்துவரும் அசமந்தப்போக்கிற்குச் சமாந்தரமாக ஊடகங்களும் கல்விக் கூடங்களும் இவ்விடயத்தில் பிரசைகளை விழிப்பூட்டும் பொறுப்பினின்று விலகியிருப்பதானது பிரசைகளின் கருத்துக்களில் எதிரிடையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பிரதிபலிப்பை சூடான செய்திகளாக வெளியிடும் ஊடகங்கள் சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் மற்றும் அதன் பின்னணி பற்றி மக்களை விழிப்பூட்டும் பொறுப்பினின்று விலகியிருத்தல் பிரசைகளின் உளப்பாங்கின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தலைவர்கள் மற்றும் பிரதேச அரசியல்வாதிகளின் அழுத்தத்தின் காரணமாக ஆர்ப்பாட்டங்களில் குதித்தவர்களுக்கு தாங்கள் என்ன செய்துள்ளோம் என்பது பற்றி ஓரளவேனும் புரிந்துணர்வு இல்லை. இது இங்னாரியோ சிலோனியின் நாவலில் உள்ளவாறு பென்ரமாறா கிராம வாசிகள் ஆர்ப்பாட்டங்களுக்கென நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டு கைவிடப்பட்ட பின்னர் அவர்கள் நிலைகுலைந்துபோன சம்பவத்தை ஒத்ததாகும்.

எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் மீதான விருப்பத்தைத் தெரிவித்தல் போரின் வெற்றியை பின்தள்ளுதல் என்ற வலுவான கருத்து நாட்டினுள் வேரூன்றச் செய்யப்பட்டிருந்தது.

### தடைகள்

விழிப்பூட்டல் செயற்பாட்டிற்கு பிரசைகளின் மட்டத்தில் தடைகள் குறைந்தே காணப்பட்டன. தங்களாலேயே தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நாட்டுக்கு எந்தளவுக்குப் ஏற்புடையது என்ற உளப்பாங்கிற்கு மாறாக அரசாங்கம் எதிர்நிலை உளப்பாங்கினை ஏற்படுத்தியிருந்ததன் விளைவாக பாதுகாப்புப் படைகள், நிருவாக உத்தியோகத்தர்கள் போன்ற சிலரினால் இது நிராகரிக்கப்பட்டிருந்தது. சிவில் அமைப்புகளின் செயற்பாடு தொடர்பில் அரசாங்கம் ஊடகங்களை இணைத்துக்கொண்டு கட்டியெழுப்பியுள்ள எதிர்நிலையும் இச்செயற்பாட்டுக்குத் தடையாக அமைந்தது.

ஒருசில பயிற்றுநர்களுக்கும் வசதிபடுத்துநர்களுக்கும் பிரதேச அரசியல்வாதிகளினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக நோக்கும்போது அடைவுகள் திருப்திகரமானதாகவும் ஊக்குவிப்பதாகவும் உள்ளன. பிரசைகள் இயங்கா நிலையில் இருப்பதற்கு பழக்கப்படுத்தப்பட்டுள்ளபோதும், தீவிரமாக உணரப்படும் பிரச்சனைகளின்பால் தமக்குண்டான தொடர்பினை உள்வாங்கிக் கொள்ளும் திறன் அவர்களிடம் உண்டு. எனவே, இச்செயற்பாட்டில் பங்குகொண்ட அநேகமானோர் இதன் எதிர்கால பயணப்பாதை தொடர்பில் எந்நேரமும் விழிப்புடன் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உத்தேச யோசனைகள்

1. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றி ஆணைக்குழு பரந்துபட்ட மக்கள் பங்கேற்பு இன்றியே இயங்கியது. சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளும்போது, பொது மக்களின் வகிபாகத்தில் அவதானிக்க முடியாத முனைப்பும் தீவிரமும் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக போன்றவர்களின் பிரசன்னத்தில் காணமுடிந்தது. நாம் எல்.எல்.ஆர்.சீ பற்றிய சொல்லாடலை மக்கள் மத்தியில் கொண்டுசென்றபோது, பொதுமக்களுக்கும் அரச பணியாளர்கள் உட்பட்ட பல்வேறு தரப்பினருக்கும் அதுபற்றிய புரிதல் இருக்கவில்லையென்பதைக் காணமுடிந்தது. எனவே, அரசாங்கம் தாமதித்தேனும் செய்ய வேண்டியது, ஏதாவதொரு கோணத்திலிருந்து ஆரம்பிப்பதேயாகும். அது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.
2. எல்.எல்.ஆர்.சீ யோசனைகள் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் அரசியல் தீர்மானமொன்றை (திடசங்கற்பம்) எடுக்க வேண்டும். புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவந்தபோது முன்னால் சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களிடம் அதற்கான தயார்நிலை இருந்தது. அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற இறுக்கமான நிலைப்பாட்டில் அவர் இருந்தார். அந்த தயார்நிலை அரசாங்கத்திடமும் இருக்க வேண்டும்.
3. ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் மற்றும் சிவில் அமைப்புக்களும் இந்த விடயத்தில் அரசாங்கத்தை சாடுவதைத் தவிர்த்து, தமது பொறுப்பினை நிறைவேற்ற வேண்டும். அரசியல் ரீதியாக பொதுமக்களை விழிப்பூட்ட வேண்டியது அரசியல் கட்சிகளினது மட்டுமன்றி சிவில் அமைப்புக்களினதும் பொறுப்பாகும். எல்.எல்.ஆர்.சீ யோசனைகள் தொடர்பாகக் குறைந்தபட்சம் தமது கட்சியைச்சார்ந்தவர்களையேனும் அல்லது சிவில் சமூகத்தினரையேனும் விழிப்பூட்ட இவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, அது தொடர்பில் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
4. மக்களை விழிப்பூட்டுவது தொடர்பில் ஊடகங்களும் தமது பொறுப்பினை நிறைவேற்றத் தவறியுள்ளன. இந்த முன்மொழிவுகளை பிரபல்யம் செய்வதையும் அத்துடன் அதையொட்டிய சொல்லாடலொன்றை கட்டியெழுப்புவதையும் ஊடகங்கள் துரித கதியில் நிறைவேற்ற வேண்டும்.
5. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட எல்.எல்.ஆர்.சீ செயற்பாட்டுத் திட்டம் இன்றளவிலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் வெளியிடப்படவில்லை. மேலும், 285 எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகளில் 133 பரிந்துரைகள் மட்டுமே செயற்பாட்டுத் ·திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதனை நடைமுறைப்படுத்தும் திகதியோ கால வரையரையோ திட்டவட்டமாக குறிப்பிடப்பட்ட போதும் அவை ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி மற்றும் அதன் நிறைவு தொடர்பாக திட்டவட்டமான திகதி எதுவும் இல்லை. எனவே, அரசாங்கம் அதற்கான கால எல்லையை திட்டவட்டமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் செயற்பாட்டுத் திட்டத்தையும் பொது மக்களின் கவனத்திற்கு உட்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. செயற்பாட்டுத் திட்டத்தில் வெளிப்படைத் தன்மை பேணப்படவில்லை. அநேகமான பொறுப்புக்கள் பாதுகாப்பு அமைச்சிடமும் ஏனைய அமைச்சுக்களிடமும் வழங்கும் வகையில் அது தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்நிலமை பெயரளவிலான செயற்பாடு மாத்திரமே. ஆகவே, இருக்க வேண்டியது, மீண்டும் ஒரு முரண்படு நிலை உருவாகாத விதத்தில் சகல இன மக்களினதும் உரிமைகள் உறுதிசெய்யும் வகையிலான அரசியலமைப்பை உருவாக்கும் முறையான ஒரு செயற்பாடு அவசியமாகும். அது தொடர்பில் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

7. இனங்களுக்கிடையிலான நல்லெண்ணத்தையும் சகவாழ்வையும் வளர்க்கத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகளில் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளபோதும் அரசாங்கம் அதை நடைமுறைப்படுத்துவதாகத் தெரியவில்லை. சகவாழ்வை ஏற்படுத்துவோமென சர்வதேச சமூகத்தினருக்கு உறுதியளிப்பதை மாத்திரம் செய்யாது வடக்கிலும் கிழக்கிலுமுள்ள கிராமங்கள், பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கிடையேயான சகவாழ்வினைக் கட்டியெழுப்புவதற்கான ஆக்கபூர்வமான வழிமுறையொன்றை கடைப்பிடிக்க வேண்டும்.

8. வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும்போது பல்வேறு நடவடிக்கைகளுக்கென கோடிக்கணக்கிலான பணம் ஒதுக்கப்படுகிறது. இருப்பினும், எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்படும் என்ற தெளிவான நிலைப்பாடு காணப்படவில்லை. எவ்வித செலவுமின்றி தற்போதைய கட்டமைப்பினுள் நடைமுறைப்படுத்தக் கூடிய பரிந்துரைகளும் இதில் காணப்படுகின்றன.

9. எல்.எல்.ஆர்.சீ யோசனைகள் தொடர்பான தீர்மானமெடுத்தல், கருத்து வெளியிடல் மற்றும் பொது மக்களுக்கு ஏதோவொரு வகையில் கருத்துக்களை வெளியிடுதல் போன்றவற்றை அரசாங்கத்திலுள்ள இனவாத குழுக்களிடம் ஒப்படைக்க அரசாங்கம் சூசகமாக செயற்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. அது தொடர்பில் மக்கள் எதிர்மறையான உளப்பாங்கினைக் கொண்டுள்ளனர். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

10. புதிய அரசியல் தீர்வு யோசனையாகிய தீர்வுப் பொதியை முன்வைத்த சந்தர்ப்பத்தில் சந்திரிக்கா அவர்களின் அரசாங்கம் தமது பொறுப்பாக சமாதான யாத்திரை, புத்தகமும் செங்கல்லும், வெண்தாமரை போன்ற பொது மக்களை அணிதிரட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இருப்பினும் இந்த அரசாங்கம் அதனை தமது பொறுப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை.

மூன்று தசாப்த கால யுத்தத்தின் பின்னர் மீண்டும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதிருப்பதற்கான முன்மொழிவுகளைக் கொண்டுள்ள எல்.எல்.ஆர்.சீ பரிந்துரைகள் தொடர்பான சொல்லாடலை புதியதோர் அரசியமைப்பின் உருவாக்கச் செயற்பாடு வரை விரிவுபடுத்த வேண்டும். இது இறுதியான இலக்காக அமையாவிடின் உள்ள பிரச்சனைகள் அவ்வாறே இருப்பது மாத்திரமின்றி ஏற்பட்டுள்ள அழிவுகளை விஞ்சும் பயங்ர நிலைமை எதிர்காலத்தில் ஏற்படுவதைத் தடுக்கவும் முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Photo source : www.vikalpa.org

# இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் என்பவற்றுக்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கடிதம்.

இலங்கை தொடர்பாகப் பயனளிக்கும் செயற்பாடுகளுக்கு உந்துதலளிக்கும் மிகப் பலம்பொருந்திய ஒரு பிரேரணையே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடருக்கு சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையாகும்.

இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம், மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் கடப்பாடு ஆகிய விடயங்கள் தொடர்பாக மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையினையும் மிஞ்சிய ஒரு பிரேரணையினை சமர்ப்பிக்குமாறு இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் கடமை-புரியும், தற்போதைய நிலைமை தொடர்பில் கவனஞ் செலுத்துகின்ற கத்தோலிக்க மதகுருமார்கள் சார்பில் விடுக்கப்படும் வேண்டுகோளாகும். மனித உரிமைகள் தொடர்பான ஆணையாளரினால் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட தனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு 19 ஆவது கூட்டத் தொடரில் மிகவும் நலிவடைந்த பிரேரணையொன்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்எல்ஆர்சீ ஆணைக்குழுவின் பிரதான பரிந்துரையான இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்குதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், ஆட்கள் காணாமற் போதலைப் பற்றிக் கண்டறிவதற்கு ஆணையாளர் ஒருவரை நியமித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல், இராணுவப் படையினரால் சட்ட விரோதமாகவும் பலாத்காரமாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள காணிகளை மீளப் பெற்றுக் கொடுத்தல், ஊடக அடக்குமுறை, காணாமற் போனவர்களையும் மரணித்தவர்களையும் நினைவுகூர்தல், தேசிய மொழிகளை உபயோகித்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் காட்டப்படுகின்ற அசமந்தப் போக்குகளையும் மீறல்களையும் நாம் கண்கூடாகப் பார்த்துள்ளோம்.**

அங்கீகரிக்கப்படினும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான எந்தவொரு அரசியல் தேவைப்பாடுகளும் இல்லையென்பதனையே எம்மால் காண முடிகின்றது. மோதல்களின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றுள்ள சர்வதேசச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பான விசாரணைகளை நடாத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை மற்றும் குறித்த 8 விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகளின் நிபுணர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு பல வருடங்களாக விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் போன்ற ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கும் பதில் வழங்காமை என்பனவே அவையாகும்.

அவ்வாறே எல்எல்ஆர்சீ ஆணைக்குழுவின் பிரதான பரிந்துரையான இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்குதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், ஆட்கள் காணாமற் போதலைப் பற்றிக் கண்டறிவதற்கு ஆணையாளர் ஒருவரை நியமித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல், இராணுவப் படையினரால் சட்ட விரோதமாகவும் பலாத்காரமாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள காணிகளை மீளப் பெற்றுக் கொடுத்தல், ஊடக அடக்குமுறை, காணாமற் போனவர்களையும் மரணித்தவர்களையும் நினைவுகூர்தல், தேசிய மொழிகளை உபயோகித்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் காட்டப்படுகின்ற அசமந்தப் போக்குகளையும் மீறல்களையும் நாம் கண்கூடாகப் பார்த்துள்ளோம். கடந்த ஆண்டில் அரசாங்கத்தை விமர்சித்தல், அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைதியான முறையில் சவால் விடுத்தல், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துடன் பணியாற்றுதல் ஆகியன காரணமாக அரசாங்கத்தின் அமைச்சர்களினாலும் அதிகாரிகளினாலும் ஆயுதப்படைகள் மற்றும் பொலீசாரினாலும் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள், கைது செய்தல், துன்புறுத்துதல்கள், பயமுறுத்துதல்கள், அசட்டை செய்தல், மிரட்டுதல் என்பவற்றுக்கு ஆளாக நேரிட்டன. பாதிக்கப்பட்ட ஒரு சிலரைப் போன்றே மதகுருமாரான எமது சில சகோதர சகோதரிகளும் கூட அவ்வாறான பழிவாங்கல்களுக்குப் பயந்து இக் கடிதத்தில் ஒப்பமிடாது தவிர்த்துக் கொண்டனர்.

எமது ஊகத்தின்படி, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையினரான தமிழ் மக்களைக் காணாமற் போகச் செய்தல் மற்றும் கொலை செய்தல் மட்டுமல்ல தமிழ் மக்களை, சமூகத்தை, மொழியை, கலாசாரத்தை, மதத்தை, பூமியை அழுத்தத்திற்குட்படுத்துகின்ற செயற்பாடுகளானது எம்மை முற்றுமுழுதாகவோ பகுதியளவிலோ அழித்தொழிப்பதை நோக்கமாகக் கொண்டு யுத்தத்திற்கு முன்னரும், யுத்தத்தின் பின்னரும் நன்றாகத் திட்டமிடப்பட்ட முறையில் நடைபெறுகின்றன. ஆகவே இவ் இறுதிச் சந்தர்ப்பத்திலாவது இது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கடுமையான ஒரு தலையீடு வலுக்கட்டாயமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின்பின் இவ்வாறான துன்புறுத்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்ற விதத்தினை நோக்கும்போது மக்கள் என்ற ரீதியில் எமது அடையாளம் மிகக் குறுகிய காலத்திற்குள் இல்லாதொழிந்து விடும் என்று நாம் அஞ்சுகின்றோம். ஆகவே, உள்ளக சுயநிர்ணயத்திற்காக தமிழ் மக்களுக்கு உள்ள உரிமையை ஏற்றுக்கொள்கின்ற அரசியல் தீர்வொன்றை நோக்கிச் செல்லல் அவசர தேவையொன்றாகும்.

மையப்படுத்தப்பட்ட எமது கவனம் யாதெனில் தமிழ் மக்கள் விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதுடன் சமீப காலமாக முஸ்லீம்களுக்கு எதிராக நடைபெறும் தாக்குதல்கள், நவம்பர் மாதத்தில் 27 சிங்கள சிறைக் கைதிகளைக் கொலை செய்தல், கொடுமைப்படுத்தி கொலை செய்யப்பட்ட நபர்களினது எனச் சந்தேகிக்கப்படும் மாத்தளையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளின் பகுதிகள் என்பன தொடர்பாகப் போதியளவு விசாரணைகள் மேற்கொள்ளப்படாமை, ஊடகவியலாளர்களுக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் மற்றும் அரசாங்கத்தை விமர்சிக்கும் மதத் தலைவர்களுக்கும் எதிராகப் பயமுறுத்தல்கள், தாக்குதல்கள் என்பன மூலம் பிரதிபலிக்கின்றவாறு முழு இலங்கையிலும் விருத்தியடைந்து செல்கின்ற சர்வாதிகாரப் போக்கு பற்றியும் நாம் ஆழமாகக் கவனஞ் செலுத்தியுள்ளோம். பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும், நியாயத்திற்காகப் போராடுபவர்களுக்கும் நாம் எமது ஆதரவை வெளிப்படுத்துகின்றோம். நீதிமன்ற உத்தரவை மீறியும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு மாற்றமாகவும் கடந்த தினங்களில் பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணை, சட்டத்தரணிகளுக்கும் நீதிபதிகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் பயமுறுத்தல்களும், பொலீசாரினதும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் செயலிழப்பு போன்ற நிகழ்வுகள் மூலம் (அவை தொடர்பான நம்பிக்கையுடன் நாம் அவ்வாறான சில நிறுவனங்களுடன் செயலாற்றினாலும்) மீண்டும் மீண்டும் உள்ளக செயற்பாடுகளினால் மாத்திரம் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான பிரயோக ரீதியான எதுவுமில்லை என்பதே நீண்டகாலமாக எமக்குள் நிலவிய சிந்தனையாகும்.

மன்னார் ஆயர் அவர்கள் 2012 ஆகஸ்ட் மாதம் சனாதிபதிக்கு அனுப்பிய கடிதமும் 2013 ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாண மறைமாவட்ட நியாயம் மற்றும் சமாதானத்திற்கான ஆணைக்குழுவினால் கத்தோலிக்க ஆயர்களின் சம்மேளனத்திற்கு அனுப்பப்பட்ட கடிதமும், எமது கவனத்தை ஈர்த்துள்ள விடயங்கள் தொடர்பாக விளக்கமளிப்பதற்கும் உள்ளக ரீதியாகப் பல தடவைகள் நாம் மேற்கொண்ட பயனற்ற முயற்சிகள் தொடர்பான உதாரணத்திற்காகவுமே இணைக்கப்பட்டுள்ளன.

இப்பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணம் யாதெனில்

> **மையப்படுத்தப்பட்ட எமது கவனம் யாதெனில் தமிழ் மக்கள் விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதுடன் சமீப காலமாக முஸ்லீம்களுக்கு எதிராக நடைபெறும் தாக்குதல்கள், நவம்பர் மாதத்தில் 27 சிங்கள சிறைக் கைதிகளைக் கொலை செய்தல், கொடுமைப்படுத்தி கொலை செய்யப்பட்ட நபர்களினது எனச் சந்தேகிக்கப்படும் மாத்தளையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளின் பகுதிகள் என்பன தொடர்பாகப் போதியளவு விசாரணைகள் மேற்கொள்ளப்படாமை, ஊடகவியலாளர்களுக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் மற்றும் அரசாங்கத்தை விமர்சிக்கும் மதத் தலைவர்களுக்கும் எதிராகப் பயமுறுத்தல்கள், தாக்குதல்கள் என்பன மூலம் பிரதிபலிக்கின்றவாறு முழு இலங்கையிலும் விருத்தியடைந்து செல்கின்ற சர்வாதிகாரப் போக்கு பற்றியும் நாம் ஆழமாகக் கவனஞ் செலுத்தியுள்ளோம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைத் தீர்த்து வைக்கும் ஆற்றல் இல்லை என்பதைவிட அதற்கான அரசியல் தீர்வு வழங்குவதற்கான தேவை இல்லாமையே நாம் அறிந்து வைத்துள்ள விடயமாகும். ஆகவே எமது உறுதியான அறிவிற்கேற்ப ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் வழங்கப்படும் பயிற்றுவித்தல், அறிவுரைகள், நிதி மற்றும் பொருள் ரீதியிலான உதவிகள் போன்ற தொழிநுட்ப உதவிகள் போதுமானதல்ல. அது மட்டுமல்ல அதனோடிணைந்த மிகவும் சுதந்திரமாக விசாரணைகளை மேற்கொள்ளுதலும் அறிக்கையிடல் வகிபாகமும் நடைபெறாவிடின் அது பாரதூரமான முறையில் திசை திருப்புதலாக அமையும்.

ஆகவே கீழ் காட்டப்படுகின்றவாறு பயனுள்ள செயற்பாடுகளுக்கு வழிவகுக்கும் பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1. கடந்த பிரேரணை தொடக்கம் இதுவரையில் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் போன்ற துறைகளில் எதுவித முனேற்றமும் நிகழாமை, சிறுபான்மையினருக்கும் எதிர்கருத்துடையவர்களுக்கும் எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்கு முறையும் அழுத்தங்களும், கடந்த காலங்களில் நடைமுறையற்ற மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க அரசாங்கம் காட்டும் அசமந்தப் போக்கு என்பவற்றைக் கவனத்திற் கொண்டு,
2. யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் அனைத்து தரப்பினர்களாலும் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக சாட்சியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான உரிய பொறிமுறையுடன் கூடிய ஆணைக்குழுவொன்றை ஏற்படுத்துதலும் ஐக்கிய நாடுகளின் செயலாளரினால் நியமிக்கப்படும் விசேட நிபுணத்துவ குழுவின் அறிக்கையின் முடிவுகளுக்கும் பரிந்துரைகளுக்கும் உரிய வியாக்கியாணத்தை உள்ளடக்குதல்.
3. கடந்த காலங்களில் இடம்பெற்ற மற்றும் தற்போதும் நடைபெற்று வருகின்ற மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கும் எதிர்கால நல்லிணக்க செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளின்போது இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கும் உதவுவதற்கும் விரிவான அதிகாரமுடைய விசேட பிரதிநிதி ஒருவரை இலங்கைக்காக நியமித்தல்.
4. விசாரணை விஜயங்களுக்கு வழிவிடுமாறு இதற்கு முன்பு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமலிருப்பதனை கருத்திற்கொண்டு ஐக்கிய நாடுகளின் விசேட ஒழுங்குவிதிகளுக்கேற்ப அவ்வந்த விடயங்களின்கீழ் விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்படும் விசேட குழுவில் உள்ளடக்கப்படும் நபர்களைத் தெரிவு செய்தல்.
5. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உள்ளக சுய மதிப்பீட்டின் மூலமும் அடையாளங் காணப்பட்டவாறு இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு குறித்த ஐக்கிய நாடுகளின் பிரகடனத்திற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளத் தவறிய ஐக்கிய நாடுகளின் உத்தியோகத்தர்கள் தொடர்பில் வகைப் பொறுப்புக் கூறலுக்கு கட்டுப்படுதலுக்கான பொறிமுறையொன்றைத் தயாரித்தல்.
6. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடருக்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை வெகுவாக வரவேற்பதுடன் அவரது பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் விதம் பற்றி 25 ஆவது கூட்டத் தொடரின் போது தனது கண்காணிப்புக்களை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

உங்கள் உண்மையுள்ள,

மன்னார் ஆயர் உட்பட வடக்கு மற்றும் கிழக்கின் பல்வேறு நிலையங்களுக்குச் சொந்தமான கிறிஸ்தவ மதகுருமார் 132 பேர் இதில் கையொப்பமிட்டுள்ளனர்.

அனுசரணை விகல்ப இணையத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Photo source : www.shaheedoniran.org

# ஜெனீவா 2012 லிருந்து 2013 வரை

சம்பத் புஷ்குமார

கடந்த சில வாரங்களாக நாம் பார்த்துக் கொண்டிருந்த ஹலால் எதிர்ப்புக் கேலிக்கூத்தானது மத்தளை சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட கொண்டாட்டங்களுடன் இவ் வாரத்தில் மங்கிப் போயின. எவ்வாறாயினும் இவ் வாரத்தின் துவக்கத்திலேயே வவுனியா நகரை மையப்படுத்தி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டமொன்றின் மூலம் இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைகள் பேரவைக்கு அமெரிக்காவின் தலைமையிலான நாடுகளினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையை உடனடியாக வாபஸ் பெறுமாறு வேண்டப்பட்டது.

இந்த வேளை தென் இந்தியாவில் தமிழ் நாட்டில் பௌத்த பிக்கு ஒருவரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக ஊடகங்களின் கவனம் அதன்மீது திசை திருப்பப்பட்டதுடன் குறித்த பிரேரணையின் உள்ளடக்கம் பற்றி இலங்கை ஊடகங்களில் பெரிதாகப் பேசப்படவில்லை.

இதற்கு முன்னரும் சென்ற ஆண்டு மார்ச் மாதம் இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையொன்று அங்கீகரிக்கப்பட்டதுடன் யுத்தத்தின் பின் நியமிக்கப்பட்ட கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் அறிக்கைக்கு ஏற்ப அதன் பரிந்துரைகளை உரியவாறு நடைமுறைப்படுத்துமாறு பிரதானமாக இலங்கை அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில் நகரந்தோறும் அப்பிரேரணைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாயிருந்தது. அப் பிரேரணையின் உள்ளடக்கம் யாது? நாடு என்ற வகையில் எவ்வாறு நாம் அதை எதிர்கொள்வது? என்பது பற்றி ஆராய்வதற்கே நாம் எமது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

இலங்கை தொடர்பாக கடந்த ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையில் பிரதானமாக மூன்று விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. அவையாவன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதும்,

- அப் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழிநுட்ப உதவிகளையும் நிதியுதவிகளையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைகள் பேரவையிடம் பெற்றுக்கொள்ள முடியுமென்பதும்,

- இப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கு வாய்ப்பு வழங்கப்படல் வேண்டுமென்பதுமாகும்.

எவ்வாறாயினும் இப் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னரும் இலங்கையில் தொடர்ந்து நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் சர்வதேச அரங்கில் முக்கியமாகப் பேசப்பட்டன. குறிப்பாகக் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின்போது இலங்கை மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பருவ கால மீளாய்வை எதிர்கொள்ள வேண்டியிருந்ததுடன் அதன்போது காணாமற் போதல், துன்புறுத்தல், தடுத்து வைத்தல், ஊடக அடக்குமுறை மற்றும் நீதிமன்றத்தின் சுதந்திரத்தின் மீது விடுக்கப்படும் பயமுறுத்தல்கள் என்பன தொடர்பாக மிகுந்த கவனஞ் செலுத்தப்பட்டதுடன் உலகின் பல நாடுகளினால் வினவப்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்கிய சந்தர்ப்பத்தில் இலங்கையின் அரச அதிகாரிகள் குழு பலத்த சங்கடங்களுக்கு ஆளாக நேர்ந்ததை எம்மால் அவதானிக்க முடிந்தது.

கடந்த ஒக்டோபர் மாதம் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பருவ கால மீளாய்வுக் கூட்டத் தொடரில் காணக் கிடைத்த ஒரு விசேட நிகழ்வாக ஐக்கிய நாடுகளின் பிரதான கேட்போர் கூடத்திற்கு முன்னால் இலங்கை அரசாங்கத்தினால் இலங்கையின் ஆச்சரியத்தை எடுத்துக் காட்டும் பாரிய புகைப்படக் கண்காட்சியொன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருந்ததைக் குறிப்பிடலாம். கூட்டத்தில் பங்கேற்க வரும் அனைவரும் அக் கண்காட்சியைக் கடந்து வரவேண்டியிருந்தது.

எவ்வாறாயினும் கூட்டத்தொடரின் போது பல நாடுகள் இலங்கை தொடர்பில் எழுப்பிய கேள்விகள் பற்றி கருத்திற்கொள்ளும் போது இறுதியில் இலங்கை தொடர்பாக வழங்கப்பட்ட 220 பரிந்துரைகளை நோக்கும் போதும் இக் கண்காட்சியானது எவ்வளவு தூரம் தாக்கம் விளைவித்தது என்பதில் சந்தேகங்கள் உருவாகின்றன.

2013 ஆம் ஆண்டின் பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் நடாத்தப்படுகின்ற மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரில் மீண்டுமொரு முறை அமெரிக்கா தலைமையிலான 32 நாடுகளினால் இலங்கை தொடர்பான பிரேரணையொன்று கொண்டு வரப்பட்டுள்ளதுடன் மார்ச் மாதம் 21 ஆந் திகதி ஜெனீவா நேரப்படி முற்பகல் 10 மணிக்கு விவாதமொன்று நடாத்தப்பட்டு வாக்கெடுப்பு நடாத்தப்படும்.

இலங்கையில் வகைப் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தல் ஆகிய தலைப்புக்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இப் பிரேரணையின் உள்ளடக்கம் பின்வருமாறு:

- சகல விதமான மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரம் என்பவற்றை அனுபவிப்பதற்கு அனைத்து மக்களுக்கும் உள்ள உரிமையினை உறுதிப்படுத்தல் அனைத்து நாடுகளினதும் பொறுப்பாகும்.

- பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் போது மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடாயினும் நாடு என்ற ரீதியில் அவர்களது பொறுப்பாகக் காட்டப்படுகின்ற சர்வதேச சட்டத்தின்கீழ் விசேடமாக சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச அகதிகள் சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டம் என்பவற்றுக்கு ஏற்ப பணியாற்ற வேண்டும் என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கை அரசாங்கம் வட மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலை 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடாத்துவதாகக் கூறிய கூற்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
- இலங்கை அரசாங்கம் உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டியெழுப்புதல், கண்ணிவெடிகளை அகற்றுதல், உள்நாட்டில் அகதிகளாக்கப்பட்ட பெரும்பாலானவர்களை மீளக் குடியமர்த்தல் என்பன தொடர்பாகப் பெறப்பட்டுள்ள முன்னேற்றத்தை ஏற்றுக்கொண்டு நீதியை நிலைநாட்டல், நல்லிணக்கம் மற்றும் வாழ்வாதாரத்துக்கான தொழிலை மீள ஆரம்பித்தல் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய குறிப்பிடத்தக்க அளவு பணி-கள் மேலும் நிலவுகிறது என மேலும் தெரிவிக்கப்படுகிறது.
- இச் செயன்முறையின்போது சிவில் சமூகம் சிறுபான்மையினப் பிரதிநிதிகள் என்பவர்களை உள்ளடக்கிய பிரதேச மக்களின் பூரண ஒத்துழைப்பு மிக அவசியமென இங்கு வலியுறுத்தப்படுகிறது.
- இலங்கை அரசாங்கத்தின் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய அறிக்கையும் அதன் கண்டுபிடிப்புக்களும் மற்றும் பரிந்துரைகளும் தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படுவதுடன் இலங்கையின் தேசிய நல்லிணக்கம் தொடர்பான செயன்முறைக்கு இதன்மூலம் கிடைக்கக் கூடிய பங்களிப்பினை ஏற்றுக் கொள்கிறது.

  இலங்கை அரசாங்கத்தின் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாகவும் ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு விடைகளாகக் குறிப்பிடப்பட்ட அரசாங்கத்தின் தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்தப்படுகிறது.
- தேசிய செயற்பாட்டுத் திட்டமானது கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் அனைத்து கண்டுபிடிப்புக்களுக்கும் சாதகமான அனைத்து பரிந்துரைகளும் உரியவாறு பதிலளிக்கத் தவறியுள்ளதாக அவதானிக்கப்படுகிறது.
- கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ள சாதகமான பரிந்துரைகளாக நீதிமன்றச் செயற்பாடுகளுக்குப் புறம்பாக நிகழ்ந்ததாகக் கூறப்படும் கொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும், பலவந்தமாக காணமற் போ-தல் தொடர்பாகவும் நம்பிக்கையூட்டும் விசாரணையொன்று இலங்கையின் வடமாகாணத்தை இராணுவமயப்படுத்தலிலிருந்து விடுவித்தல், காணிப் பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பாக பக்கசார்பற்ற பொறிமுறையொன்றைத் தயாரித்தல், தடுத்து வைத்தல் கொள்கைகளை ஆய்வு செய்தல், சுதந்திரமான சிவில் நிறுவனங்களை மீண்டும் வலுவடையச் செய்தல், மாகாணங்களுக்கு அரசியல் அதிகாரத்தை வழங்குவதற்கான அரசியல் தீர்வை நோக்கிச் செல்லல், வெளியீட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் - மேம்படுத்தல் மற்றும் நீதிநிர்வாகத்தை ஏற்படுத்துதல் என்பனவற்றை மீண்டும் சுட்டிக் காட்டலாம்.
- கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய அறிக்கை மற்றும் அது தொடர்பான தேசிய செயற்பாட்டுத் திட்டம் என்பன தொடர்பாக மிகவும் வலியுறுத்திக் கூறப்படுவது போதியளவு சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் என்பன மீறப்படல் தொடர்பாக பேசப்படவில்லையென்பதாகும்.
- தொடர்ந்தும் தடையின்றி இலங்கையில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் மீறல்கள் அதாவது பலாத்காரமாக காணாமற் போகச் செய்தல், நீதிமன்ற செயற்பாடுகளுக்குப் புறம்பாக நிகழ்த்தப்படும் கொலைகள், துன்புறுத்தல்கள், வெளியீட்டு உரிமைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் உரிமை மீறல்கள், பேசுவதற்கும் அமைதியான முறையில் கூட்டம் கூட்டுவதற்குமுள்ள உரிமைக்கு எதிராக நடைபெறும் மீறல்கள், ஊடகவியலாளர்களுக்கு - சிவில் சமூக உறுப்பினர்களுக்கு - மனித உரிமைகளைப் பாதுகாப்பவர்களுக்கு எதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படும் பழிவாங்கல்கள், அச்சுறுத்தல்கள், நீதிமன்ற சுதந்திரத்திற்கும் நீதிக்கான அணுகுமுறைக்குமுள்ள பயமுறுத்தல்கள் மற்றும் மதம் அல்லது சாதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பாராபட்சம் காட்டுதல் என்பன தொடர்பான அறிக்கைகள் பற்றி கவனஞ்செலுத்தப்படும்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் என்பவற்றை மீறியமை தொடர்பாகவுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆணையாளர் அலுவலகமானது சுதந்திரமானதும் நம்பிக்கையானதுமான சர்வதேச விசாரணையொன்றைக் கோருவது தொடர்பில் கவனஞ் செலுத்துவதனூடாக,

1. இலங்கையின் நல்லிணக்கமும் வகைப் பொறுப்புக் கூறலும் செயன்முறையின் மேம்பாடு தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பற்றிய ஆணையாளர் அலுவலகம் இலங்கை அரசுக்குத் தொழிநுட்ப உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையினை ஏற்றுக்கொள்வதுடன் அதில் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகளும் பிரமாணங்களும் விசேடமாக உண்மையை ஆராயும் பொறிமுறையொன்றின் நியாயமான செயற்பாட்டுக்கான உள்ளக ரீதியான ஒரு முன்னேற்றமென சுட்டிக்காட்டப்படுகிறது.
2. இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பான ஆணையாளர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். அவ்வாறே சர்வதேச மனிதாபிமான சட்டம் என்பவற்றை மீறல் தொடர்பாகவுள்ள குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்திடம் சுதந்திரமானதும் நம்பிக்கையானதுமான விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் சாதகமான பரிந்துரைகளைப் பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் அனைத்து இலங்கையர்களுக்கும் நீதி, நியாயம், வகை பொறுப்புக் கூறல் என்பவற்றை உறுதி செய்தலுடன் தொடர்பான சட்ட ரீதியான பொறுப்பினை நிறைவு செய்துகொள்வதற்குத் தேவையான சுதந்திரமானதும் நம்பிக்கையானதுமான செயற்பாட்டுக்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென மீண்டும் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
4. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விசேட செயல் ஒழுங்கு விதிகளின் கீழ் பணியாற்றும் விசேட பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பாக இலங்கை அரசாங்கம், ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்பதுடன் அவர்கள் இங்கு வருவதற்கு அழைப்பு விடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் பிரவேசத்துக்கான வாய்ப்பினை வழங்குதல் வேண்டும்.
5. மேலே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும் தொழிநுட்ப உதவிகளையும் இலங்கை அரசாங்கத்தின் உடன்பாட்டிற்கமைய வழங்குவதற்கு ஆணையாளர் அலுவலகமும் அதன் விசேட பிரதிநிதியும் இதன்மூலம் ஆர்வமூட்டப்படுவர்.
6. இப் பிரேரணை தொடர்பாகவும் அதன் முன்னேற்றம் தொடர்பாகவும் வாய்மொழிமூல இற்றைப்படுத்தப்பட்ட சமர்ப்பித்தலொன்றை 24 ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்குமாறும் பேச்சுவார்த்தைகளைப் பின்பற்றி விபரமான அறிக்கையொன்றை 25 ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் ஆணையாளர் அலுவலகம் குறித்த விசேட பிரதிநிதியிடம் வேண்டிக் கொள்ளப்படுகிறது.

அனுசரணை ராவய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மற்றைய மனிதரின் விருப்பமின்றி அவனை நிர்வகிப்பதற்கு
எந்தவொரு மனிதனுக்கும் தகுதி கிடையாது.

**ஒப்ரஹம் லிங்கன்**

ISSN 95[illegible]-1800-0061

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org